வெளியீடு 18-01-2006 Issued 18-01-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, செப்டம்பர் 29, 2005–தொகுதி 86–எண் 2

Thursday the 29th September, 2005 –Volume 86–No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V2ll, 31 P05
P05. 862
186284.

571
21-2-06

**29-9-2005**

**உள்ளடக்கம்**

பக்கங்கள்

1. **தகவல் கோரல்—**

*உரிமை மீறல் பிரச்சினைகளுக்கு அனுமதி மறுப்பு* 203-207

2. **கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2005-2006—**

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்* 207-247

3. **அறிவிப்பு—**

*தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2005 (ஆஇ)* 247

4. **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

*தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2005* 248

5. **அரசினர் தீர்மானம்—**

*விதிகள் 30, 130 மற்றும் 132–ஐத் தளர்த்தல்* 248-249

6. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

*(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2005* 249-251

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்* 249-250

பக்கங்கள்

6. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** *தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 251-259

திரு. வி.கே. லட்சுமணன் — 251

திரு. சி. ஞானசேகரன் — 251,252-257

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 252,253-254, 257,259

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2005 — 259-270

திரு. வி.கே. லட்சுமணன் — 259-261

திரு. எச்.எம். ராஜு — 260

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் — 260,263, 265-268,270

திரு. எ.வ. வேலு — 261-263

திரு. தி. வேல் முருகன் — 264-265

(ஈ) தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005 — 271-276

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் — 271,273-274, 275

திரு. சி. ஞானசேகரன் — 271-273

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005
(ஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 276-280

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 276,278,280

திரு. அ.இரா. மலையப்பசாமி — 277



பக்கங்கள்

6. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** *தொடர்ச்சி*

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005
(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005
(ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 280-316

திரு. வி.கே. லட்சுமணன் — 282

திரு. இ. புகழேந்தி — 290-293

திரு. கு. பிச்சாண்டி — 293

திரு. ஐ. கணேசன் — 294-295

* திரு. கு. ஜெயக்குமார் — 295-298

திரு. லா. சந்தானம் — 298,300-301, 302,303

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 299-300

* மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி — 302-303

திரு. தி. வேல் முருகன் — 303-304

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 304

7. **அரசினர் தீர்மானம்—**

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் — 316-317

8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 317-319

D. 4/211, 31 PDS
P35. 86. 2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
186284
600 008

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## புரட்டாசி 13, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 செப்டம்பர் 29, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

> *"ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்*
> *செல்வார்க்குச் செல்லாதது இல்"*

*செய்யக்கூடிய செயலைக் குறித்து, ஒருவர் அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்து, அவற்றிலே தம் முழு கவனத்தையும் செலுத்தி, மேற்கொண்டு, முயலுபவருக்கு முடியாதது என்று ஒன்றுமில்லை.*

[***குறிப்பு***: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

### 1. தகவல் கோரல்

**உரிமை மீறல் பிரச்சினைகளுக்கு அனுமதி மறுப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2005–2006 ஆம் ஆண்டின் (குறுக்கீடு)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. *(குறுக்கீடு)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், ஹேமச்சந்திரன், (குறுக்கீடு) ஹேமச்சந்திரன், தாங்கள் மூத்த உறுப்பினர், பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு அதற்கு மேற்கொண்டு பேசுவதற்கு; விவாதத்திற்கு இடம் இல்லை என்பது தங்களுக்குத்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 29

தெரியும். ஆகவே (குறுக்கீடுகள்) தாங்கள் பேரவை விதிகளுக்குக் கொஞ்சம் கட்டுப்பட்டு நடந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு மூத்த உறுப்பினர். (குறுக்கீடுகள்) அதற்குரிய பதில் உங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

*2005–2006 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.*

*(திரு. பரிதி இளம்வழுதி, டாக்டர் க. பொன்முடி, திரு. ஜெ. அன்பழகன், திரு. கே.சி. கருணாகரன், திரு. சி. ஞானசேகரன், திரு. என். நன்மாறன் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் அமைதி காக்கவும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், ஹேமச்சந்திரன், கருணாகரன், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பரிதி உட்காருங்கள், பரிதி இளம்வழுதி உட்காருங்கள். எல்லோருக்கும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோருக்கும் சொல்லிவிடுகிறேன். பரிதி இளம்வழுதி, பொன்முடி, ஏ.வ. வேலு ஆகியோர் எல்லோரும் சேர்ந்து ஓர் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்து இருக்கிறார்கள். அதற்கான தீர்ப்பு நேற்றே அனுப்பப்பட்டுவிட்டது. பேரவைத் தலைவரினுடைய தீர்ப்பிற்குப் பிறகு அதிலே விவாதத்திற்கு இடமில்லை. அதே நிலைமைதான் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்கும். அவரும் ஓர் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்து இருக்கிறார். பேரவைத் தலைவரினுடைய தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. இனிமேல் அதிலே விவாதத்திற்கு இடம் கிடையாது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) *(கூச்சல்–குழப்பம்)*

'*224*–வது விதி, பேரவைத் தலைவர் இசைவினை மறுத்தாலும் அல்லது அவையின் கவனத்தை ஈர்க்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதினாலும், அறிவிப்பு அளித்த உறுப்பினருக்கு



2005 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

அத்தகவலை அளிப்பின், அதன் பிறகு அப்பொருள் குறித்து எவ்வகையிலும் பேரவையில் எழுப்பக் கூடாது.' இதுதான் விதிமுறை. (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் சிலர் கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) அவர்தான் தீர்ப்பை வழங்கிவிட்டார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து விதிகளைப் புரிந்து நடந்துகொள்ளுங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பை வழங்கிய பிறகு திரு. ஹேமச்சந்திரன் பேசுவது அவை விதியை மீறியதாகும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. நான் அனுமதி மறுத்ததற்குப் பிறகு, அதுகுறித்துப் பேரவையிலே பேசக்கூடிய எந்தப் பேச்சும் அவைக் குறிப்பிலே ஏறாது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இருங்கள். அதுதான் சொல்லிவிட்டார் இல்லையா? தீர்ப்பு வழங்கி விட்டார் இல்லையா? (குறுக்கீடுகள்) தீர்ப்பு வழங்கி விட்டார் *(கூச்சல்-குழப்பம்)* *(மணியடிக்கப்பெற்றது.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் சிலர் கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு அதற்கு மேலே விவாதத்திற்கு இடமில்லை. இதுதான் பேரவை விதி. தயவுசெய்து விதிகளுக்குப் புறம்பாக நடக்காதீர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாங்கள் விளக்கம் கேட்கக் கூடாதா?

[2005 செப்டம்பர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், ஹேமச்சந்திரன் (குறுக்கீடுகள்) ஹேமச்சந்திரன் நீங்கள் மூத்த உறுப்பினர். பேரவைத் தலைவர் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு விவாதத்திற்கு இடமில்லை என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். விதிமுறைகளைத் தயவுசெய்து புரிந்துகொண்டு நடந்துகொள்ளுங்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*(திரு. பரிதி இளம்வழுதி, டாக்டர் க. பொன்முடி, திரு. ஜெ. அன்பழகன் ஆகியோர் நின்றுகொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)*

தொடர்ந்து பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால் அவையைவிட்டு வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். நான் எச்சரிக்கிறேன். தயவுசெய்து உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) தொடர்ந்து அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால், முறைகேடாகப் பேசினால்-பரிதி இளம்வழுதி, பொன்முடி, நேற்றே உங்களை அனுமதித்ததே தவறு. என்னுடைய பெருந்தன்மையின் காரணமாக உங்களை உள்ளே அனுமதித்தேன், உங்களையும் பொன்முடியையும், ஜெ. அன்பழகன் போன்றவர்களையும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இங்கே குறிப்பிடுகிறேன்; பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிற உறுப்பினர்களை பேரவையை விட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

*(திரு. பரிதி இளம்வழுதி அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)*

*முற்பகல் 10-05*

ஹேமச்சந்திரன், தாங்கள் பேரவைத் தலைவருடைய தீர்ப்புக்குக் கட்டுப்பட மறுத்தால் தாராளமாக வெளிநடப்புச் செய்யலாம். (குறுக்கீடுகள்) தாராளமாக வெளிநடப்புச் செய்யலாம். அவையை விட்டு வெளியேற்ற வேண்டிய நிலைமையை உருவாக்காதீர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிற பொன்முடியை அவையை விட்டு அகற்ற வேண்டுமென்று பேரவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

*(டாக்டர் க. பொன்முடி அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)*



2005 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

*(உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)*

*(உறுப்பினர் திரு. கே. மகேந்திரன் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தார்.)*

திரு. மகேந்திரன் (குறுக்கீடுகள்) மகேந்திரன், இதுபோல அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) இது ஒன்றும் gate meeting அல்ல. தயவுசெய்து அவையை விட்டு வெளியேறுங்கள். (குறுக்கீடு) (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலுரையைத் தொடங்குங்கள். (குறுக்கீடுகள்)

*(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*(உறுப்பினர் திரு. கே. மகேந்திரன் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)*

*(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

## 2. கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2005-2006

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23-09-2005 அன்று 2005-2006 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டன. 26-09-2005 முதல் 28-09-2005 வரை 3 தினங்களாக இத்துணை மதிப்பீடுகள் குறித்து விவாதிக்கப்பட்டன. இத்துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் அரிய கருத்துகளைக் கூறியுள்ளார்கள். இக்கருத்துகளின் பேரில் என் பதிலுரையை இப்போது அளிக்க விரும்புகின்றேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(உறுப்பினர்கள் திருமதி வி. சிவகாமி மற்றும் திரு. க. முருகவேல் ராஜன் ஆகியோரைத் தவிர பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

[திரு. சி. பொன்னையன்] [2005 செப்டம்பர் 29

திரு. துரைமுருகன் அவர்கள் உள்ளே வந்து அவையிலே அமர்ந்தால் அவர்கள் கூறியதற்கும், அவர்கள் தலைவர் . . .

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவிக்காமலேயே அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், என்ன வெளிநடப்பா? (குறுக்கீடு) நல்ல பிள்ளைக்கு அடையாளம் சொல்லாமல் கொள்ளாமல் போவது என்பார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் கூற இருக்கின்ற பதிலைக் கண்டு தாங்க முடியாது என்கிற காரணத்தால் எஸ்.ஆர்.பி. அவர்களும் வெளிநடப்புச் செய்துவிட்டார் என்றே நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. துரைமுருகன் அவர்கள், நடப்பு நிதியாண்டில்...

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. கு. ஜெயக்குமார் அவையைவிட்டு வெளியேறினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஜெயக்குமார், வாருங்கள், உங்களுக்கு நன்றி சொல்வதற்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு 5,041 கோடி ரூபாய் நிதியை கூரையைப் பிய்த்து கொட்டுவதாகக் கூறினார். மைய அரசு தமிழகத்திலிருந்து பெறும் வரி வருவாயில் ஒரு சிறிய பங்கையே தமிழகத்திற்குத் திருப்பி அளிக்கிறது என்ற உண்மையை புரியாத இயக்கம் தி.மு.க. இயக்கம் என்பது இதிலிருந்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக 2003–2004 ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து மத்திய அரசுக்குக் கிடைத்த வரி வருவாய் 22 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். ஆனால், அதே ஆண்டில் மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்குக் கிடைத்த வரி வருவாய் 3,396 கோடி ரூபாய் மட்டுமே ஆகும். 22 ஆயிரம் கோடி ரூபாய் தமிழகத்திலிருந்து ஒட்டுமொத்த வருவாயாக மைய அரசுக்குச் செல்கிறபோது அவர்கள் தமிழகத்திற்குத் தந்திருக்கிற பணமோ 3,396 கோடி ரூபாய் மட்டும் என்பதனை தி.மு.க. தலைவர் புரியாத அளவுக்கு அவர் மௌனியாக இருக்கிறாரா அல்லது மறதியிலே இருக்கிறாரா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.



2005 செப்டம்பர் 29] [திரு. சி. பொன்னையன்]

முற்பகல் 10–10

தமிழக அரசின் மொத்த வருவாயில் 80 சதவீதம் சொந்த வருவாய் ஆகும். 20 சதவீதம் மட்டுமே மைய அரசிலிருந்து பெறக்கூடிய தொகை. அந்தத் தொகைகூட, ஏதோ மைய அரசு மாநில அரசுக்குப் பிச்சை போடுகிற தொகை அல்ல. மைய அரசு மாநில அரசுக்கு விருப்பு உரிமையிலே, discretionary allocation என்ற முறையிலே தரக்கூடிய தொகையும் அல்ல. இத்தொகை, அரசமைப்புச் சட்டத்தின்படி நியமிக்கப்படும் நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, சட்டப்படி மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய தொகை.

சென்ற ஆண்டு மட்டும் தமிழகத்திலிருந்து ஒட்டுமொத்தமாக மைய அரசுக்கு 27 ஆயிரம் கோடி ரூபாய், சுமார் 27 ஆயிரம் கோடி ரூபாய் வருமானமாகக் கிடைத்திருக்கிறது. ஆனால், வெறுமனே அவர்கள் ஏதோ 5,000 கோடி ரூபாயைத் தந்துவிட்டு, அதுவும் சட்ட ரீதியாக மாநில அரசுக்குத் தர வேண்டிய பணத்தைத் தந்துவிட்டு, அந்த 27,000 கோடி ரூபாயில் மீதியிருக்கின்ற 22 ஆயிரம் கோடி ரூபாயை எங்கே எடுத்துச் செல்கிறார்கள்? ஏன் அந்தப் பணத்தைத் தருகிற தமிழகத்தை வஞ்சிக்கிறார்கள் என்று, மாநிலத்திற்கு அதிக Financial Power வேண்டுமென்று கோருகிற, அண்ணாவினுடைய வாரிசுகள் என்று தங்களைப் பித்தலாட்டமாகச் சொல்லிக்கொள்கின்ற தி.மு.க.–காரர்கள், தி.மு.க.–வின் தலைவர் கருணாநிதி, டெல்லியிலே ஆட்சியிலே இருந்துகொண்டு, அண்ணாவின் கொள்கையை ஏன் காற்றிலே பறக்க விடுகிறார்? திராவிட இயக்கத்தினுடைய உரிமையை ஏன் காற்றிலே பறக்க விடுகிறார்? சுய நலம் காரணமா? சொந்த நலம் காரணமா? மக்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

11–வது நிதிக் குழுவும், 12–வது நிதிக் குழுவும் தமிழகத்தை வஞ்சித்துவிட்டன. 11–வது நிதிக் குழுவில் பரிந்துரைக்கப்பட்ட தமிழகத்தின் பங்கீடு, மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் தொகையில், ஏற்கெனவே 10–வது நிதிக் குழு பரிந்துரைத்திருந்த 6.637 சதவீதத்திலிருந்து, 5.385 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதனால் மட்டும், 2000–2005 ஆம் ஆண்டுகளில் தமிழகத்திற்கு ஒட்டுமொத்தமாக 3,832 கோடி ரூபாய் இழப்பை மைய அரசு உருவாக்கியதை, மைய அரசிலே பதவி சுகத்திற்காக ஆட்சியிலே இருக்கின்ற திரு. கருணாநிதிக்கு எப்படித் தெரியாமல் போய்விட்டது என்பது வியப்பாக இருக்கிறது.

12–வது நிதிக் குழு தமிழகத்தின் பங்கை 5.305 சதவீதமாக மேலும் குறைத்துவிட்டது. அந்த நிதிக் குழுவை நியமிக்கின்றது மைய அரசு, பாராளுமன்றம் என்றெல்லாம் இருக்கின்றபோது, அந்த நிதிக் குழுவின் மூலமாக, மாநிலத்திற்கு அதிகப் பங்கைப் பெற்றுத் தர வேண்டுமென்ற முயற்சியை கிஞ்சித்தும் எடுக்காமல், அண்ணாவின் கொள்கையைக் காற்றிலே பறக்கவிட்டு, டெல்லியிலே ஆளுகிற அந்தத் தி.மு.க., 2005–2006 ஆம் ஆண்டு மட்டும் 76 கோடி ரூபாய் இழப்பை தமிழகத்திற்கு உருவாக்கியிருக்கிறது. அவர்கள் கொள்கை மாறிய காரணத்தால், கொள்கையில் அவர்கள் தடம் புரண்ட காரணத்தால், இந்த இழப்பைத் தமிழகம் சந்திக்க வேண்டியிருக்கிறது.

11–வது நிதிக் குழுவின் பரிந்துரையின் பெயரில் நடப்பாண்டு, 2005–2006–ல் ஏற்படும் இழப்பு மட்டும் 1,266 கோடி ரூபாய் ஆகும். இந்த மாநில பண அதிகார உரிமையைத் தட்டிக் கேட்காமல், சுய நலத்தோடு டெல்லியிலே தி.மு.க. இருக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட இழப்பையெல்லாம் உருவாக்கிவிட்டு, முரசொலியில் ஏதேதோ பிதற்றுகிற அந்தப் பிதற்றல் தமிழகத்து மக்கள் புரியாமல் இல்லை; புரிந்துதான் வைத்திருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு, 2004–2005 வரை, மைய அரசு மாநிலங்களுக்கு திட்ட உதவியாக, 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் வழங்கி வந்தது. 12–வது நிதிக் குழுவின் பரிந்துரையின் பெயரில் நடப்பாண்டு, 2005–2006 ஆம் ஆண்டிலிருந்து, மைய அரசு 30 சதவீதம் மானிய உதவி மட்டுமே வழங்கும் எனத் தெரிவித்துவிட்டது. மீதி 70 சதவீதத்தை இதுகாறும் கடனாக வழங்கி வந்த மைய அரசு, கையை விரித்துவிட்டது. மாநிலங்களே, அவர்கள் முயற்சியில் கடனை வெளிச் சந்தையிலே வாங்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டது. நிதிச் சரிவை தமிழகத்திற்கு உருவாக்கிவிட்டு, தத்தளிக்கும் நிலையில் தமிழகத்தின் நிதிநிலையை விட்டுவிட்டுச் சென்ற தி.மு.க.–காரர்கள், டெல்லியிலே இருந்துகொண்டு, இந்த ஆட்சிக்கு, புனிதத் தலைவி, பொன்மனச் செல்வி அம்மாவின் ஆட்சிக்கு, மேலும் தொல்லை தரவேண்டுமென்ற நோக்கோடோ என்னவோ, டெல்லியிலே ஆளுகின்றவர்கள் இப்படிப்பட்ட ஒரு நடைமுறையை மேற்கொண்ட காரணத்தால், அவர்கள் தனது பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட்டார்கள்.

அதுமட்டுமல்லாமல், தற்போது தமிழக அரசு திரட்டக்கூடிய கடன்களின் அளவுகூட 9,704 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதற்கும் ஒரு குறைப்பை தற்போது உருவாக்கிவிட்டார்கள். தமிழக அரசு வெளிச் சந்தையிலே கடன் வாங்க வேண்டும் என்றாலும்கூட, டெல்லியினுடைய காலை பிடிக்க வேண்டிய ஓர் அவல நிலையை, டெல்லியிலே கடைப்பிடிக்கிறார்கள். மாநிலத்திற்கு உரிமை கேட்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதி, மௌனம் சாதிக்கிறார். மாறாக, அரசு விழாக்கள், மைய அரசின் விழாக்களில், எந்த ஒரு பதவியும் இல்லாத கருணாநிதி, விளம்பரத்திற்காக, தள்ளாடுகிற வயதில்கூட, தனக்கு விளம்பரம் வேண்டும், தன்னைப்பற்றி மக்களிடம் வெளிப்படையாக இல்லாத திறமை இருப்பதாகக் கூறிக்கொள்ள வேண்டும் என்பதற்காக விழாக்களுக்குச் செல்கிறாரேயொழிய, நமக்கு வர வேண்டிய உரிமையை, பெற வேண்டிய உரிமையைப் பெற்றுத்தர கருணாநிதி தவறிவிட்டார்.



முற்பகல் 10–15

நமக்கு 9,704 கோடி ரூபாய் கடன் வாங்கும் உரிமையை ஏற்கெனவே தந்திருந்தார்கள். ஆனால், தற்போது அந்தக் கடன் வாங்கக்கூட, 8,290 கோடி ரூபாய்க்கு மேல் கடனை தமிழக அரசு வெளிச் சந்தையில்கூட வாங்கக் கூடாது என்ற ஓர் இக்கட்டான நெருக்கடியை, நிதி நெருக்கடியை தமிழக அரசுக்கு உருவாக்கிவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல, 12–வது நிதிக் குழு, கேரளம், மேற்கு வங்காளம், பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்கும், வட கிழக்கு மற்றும் மலை மாநிலங்களுக்கும் 2005–2010 ஆம் ஆண்டு திட்டம் சாரா வருவாய் பற்றாக்குறை என 56 ஆயிரத்து 856 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது. மைய அரசு, தமிழகத்தை வஞ்சிக்கின்ற மனப்பாங்கை நடைமுறையில் கொண்டிருக்கிற காரணத்தால், அதற்கு தூபம் போடுகிறவர்களாக, தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் டெல்லியிலே கருணாநிதியின் ஆசியோடு அமைச்சர்களாக இருக்கிற காரணத்தால், சல்லி காசுகூட தமிழகத்திற்கு இந்த மானியம் வழங்காத ஒரு வஞ்சக நிலையை அவர்கள் உருவாக்கிவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல, கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் 12–வது நிதிக் குழு 16,059 கோடி ரூபாய் மானியம் வழங்கியிருக்கிறது. தமிழகத்திற்கு பணம் அதிகம் தந்துவிட்டால், அதன்மூலம் நல்ல, நல்ல திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தி, மக்கள் தலைவி மேலும் மேலும் சிறப்புகளைப் பெற்று விடுவாரே என்ற காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ என்னவோ, டெல்லியிலே இருக்கின்ற தி.மு.க. அமைச்சர்கள் வாய் திறக்காமல் மௌனிகளாய் இருந்த காரணத்தால், நடவடிக்கை எதுவும் எடுக்காத காரணத்தால், பிற

[திரு. சி. பொன்னையன்] [2005 செப்டம்பர் 29

மாநிலங்களுக்கென 16,059 கோடி ரூபாய் மானியம் கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கு வழங்கப்பட்ட போதிலும்கூட, சல்லி காசுகூட தமிழகத்திற்கு இல்லை என்று கூறி வஞ்சித்து விட்டார்கள்.

அதைப்போலவே, பல்வேறு திட்டங்களிலும் மைய அரசு, தமிழகத்திற்கு சரியான பங்கை அளிக்கவில்லை. உதாரணமாக, பிற்படுத்தப்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்று ஒரு திட்டம். இந்தத் திட்டத்திலே 147 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆனால், தமிழகத்திற்கு அம்மா அவர்கள் வற்புறுத்தியும்கூட, கேட்டதைத் தரவில்லை. வெறுமனே 5 மாவட்டங்களை மட்டுமே அதற்கு தேர்ந்தெடுத்து, நமக்கு துரோகத்தை இழைத்துவிட்டார்கள்.

அத்தோடு இந்திரா வீட்டு வசதித் திட்டத்தில் தேசிய அளவிலான ஒதுக்கீட்டுத் தொகையோ தமிழகத்திற்கு 2,756 கோடி ரூபாய். ஆனால், தமிழகத்திற்கு வெறுமனே 98 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கி, தமிழகத்தை வஞ்சித்து விட்டார்கள். 1,919.25 கோடி ரூபாய்க்கான முதல் துணை மதிப்பீடுகளை நான் சட்டமன்றத்தின் முன் வைத்துள்ளேன். இதுவரையில் கோரப்பட்டுள்ள முதல் துணை மதிப்பீடுகளிலேயே இதுவே அதிகபட்ச ஒதுக்கீடாகும் என்று பாராட்டுவதற்குப் பதிலாக, இப்படி புரட்சித் தலைவியினுடைய, அம்மாவினுடைய சாதனைகளையெல்லாம் பாராட்டினால், அது தமிழக மக்கள் மத்தியில் அம்மா அவர்களுக்கு வெகுவான புகழைத் தந்துவிடும் என்ற காழ்ப்புணர்வுமிக்க தி.மு.க.-காரர்கள், உண்மைக்கு மாறான தகவல்களை இந்த அவையிலே அள்ளி, அள்ளி பேசினார்கள். அதற்கு தூபம் போடுவதுபோல், உண்மைக்கு மாறான தகவல்களை திரு. எஸ்.ஆர்.பி. சொன்னார், திரு. ஜி.கே. மணி சொன்னார். இதை வன்மையாக நாங்கள் கண்டிக்கின்றோம்.

2005–2006 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் அரசால் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களுக்காகவும், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டங்களில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைவிட கூடுதல் செலவினம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படும் இனங்களுக்காக மட்டும்தான் சட்டமன்றத்தில் கூடுதல் நிதி ஒதுக்கீடு, துணை மதிப்பீடுகள்மூலம் கோரப்படுகிறது. 820 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்து விட்டு, இந்த அரசு முதல் துணை மதிப்பீடுகளில் ரூ.2,000 மட்டுமே ஏன் ஒதுக்கியுள்ளது என மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பொன்முடி வினவினார். 2005–2006 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில்,



2005 செப்டம்பர் 29] [திரு. சி. பொன்னையன்]

இந்தத் திட்டத்திற்காகவே 650 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதை அவரும் பார்க்கவில்லை. வயதான நிலையிலே இருக்கின்ற அவருடைய தி.மு.க.–வினுடைய தலைவரும் பார்க்கவில்லை. எனவேதான் முரசொலி பத்திரிகையில் ஏதேதோ எழுதி, இன்று அவை உரிமை மீறல் என்ற ஒரு தொந்தரவுக்கும் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய அறியாமை காரணமா? ஆணவம் காரணமா? மக்கள்தான் அதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வாண்டில், மேலும் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான ஒதுக்கீடுகள் உள்ள நிலையில், மேலும் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினங்கள் மட்டுமே சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. ரூபாய் 820 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்ட இத்தகைய சாலை மேம்பாட்டுத் திட்டத்தை இந்நிதியாண்டில் செயல்படுத்த போதிய நிதியை இவ்வரசு ஏற்கெனவே ஒதுக்கியுள்ளது என்பதனை Capital Expenditure – மூலதனச் செலவுக்கான வரவு–செலவைப் பற்றி அறிந்தவர் யாராக இருந்தாலும் ஒத்துக்கொள்வார்கள். ஆனால், பலமுறை நிதி அமைச்சராக இங்கே செயல்பட்ட திரு. கருணாநிதி இதைப் புரியாதவராக இருக்கிறாரா அல்லது அறியாதவராக இருக்கிறாரா? அவருடைய சூனியத்தை வெளிப்படுத்துகிற முறையில்தான் முரசொலியிலே அந்த எழுத்துகளை எழுதியிருக்கிறார் என்பதனை நாட்டு மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள், எள்ளி நகையாடுகிறார்கள்.

முற்பகல் 10–20

820 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு ஒரு பகுதியே நடப்பு ஆண்டில் செலவு ஏற்படும் என்றும், மீதிச் செலவு வரும் ஆண்டில் ஏற்படும் என்பதனை நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தினேன். தற்போதும் தெளிவுபடுத்துகிறேன்.

சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்காக இவ்வரசு ஓர் அடையாள ஒதுக்கீடு மட்டுமே வழங்கியுள்ளதாக திரு. பொன்முடி குற்றஞ்சாட்டினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 வருட காலத்தில் சென்னை மாநகரப் பகுதிகளை மேம்படுத்த மாபெரும் திட்டத்தை அறிவித்ததை நாடு அறியும். தற்போது நடைமுறைபடுத்தப்படும் இத்திட்டத்தின் பல கூறுகளுக்கான ஒதுக்கீடுகள் சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று

வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் வாரியம் போன்றவற்றின் வரவு–செலவுத் திட்டங்களிலும், மாநில அரசின் வரவு–செலவுத் திட்டத்திலும் ஏற்கெனவே வகை செய்யப்பட்டுள்ள உண்மையினைப் புரியாத பித்தர்களாக அவர்கள் செயல்படுவது ஏனென்று நாட்டு மக்கள் கேள்வி கேட்கிறார்கள்.

சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கு இந்நிதியாண்டில் வரவு–செலவுத் திட்டத்தில் ஏற்கெனவே 148 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 525 கோடி ரூபாய் மதிப்புள்ள சாலை மேம்பாடு மற்றும் பாலப் பணிகள் போன்ற மூலதனப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது, ஒரு பகுதியே நடப்பு ஆண்டில் செலவிடப்படும் என்ற உண்மை, ஆட்சி இயந்திரத்தில் பல காலம் இருந்து, சுயநலத்தைச் சுவைத்தவர்களுக்குப் புரியாமல் போன மர்மம் என்னவென்று புரியவில்லை. மேலும், கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்பட்டால் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதையும் அவர்கள் புரியாமல் பேசுகிறார்களா அல்லது புரிந்தே பிதற்றுகிறார்களா என்பது தற்போது கேள்விக்குறியாக உள்ளது. அடையாள ஒதுக்கீடு என்பது புதிதாக ஒப்பளிக்கப்பட்ட பணிகள் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கோடு ஒதுக்கப்படும் வரலாற்று உண்மை, நடைமுறை உண்மை என்பதனைப் புரியாத நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 3–ன்கீழ் இரண்டு சாலை மேம்பாலங்கள் கட்டுவதற்காக 27.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இச்செலவினம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இது புதுப்பணி குறித்த செலவாகும். மேற்காணும் திட்டத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதியொதுக்கம் செய்யப்படவில்லை. 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இம்மானியத்திற்கு 2,991.47 கோடி ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டதை அவைக்கு ஏற்கெனவே நான் சொன்னேன். ஆனால், கண்ணை மூடிக்கொண்டு படிக்கின்ற காரணத்தால் அது அவர்களுக்குப் புரியாமல் போய்விட்டது. மேற்படி தொகையிலிருந்து ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கம் மூலம் இச்செலவினம் செய்யப்படும் என்பதை அவர்கள் அறிய வேண்டும். 400.80 கோடி ரூபாய் செலவில் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக அரசு மானியமாக 75 கோடி ரூபாயினை அனுமதித்துள்ளது. அவற்றில் 50 கோடி ரூபாய் நகராட்சிப் பகுதிகளுக்கும், 25 கோடி ரூபாய்



மாநகராட்சிப் பகுதிகளுக்கும் பிரித்து அளிக்கப்படும். மீதமுள்ள தொகையினை மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அவர்களது சொந்த நிதியிலிருந்தும் TUFIDCO மற்றும் T.N.U.D.F. போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடனாகப் பெற்று இத்திட்டத்தினைச் செயல்படுத்த அவர்களுக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10–25

ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்த ஊரக வளர்ச்சி ஆணையருக்கு 200 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்புதல் தந்துள்ளது. இதில் அரசின் பங்கு ரூபாய் 100 கோடியும், நபார்டு வங்கியினுடைய நிதியுதவி 100 கோடி ரூபாயும் ஆகும். அரசின் பங்கான 100 கோடி ரூபாயில் 75 கோடி ரூபாய் முதல் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் நிதியுதவிக்கான கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளதால் அடையாள நிதியொதுக்கம் முதல் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலுக்காக, விதிகளுக்குட்பட்டு கொண்டுவரப்பட்டிருக்கிறது. நபார்டு வங்கியிலிருந்து திட்ட ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் தேவையான நிதியொதுக்கம் இதற்குக் கிட்டும், இதுதான் நடைமுறை என்பதைப் புரியாதவர்களாக அவர்கள் இருப்பது விந்தைக்குரியதாக இருக்கிறது.

சிறப்புக் கிராம ஊராட்சிச் சாலைகளை மேம்படுத்த, சிறப்பு ஊராட்சிகள் இயக்குநருக்கு அரசு 100 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் அரசின் பங்கு ரூபாய் 50 கோடியும், நபார்டு வங்கியின் நிதியுதவி 50 கோடி ரூபாயும் ஆகும். அரசின் பங்கான 50 கோடி ரூபாயில் 40 கோடி ரூபாய் முதல் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் நிதியுதவிக்கான கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளதால் அடையாள நிதியொதுக்கம் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலுக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளது. நபார்டு வங்கியிலிருந்து திட்ட ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் தேவையான நிதி இதற்கு ஒதுக்கப்படும்.

நபார்டு வங்கி நிதியுதவியுடன் ஊரகச் சாலைகளை மேம்படுத்த, நெடுஞ்சாலைத் துறைக்கு அரசு ஏற்கெனவே 100 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. நபார்டு வங்கியின் நிதியுதவிக்கான கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ள காரணத்தால் சட்டப் பேரவையின் ஒப்புதலுக்காக இது கொண்டுவரப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள

ஏரிகளை ஆழப்படுத்தி, சீரமைப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. முரசொலி பத்திரிகையிலே சுமார் இரண்டு பக்கம் அளவிற்கு இல்லாதவற்றை, உண்மைக்கு மாறானவற்றை, புளுகுகளை எடுத்து கருணாநிதி எழுதி, தன் தலையிலேயே மண்ணை வாரிப் போடக்கூடிய அளவிற்கு, இன்று அவை உரிமை மீறலுக்கான தவறு இழைத்திருக்கிறார். அவர் இதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும், மக்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதிலை முழுமையாகத் தருவது எனது கடமை என்ற முறையில் இவற்றைச் சொல்கிறேன்.

மாநிலத்திலுள்ள ஏரிகளை ஆழப்படுத்தி, சீரமைப்பதற்கு அரசு அனுமதி தந்துள்ளது. இதைச் செயல்படுத்துவதற்காக 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் பாரம்பரிய, பாசன ஏரிகளை ஆழப்படுத்தி, சீரமைக்கும் திட்டத்தின்கீழ் 62.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், முறைசாரா சிறு பாசனத் திட்டங்களுக்காக 68.02 கோடி ரூபாய் செலவு செய்யவும் அனுமதி தரப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பெரும் பணிகள் என்ற இனத்தில் உரிய கணக்குத் தலைப்பின்கீழ், 24 கோடி ரூபாய் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இது புது துணைப் பணி குறித்த செலவாகும். வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒட்டுமொத்தமாக பொதுப் பணித் துறையின் மானியக் கோரிக்கையின்கீழ், 1,372 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையிலிருந்து ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கம் செய்வதன்மூலம் இச்செலவினம் செலவிடப்படும்.

2005-2006 ஆம் நிதியாண்டில், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு 416 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு, 131.04 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்ட நிருவாக ஒப்புதல் அளித்து அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது. இந்தச் செலவிற்காக 2005–2006 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே பணிக்காக பொதுப் பணித் துறை மானியத்தின்கீழ், 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 23.94 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதற்காக மாண்புமிகு தமிழக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 7.85 கோடி ரூபாய் செலவு செய்யப்படும். இவ்வாறு 2005–2006 ஆம் ஆண்டிற்கு விடுதிகள் கட்ட மொத்தம் 111.79 கோடி ரூபாய் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட



உண்மை புத்தகங்களில் இருக்கின்றபோது, நடைமுறையில் எல்லாம் தரப்பட்டிருக்கின்றபோது ஏதோ வெறுமனே கொஞ்சமே பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்ற, உண்மைக்கு மாறான புளுகை கருணாநிதி கூறுவது ஏன்? பொன்முடி கூறுவது ஏன்? எஸ்.ஆர்.பி. கூறுவது ஏன்? ஜி.கே. மணி கூறுவது ஏன்? மக்கள் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். மக்களை ஏமாற்றுவதற்கு அவையிலே எதை வேண்டுமென்றாலும் பேசலாம், அவைக்கு வெளியே எதை வேண்டுமென்றாலும் பேசலாம் என்றால் அது எடுபடாது, அது உண்மையல்ல என்பதனை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

முற்பகல் 10–30

அதைப்போலவே பொன்முடி அவர்கள் பேசுகிறபோது 7.91 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று கூறியது தவறானது ஆகும். இது கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ஆகும். மாநிலத்திலுள்ள 150 பத்திரப் பதிவு அலுவலகங்களை கணினிமயமாக்குவதற்காக அரசு ரூ.19.21 கோடிக்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டம் 2005–2011 ஆம் ஆண்டுகளில் ELCOT நிறுவனத்தின் மூலம் Operating Lease என்ற அடிப்படையில், குத்தகை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு இதற்கான நிதி அந்நிறுவனத்திற்கு காலாண்டிற்கு ஒருமுறை வழங்கப்படும். 2005–2006 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, நிதியாக ரூ.96.03 லட்சம் ஏற்கெனவே வரவு–செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. முதல் துணை மதிப்பீடுகளில் பத்திரவுப் பதிவுத் துறை மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 50 இலட்சம் ரூபாய் பத்திரப் பதிவு அலுவலகங்களின் காலமுறை பராமரிப்புச் செலவிற்கு உரியதாகும். எனவே, இவ்வொதுக்கீட்டையும் கணினிமயமாக்கும் திட்ட ஒதுக்கீட்டையும் தொடர்புபடுத்திப் பேசுவது முற்றிலும் தவறான ஒன்று என்பதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து பராமரிப்புக்கான ஒதுக்கீட்டையும் கணினிமயமாக்குவதற்கான ஒதுக்கீட்டையும் வேறுபடுத்திப் பார்க்காமல், ஏதோ பேச வேண்டும் என்று பேசுவதற்காக, தவறை திரும்பத் திரும்பச் சொல்லி அவையை அவமதிக்கக் கூடாது.

தமிழ்நாடு கால்நடை வளர்ப்பு அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, 59.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது புதுப் பணி குறித்த

[திரு. சி. பொன்னையன்] [2005 செப்டம்பர் 29

மூலதனச் செலவு ஆகும். கட்டமைப்புப் பணிகள் என்பதால் இதில் ஒரு பகுதிதான் நடப்பாண்டில் செலவு ஏற்படும் என்பது பல ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்குத் தெரியாதது ஏன்? அதைத்தான் சொன்னேன். வயது காரணமாக சிலவற்றை மறந்து விட்டு எழுதுகிறாரா? அவர் ஆட்களைப் பேசத் தூண்டுகிறாரா என்பது புரியாத புதிராக இருக்கிறது. மேற்காணும் திட்டத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதியொதுக்கம் ஏதும் செய்யப்படவில்லை. துணை மானியக் கோரிக்கையில் செலவினத்திற்காக 17 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இம்மானியத்திற்கு 128.43 கோடி ரூபாய் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அவர்கள் படிக்கத் தவறி விட்டார்கள்; காணத் தவறி விட்டார்கள். மேற்படி தொகையிலிருந்து ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கம் மூலம் இச்செலவினம் செய்யப்படும்.

அடையாள ஒதுக்கீடு என்பது புதிய செலவினம் அல்லது கூடுதல் செலவினம் குறித்து பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகச் செய்யப்படும் ஒரு நிதி ஒதுக்கீடு ஆகும். இது விதிகளின்படி செய்யப்படுகின்ற ஓர் ஒதுக்கீடு ஆகும். ஆண்டு பலவாக நடைமுறையில் இருக்கின்ற ஒதுக்கீடு ஆகும். தி.மு.க. ஆட்சி காலத்திலும் அதற்கு முன்னரும் கடைப்பிடிக்கப்பட்ட ஒதுக்கீட்டு முறை ஆகும். இம்முறையானது தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறை ஆகும். உதாரணமாக, 1996 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை துணை மதிப்பீடுகளை அப்போது முதலமைச்சராகவும், நிதியமைச்சராகவும் இருந்த கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்திற்கு அளித்தபோது அதிக செலவினம் உடைய மூலதனச் செலவின திட்டங்களுக்கு பெருமளவில் நிதியொதுக்கீடு செய்து விட்டு, அந்நிதி முழுவதையும் ஒதுக்காமல் அடையாள ஒதுக்கீடு மட்டுமே செய்துள்ளார். அவர் கடந்த காலத்தை அறவே மறந்து விட்டார். வயது காரணமா என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை. எனவே, அடையாள ஒதுக்கீடு குறித்ததான வரவு-செலவுத் திட்ட நடைமுறை குறித்து அவருக்கு தெளிவுபடுத்தியாக வேண்டும்.

1996–97 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளில் பொள்ளாச்சிப் பகுதியில் அமைந்துள்ள பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தை மேம்படுத்துவதற்காக மானியக் கோரிக்கை எண் 54-ல் பாசன வசதி குறித்த மூலதனச் செலவில் 15.67 கோடி ரூபாய் ஒதுக்கி விட்டு அந்தத்



2005 செப்டம்பர் 29] [திரு. சி. பொன்னையன்]

தொகையை துணை மதிப்பீடுகளில் சேர்க்காமல் அடையாள நிதியொதுக்கீடு செய்தது மறதியில் மூழ்கியிருக்கின்ற திரு. கருணாநிதி என்பதனை நாட்டு மக்கள் உணர்ந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். இதுபோன்றே 1996–97 ஆம் ஆண்டிலே துணை மதிப்பீடுகளில் நீர் வள ஆதார அமைப்பின் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக மானியக் கோரிக்கை எண் 54–ல் பாசன வசதி குறித்த மூலதனச் செலவில் 12.57 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அம்முழுத் தொகையும் துணை மதிப்பீடுகளில் சேர்க்காமல் அடையாள நிதியொதுக்கீடு மட்டுமே ஒதுக்கியதும் அன்று நிதியமைச்சராக இருந்த கருணாநிதி என்பதனை அவர் கஷ்டப்பட்டு நினைவுகூர்ந்து பார்ப்பார் என்று நான் நம்புகிறேன். மேலும், 1997–98 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளில் இலங்கை அகதிகள் முகாம்களில் உள்ள முதியோர்களுக்கு வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தை நீட்டிப்பதற்காக மானியக் கோரிக்கை எண் 42 பல்வகையின்கீழ் அத்திட்டத்திற்கான முழுத் தொகையையும் துணை மதிப்பீடுகளில் சேர்க்காமல் அடையாள நிதியொதுக்கீடு மட்டும் செய்து அன்று நாட்டை ஆண்டவர் திரு. கருணாநிதி; மக்களை தற்போது ஏமாற்றுகிறார். தமிழகத்து மக்கள் மறதியான மக்கள் என்று தப்புக் கணக்குப் போட்டு தன் தலையில் தானே குட்டிக்கொள்கின்ற பழக்கமுடைய கருணாநிதி, இப்படிப் புளுகுகளை அவர் கட்டவிழ்த்து விடுவதை நாட்டு மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த 1997–1998 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளிலேயே ஊராட்சி ஒன்றியங்களின் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக மானியக் கோரிக்கை எண் 42, பல்வகையின்கீழ் 3.52 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டும், இந்தத் தொகை எதையுமே துணை மதிப்பீடுகளில் சேர்க்காமல் அடையாள நிதியொதுக்கீடு ஒதுக்கியதும் கருணாநிதிதான்; இன்று மக்களை ஏமாற்றுவதும் அதே திரு. கருணாநிதிதான்.

முற்பகல் 10–35

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ராஜா அவர்களின் உரையில் 2,177 கோடி ரூபாய் பற்றாக்குறைகளை ஈடுசெய்ய முடியுமா, இது ஒரு uncovered deficit–ஆக உருவாகிவிடுமே என்ற சந்தேகத்தை எழுப்பினார். மேலும், இந்த uncovered deficit, inflationary அதாவது, விலைவாசி உயர்வுக்கு வழி வகுக்குமோ என்றுகூட கூறினார். இதற்கு நான் விளக்கம் தருகிறேன். 2,179.66 கோடி ரூபாய் அளவிற்குப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் கூடுதல் வரி வருவாய்

[திரு. சி. பொன்னையன்] [2005 செப்டம்பர் 29

மூலமாகவும், வட்டிச் சுமைப் பளுவைக் குறைத்தல் போன்ற சிக்கன நடவடிக்கைகள் மூலமாகவும் 2,000 கோடி ரூபாய் அளவில் ஈடுகட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி தங்கத் தாரகை அம்மா அவர்கள் தெள்ளத் தெளிவாக நிதிநிலை பற்றிய நிலைமைகளை அவைக்கு எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

முதல் துணை மதிப்பீடுகளினால் ஏற்படக்கூடும் பற்றாக்குறை, வரி வருவாய் மூலமாகவும், சிக்கன நடவடிக்கைகள் மூலமாகவும் ஈடுசெய்யப்படுவதால், inflationary impact என்று எதுவுமே இருக்காது என்பதை திரு. ராஜா அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும், ஓர் அரசு, பற்றாக்குறையை கடன்மூலம் ஈடுகட்டினால்தான்,—this is a simple economic principle, கடன்மூலம் ஈடுகட்டினால்தான், பொருளாதாரத்தில் விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும். ஆனால், நாங்களோ முதல் துணை மதிப்பீட்டில் ஏற்படுகின்ற கூடுதல் பற்றாக்குறையை, கூடுதலாகக் கடன் பெறாமல், வரி வருவாய் மற்றும் சிக்கன நடவடிக்கைகளாலேயே ஈடுகட்டிவிடுகிற காரணத்தால் inflationary impact என்பதற்கு வழிவகையே இல்லை என்பதனை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும், நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின்கீழ் இம்மன்றத்தில் வைக்கப்பட்ட ஆய்விலேயும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதியில் வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ஆகியவை அனைத்தும் வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீடுகளைவிட குறைவாகவே இருக்கும் என்பதை நாங்கள் தெளிவுபடுத்தி இருக்கிறோம்.

திரு. ஜி.கே. மணி அவர்கள், மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் எவ்வாறு பல கோடி ரூபாய் மதிப்பீடு உள்ள பணிகளை மேற்கொள்ள இயலும் என்று கேட்டார். 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் வரவு–செலவுத் திட்டத்தின் மொத்த நிதி 41,202 கோடி ரூபாய். இதை அவர் அறிவார். முதல் துணை மதிப்பீடுகளில் கோரப்பட்டுள்ள நிதியொதுக்கீடு 1,919.25 கோடி ரூபாய் மட்டுமே. இது நடப்பு வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடுகளில் ஒட்டுமொத்தம் வெறுமனே 4.7 சதவீதம் மட்டுமே ஆகும். எனவே, முதல் துணை மதிப்பீடுகளின் அளவு மிகவும் அதிகமானது என்றோ, முதல் துணை மதிப்பீடுகளில் கோரப்பட்டுள்ள செலவினங்களுக்கு, மொத்த ஒதுக்கீடான 41,202 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலிருந்து மறுநிதியொதுக்கியதும் மிச்சப்படுத்திச் செய்ய இயலாது என்று கூறுவதோ ஒவ்வாத ஒன்று. அது சரியானது அல்ல. வரவு–செலவுத் திட்டத்திலிருந்து முதல் துணை மதிப்பீடுகளுக்கு மேல் தேவைப்படுகின்ற கூடுதல் செலவினத்தை மறுநிதியொதுக்கம் மூலம் செலவிட இயலாது என்று கூறுவது எப்படி இருக்கிறது என்றால், 100 கோடி ரூபாய் செலவினத்தை மேற்கொள்ளக்கூடிய ஒரு நபர், கூடுதலாக 5 ரூபாய் செலவினத்தை அவரால் சிக்கனப்படுத்தி மேற்கொள்ள முடியாது என்று கூறுகின்ற முறைக்கு ஒப்பாகும் என்று நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். முதல் துணை மதிப்பீடுகள் மறறும் மறு நிதியொதுக்கத்திற்கு மேல் கூடுதலாக நிதியொதுக்கம் தேவைப்பட்டால் இறுதி துணை மதிப்பீடுகளில் கோரும் வாய்ப்பு சட்ட ரீதியாக விதிகளின் அடிப்படையில் இருக்கிறது என்பதனை திரு. ஜி.கே. மணி அவர்கள் உணர வேண்டும் என்று நான் கூற விழைகின்றேன். அடையாள ஒதுக்கீடு கோரப்பட்டுள்ள பெரும்பாலான செலவினங்கள் மூலதனச் செலவினங்கள் ஆகும்.



2005 செப்டம்பர் 29] [திரு. சி. பொன்னையன்]

பொதுவாக, கட்டடம் கட்டுதல், பாலம் அமைத்தல் போன்ற மூலதனச் செலவினங்கள் ஓர் ஆண்டிலேயே முற்றிலும் நிகழ்ந்து விடுவது இல்லை. மாறாக 18 மாதங்களிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரைகூட இம்மூலதனச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு வருவதை சட்டமன்ற உறுப்பினர்கள் நடைமுறையில் நன்கு உணர்வார்கள். எனவே, மூலதனச் செலவின் மொத்த ஒப்பளிப்புத் தொகை ஒரு குறிப்பிட்ட வரவு–செலவுத் திட்டத்திலோ அல்லது துணை மானியக் கோரிக்கைகளிலோ கோரப்படுவது இல்லை. இதற்கு மாறாக மொத்தச் செலவினத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மட்டுமே கோரப்படும். இது நடைமுறையில் இருக்கின்ற விதிகளுக்கு உட்பட்டு இருக்கின்ற செயல்முறை.

முற்பகல் 10–40

மேலும், ஏற்கெனவே வரவு–செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கீடு செய்யப்பட்ட இனங்களில் துணை மதிப்பீடுகளில் கோரப்படும் அடையாள ஒதுக்கீடு என்பது புதியதாக ஒப்பளிக்கப்பட்ட பணிகள் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். We have to bring it to the notice of the House. அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்ற,— the concerned Department for the concerned work–க்கு, they cannot incur the expenditure. இது விதிமுறை. அந்த விதியின் அடிப்படையில் இந்த அவையினுடைய

கவனத்திற்கு இதைக் கொண்டு வந்தாக வேண்டும். மேலும், திரு. ஜி.கே. மணி அவர்கள் கட்டடங்கள் பராமரிப்பு குறித்தும், கட்டடப் பராமரிப்புக்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு குறித்தும், கட்டடங்கள் பராமரிப்பு ஆண்டுதோறும் நிகழக்கூடிய திட்டமிடப்பட்டச் செலவு என்றும், இதனைக் கூடுதல் செலவினத்தில் காட்டவேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறினார். பல்வேறு துறைகளில் கட்டடங்களைப் பராமரிப்பதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு முதல் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், 12–வது நிதிக் குழு, கட்டடங்கள் பராமரிப்பு குறித்து திருத்திய வரையறைகளை தற்போது நிர்ணயித்திருக்கிறது. எனவேதான், முதல் துணை மதிப்பீடுகளில் பல்வேறு துறைகளில் உள்ள கட்டடங்களைப் பராமரிப்பதற்காக மாநில அரசின் நிதியிலிருந்து கூடுதல் ஒதுக்கீட்டை முதல் துணை மதிப்பீடுகளில் கோரியிருக்கிறோம். ஒருவேளை 12–வது நிதிக் குழு கட்டடங்கள் பராமரிப்பு குறித்து திருத்திய வரைமுறைகளை நிர்ணயித்திருப்பது மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம்.

திரு. ஜி.கே. மணி அவர்கள், நெடுஞ்சாலைத் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.2991.41 கோடி ரூபாய் என்றும், துணை மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களின் அளவு ரூ.1373 கோடி என்றும், இது மானிய ஒதுக்கீட்டில் 40 சதவிகிதம் என்றும், மானியத்தில் ஏற்படும் மீதத்தில் இருந்து இச்செலவினம் சாத்தியப்படுமா என்றும் கருத்தைத் தெரிவித்தார். துணை மதிப்பீடுகளில் 820 கோடி ரூபாய் அளவிலான ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டுப் பணிகளுக்காக அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரவு–செலவுத் திட்டத்தில் 650 கோடி ரூபாய்க்கான நிதியொதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே இதைப்பற்றி திரு. பொன்முடி அவர்கள் எழுப்பிய கருத்துகளுக்கு விரிவாக நான் இதுகாறும் படித்துள்ளது, மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் பொருந்தும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, கூடுதலாக அனுமதிக்கப்பட்ட பணிகள் மூலதனப் பணிகள் என்பதால், புதியதாக அனுமதிக்கப்பட்ட 820 கோடி ரூபாய் மதிப்புள்ள பணிகளில், ஒரு பகுதியே நடப்பாண்டில் செலவிடப்பட வாய்ப்பிருக்கிறது. மேலும், இப்புதிய பணிகள் குறித்து சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் அடையாள ஒதுக்கீடு கோரப்பட்டது. பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் இறுதித்



துணை மதிப்பீடுகளிலும் தேவையான நிதி ஒதுக்கீடு கோரப்படுவதற்கு, ஒதுக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

இதுபோன்றே பொதுப் பணித் துறை குறித்த திட்டங்களைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். பொதுப் பணித் துறைத் திட்டங்களிலும், குறிப்பாக நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவினங்கள் ஆகும். ஓர் ஆண்டிற்கு மேல் நிறைவேற்றப்படக்கூடிய பணிகளாகும். ஏற்கெனவே, வரவு–செலவுத் திட்டத்தில் பொதுப் பணித் துறைக்கான மொத்த நிதி 1372.41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவேதான், பல்வேறு நினைவிடங்கள் மற்றும் மணிமண்டபங்கள் போன்றவற்றிற்கு அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1372.41 கோடி ரூபாய் ஒட்டுமொத்த நிதியிலே, ஒரு 2 சதவிகிதம், 3 சதவிகிதம் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது சாத்தியக்கூறான ஒன்று என்பதனை அவை அறிய வேண்டும்.

திரு. ஜி.கே. மணி அவர்கள், காவல் துறை மானியக் கோரிக்கையில் பல்வேறு கூடுதல் செலவினங்களுக்கு நிதியொதுக்கம் குறைவாகச் செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். காவல் துறையைப் பொறுத்தவரையில், பல்வேறு செலவினங்கள், புதிய பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டதால் ஏற்படும் செலவினங்கள் ஆகும். இவை அனைத்தும் சம்பளம் குறித்த செலவினம் என்பதால், சட்டமன்றத்தின் கவனத்திற்கு, — We have to bring it to the notice of the House. அந்த அடிப்படையில் அவையின் கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இத்திட்டங்கள் குறித்த செலவினங்கள் அனைத்தும், வரவு-செலவுத் திட்டத்தில் காவல் துறை மானியத்தில் உள்ள 1339.33 கோ்டி ரூபாய் ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளப்படும். அதற்கு நிதி இருக்கிறது என்பதை அவைக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தில் காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது அறிவித்த அறிவிப்புகளின் அடிப்படையில் அரசாணைகள் வெளியிடப்பட்டு, மாதந்தோறும் இச்செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனையும் நான் திரு. ஜி.கே. மணி அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பின்பு மேற்கொள்ளப்படும் அனைத்துப் புதிய செலவினங்களும் எதிர்பாராச் செலவினங்களாக இங்கே கருதப்படுகின்றனவா என்று பேசினார். இதற்கு இந்த விளக்கத்தை நான் நேற்றே அவருக்குச் சொல்லியிருக்கிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [2005 செப்டம்பர் 29

திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் ஏதோ பெட்ரோலிய நிறுவனங்கள் நட்டத்தைச் சந்தித்து வருவதாகவும், அதனால்தான் மைய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் ஆகிய பொருட்களின் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்குள்ளானது என்றும், இங்கு ஒரு நீண்ட நெடிய பிரசங்கத்தை அளித்தார். ஆனால், சொல்ல மறந்த ஒன்றை நான் அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10–45*

நடப்பு நிதியாண்டில் 30–06–2005 வரை, முதல் காலாண்டில், O.N.G.C. நிறுவனம் 3,318.88 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது என்பதனை O.N.G.C.–யினுடைய வெளியீடே தெளிவுபடுத்தியிருக்கிறது. அவர், நட்டத்தில் இயங்குகின்றன என்று சொன்னார், அவைக்குத் தவறான தகவலைச் சொன்னார், உண்மைக்கு மாறானத் தகவலைச் சொன்னார். ஏதோ ஆதாரம், ஆதாரம் என்று சொல்லுவார் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். பிறகு புள்ளிவிவரம் தவறு என்பதற்கு ஆதாரத்தை நாங்கள் எடுத்துச் சொன்னால், தலையைத் தொங்கப் போட்டுவிடுவார். தற்போது அவர் கூறிய தகவல், அரசினுடைய அந்த Petroleum Refinery போன்றவற்றுக்கெல்லாம், மைய அரசினுடைய அமைப்புகளுக்கு நட்டம் ஏற்படுகிறது என்ற தவறான தகவலை அவர் அவைக்குச் சொன்னார். அதிலே O.N.G.C. Financial News, Financial Research என்பதிலே—அந்த copy-யே இருக்கிறது, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 1 கோடி, 2 கோடி அல்ல, உலகச் சந்தையிலே பெட்ரோலிய குரூட் விலை ஏறுகிறபோதெல்லாம் O.N.G.C.–க்கு இலாபம் அள்ளிக் கொண்டு வருகிறது; அவர்களுக்கு கூரையைப் பிய்த்துக்கொண்டு வருகிறது என்றால் O.N.G.C.–க்குத்தான் அப்படி வந்திருக்கிறது. உலகச் சந்தையிலே விலையேற்றம் ஏற்படுகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். மக்களுக்குப் பாதிப்பு, ஏழை மக்களுக்குப் பாதிப்பு, நாட்டிலே விலைவாசி உயர்கிறது, எல்லா பொருள்களுக்கும். சாலைப் போக்குவரத்தாக இருந்தாலும் சரி, இரயில் போக்குவரத்தாக இருந்தாலும் சரி, அனைத்துப் பண்டங்களும் அவற்றிலே செல்கிற காரணத்தால்—டீசல் விலை உயர்வால் இந்தியாவிலேயே அளவுகடந்த விலைவாசி உயர்வு ஏற்பட்டதற்குக் காரணம், தற்போது டெல்லியிலே தி.மு.க. கூட்டணியோடு இருக்கின்ற டெல்லி ஆட்சி என்பதற்கு அத்தாட்சி வேறொன்றும் தேவையில்லை. இது நடைமுறையில் இருக்கின்ற ஒன்று. ஆனால், மக்களைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை; விலைவாசி ஏறுவதைப் பற்றி கவலைப்படவில்லை. மாறாக O.N.G.C.–க்கு அதிக இலாபம் வரவேண்டுமென்று விழைகிறார்கள். இலாபமே இல்லையென்ற



2005 செப்டம்பர் 29] [திரு. சி. பொன்னையன்]

உண்மைக்கு மாறானத் தகவலைச் சொன்னார். அதிலே, 31–3–2005, அதாவது ஆரம்பத்திலே அவர்கள் உலகச் சந்தையிலே இந்த குரூட் விலை ஏறியபோது O.N.G.C.–க்கு நட்டமா ஏற்பட்டது? இல்லை. மாறாக, 1,298.3 கோடி ரூபாய் அவர்களுக்கு இலாபம் ஏற்பட்டது. இது திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு தெரியவில்லையா? அல்லது திரு. எஸ்.ஆர்.பி அவர்களுக்கு இதைச் சொல்லிக் கொடுத்த அவருடைய அரசியல் வழிகாட்டி டெல்லியிலே இருக்கிறாரே, அந்த நிதியமைச்சர் சொல்லிக் கொடுத்தாரே அவருக்குத் தெரியவில்லையா? அல்லது வேண்டுமென்றே மறைக்கிறார்களா என்பதனை நான் கேட்க விரும்புகின்றேன்.

அதைப்போலவே 30–6–2004–லே ஒரு கணக்கை வெளியிட்டிருக்கிறார்கள். உலகச் சந்தையிலே குரூட் விலை ஏறுகிறது. O.N.G.C.–க்கு நட்டமா? மைய அரசுக்கு இழப்பா? இல்லையே. 2,308 கோடி ரூபாய் O.N.G.C.–க்கு இலாபம் வருகிறது. அவர்களே வெளியிட்டிருக்கிற O.N.G.C. Financial News–ல் வெளியிட்டிருக்கிறார்கள். இப்போது ஒரு வெளியீட்டைத் தந்திருக்கிறார்கள். இந்த latest வெளியீடு. அந்த latest வெளியீட்டிலேதான்—இப்போது வெளிச்சந்தையிலே குரூட் விலை வெளிநாடுகளில் உயர்ந்தவுடன் O.N.G.C.–க்கு நட்டமா? இல்லை. வருமானம் என்ன தெரியுமா? 3,318.88 கோடி ரூபாய். அவையை boycott செய்து வெளியிலே இருக்கின்ற கம்யூனிஸ்ட் நண்பர்கள் இதைக் காதிலே போட்டுக்கொள்ள வேண்டும். டெல்லியிலே உங்களுடைய தலைவர்களிடம் சொல்லி, இதில் என்ன மர்மம் இருக்கிறது என்பதனை நீங்கள் கண்டறிய வேண்டும். O.N.G.C.–க்கு இப்படி 3,000 கோடி ரூபாய் இலாபம். அதைக் குறைத்து இருக்க வேண்டாமா? அந்த 3,000 கோடி ரூபாய் இலாபத்தை O.N.G.C.–க்கு வேண்டாமென்று சொல்லிவிட்டு, வீணாக மக்கள் தலையில் சுமையைச் சுமத்துகிற, இந்தப் பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் குறைத்து இருக்க வேண்டாமா? ஏன் செய்யவில்லை? எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு ரூபாய் 400.80 கோடி அனுமதித்திருந்ததில், 75 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு வழங்குவது குறித்து இங்கு குறிப்பிட்டார். இது குறித்த விளக்கங்களை ஏற்கெனவே நான் சொன்னேன். 325 கோடி ரூபாய் மீதிப் பணம் மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் TUFIDCO, TNUDF போன்ற அமைப்புகளின் மூலம் பெறப்படும் கடன் மற்றும் அவர்களது சொந்தப் பங்கு ஆகியவற்றின் மூலம் ஈடுகட்டப்படும்.

[திரு. சி. பொன்னையன்] [2005 செப்டம்பர் 29

திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் 1996–97 ஆம் ஆண்டு 0.8 சதவிகிதம் அளவிற்குத்தான் துணை மானியம் கோரப்பட்டது என்றும், இந்த ஆண்டு 4.7 சதவிகித அளவிற்கு துணை மானியம் கோரப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். இது ஒரு தவறான தகவல். 1997–98 ஆம் ஆண்டு துணை மானிய கோரிக்கை 5.8 ஆகக் கூடியது என்றும், இது மின்சார வாரியம் செலுத்த வேண்டிய கடனைப் பங்கீட்டுத் தொகையாக மாற்றியதால் ஏற்பட்ட செலவிற்கு ஈடுகட்டுவதற்காகத்தான் என்றும் கூறினார். உண்மை என்னவென்றால், 1996–97 ஆம் நிதியாண்டில் கோரப்பட்ட முதல் துணை மானியம் 0.8 தான். ஆனால், 1997–98 ஆம் ஆண்டில் கோரப்பட்ட துணை மானியம் 5.3 சதவிகிதம். 1998–99 ஆம் ஆண்டில்கூட தி.மு.க. ஆட்சியில் 848.56 கோடி ரூபாய் துணை மானியம் கோரப்பட்டது என்பதையும், இது வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 3.8 சதவிகிதம் என்பதையும் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி உணர வேண்டும். அவரது தலைவர் தவறானத் தகவலை முரசொலியில் தந்து, மக்களைக் குழப்புகிற, திசை திருப்புகிற முயற்சியில் ஈடுபட்டு வழக்கம்போல் தோல்வியடைகிற தி.மு.க. தலைவர் கருணாநிதியும் உணர வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

முற்பகல் 10–50

முதல் துணை மானியம், இறுதி துணை மானியம் ஆகிய இரண்டு துணை மானியங்களையும் சேர்த்துப் பார்த்தால் தி.மு.க. ஆட்சியிலே 1996–97 ஆம் ஆண்டிலே எந்த உயர்வு என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும். 4.7 சதவிகிதம் அதிக உயர்வு என்று சொல்கிறார்கள். அதிகமான உயர்வு நமது என்று சொல்கிறார்கள். 1996–97 ஆம் ஆண்டிலே நிதி அமைச்சர் கருணாநிதிதான். உயர்வு என்ன தெரியுமா? 12.6 சதவிகிதம்; 1997–98-லே கருணாநிதிதான் நிதி அமைச்சர், உயர்வு என்ன தெரியுமா? 12.1 சதவிகிதம்; 1998–99–லே உயர்வு என்ன தெரியுமா? 8.4 சதவிகிதம்; 1999–2000 ஆம் ஆண்டிலே உயர்வு என்ன தெரியுமா? ஆச்சரியப்பட வேண்டும், எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள் 31.2 சதவிகிதம் உயர்வு. இப்படி கருணாநிதி ஆட்சிக் காலத்திலே எப்படிப்பட்ட முறையில் அவர்கள் நிதி நிர்வாகத்தை மேற்கொண்டார்கள், ஆட்சியை நடாத்தினார்கள், கையிலே பணம் இல்லாமல் திட்டங்களை அறிவிப்பதும், அறிவித்த திட்டங்களை ஈடேற்றாமல் மக்களை ஏமாற்றுவதும் கருணாநிதிக்குக் கோயபல்ஸ் தத்துவம் என்ற முறையிலே கைவந்த கலையேயன்றி,



2005 செப்டம்பர் 29] [திரு. சி. பொன்னையன்]

எங்களது அம்மாவின் ஆட்சியைப் பொறுத்தவரைக்கும் கையிலே பணம் இல்லையென்றாலும், நீங்கள் பணம் தர மறுத்தீர்கள், டெல்லியைத் தூண்டிவிட்டு பணம் இல்லாமல் செய்தீர்கள், பணம் பெறக்கூடிய கடன் நிறுவனங்களையெல்லாம் தூண்டிவிட்டுத் தடைகளை உருவாக்கினீர்கள். ஆனாலும், நாளுக்கு 20 மணிநேரம் உழைக்கின்ற எங்களது புரட்சித் தலைவி தாய், தொலைநோக்குச் சிந்தனையோடு நல்ல வழிமுறைகளைக் கண்டறிந்து வீண் செலவுகளையெல்லாம் கட்டுப்படுத்திய காரணத்தால் எங்கெங்கு வரி ஏய்ப்பு இருக்கிறதோ, அவற்றையெல்லாம் கண்டுபிடித்த காரணத்தால் சொந்தக் காலிலே நின்று பிறர் உதவி இல்லாமல் நிதி ஆதாரத்தைப் பெருக்கிய காரணத்தால் இப்படிப்பட்ட உன்னத நிதிநிலை அறிக்கைகளை, அறிவிப்புகளைத் தருகிறார். மக்கள் போற்றும் அறிவிப்புகளைத் தருகிறார். ஏழைகளுக்கான அறிவிப்புகளைத் தருகிறார். உங்களுக்குத் தாங்க முடியவில்லை. வயிற்றெரிச்சல்; எனவேதான் உண்மைக்கு மாறான புளுகு மூட்டைகளைப் பத்திரிகையில் கட்டவிழ்த்துவிடுகிறீர்கள். அவையிலும் ஆற்காடு வீராசாமி மூலம், பொன்முடி மூலம் தவறான தகவல்களை அவைக்கு நீங்கள் தரச் சொல்கிறீர்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடுகளைச் சட்டமன்றத்திலிருந்து பெற்றார்களேயொழிய அச்செலவினங்களை மேற்கொள்ளத் தேவையான நிதி ஆதாரங்களை அறவே திரட்டத் தவறிவிட்ட காரணத்தால் தமிழ்நாட்டைத் திவாலான நிலைக்கு எடுத்துச் சென்றவர்கள் அவர்கள் என்பதனை இந்த ஆதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அவர்கள் விடுபட்டச் செலவினங்களை சுமார் 4,000 கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டியல்களுக்கெல்லாம் பொறுப்பேற்று, அந்தப் பாக்கிகளை எல்லாம் தந்து இன்று செம்மையான முறையிலே மக்களுக்கு, மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து வருவதை நாடு போற்றுகிறது. அவர்கள் பொறாமையில், பொறாமைத் தீயில் காய்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஆற்காடு வீராசாமி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மின்

கட்டணங்கள் நிர்ணயித்தல் விதி முறை 2005 பிரிவு 4 (5)–ன்படி மின் கட்டணமானது, எந்த ஒரு நுகர்வோருக்கும் அடக்க விலையைவிட 150 சதவிகிதத்திற்கு மிகாமலும் அடக்க விலையைவிட 50 சதவிகிதத்திற்குக் கீழே போகாமலும் மின் கட்டணம் நிர்ணயிக்க ஒழுங்குமுறை ஆணையம் முயற்சி செய்யும் எனக் குறிப்பிட்டுள்ளதால் இலவச மற்றும் குறைந்த விலையில் மின் கட்டணம் அனுபவித்துவரும் நுகர்வோர்களுக்கு மின் கட்டண உயர்வு ஏற்படுமோ என ஓர் அச்சத்தை இந்தப் பேரவையில் எழுப்பினார். இந்த அச்சம் முற்றிலும் தேவையற்றது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தற்போது அறிவித்துள்ள விதிகளானது மின் கட்டணம் நிர்ணயம் செய்யும்போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் ஆகும். தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது விவசாய மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள குடிசை இணைப்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி வருகிறது. மேலும், வீட்டு மின் உபயோகிப்பவர்களுக்கு குறைந்த விலையில் மின்சாரம் வழங்கி வருகிறது. மின்சாரச் சட்டம் 2003 பிரிவு 65–ன்படி மின்சார வாரியத்திற்கு அரசு மின் கட்டண மானியம் வழங்கி, மேற்படிச் சலுகைகளை நுகர்வோர்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டணங்கள் நிர்ணயித்தல் விதி முறை 2005 அறிவித்த பின்னரும்கூட, இலவச மற்றும் சலுகை விலையில் மின்சாரம் வழங்க சட்டம் 2003 பிரிவுகள் 65 மற்றும் 108 வழிவகை செய்கின்றன என்பதனை திரு. வீராசாமி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அரசு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், ஊரகப் பகுதிகளில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கவும், வீட்டு மின் நுகர்வோர்களுக்குச் சலுகைக் கட்டண மின்சாரம் தொடர்ந்து வழங்கவும் மின்சாரச் சட்டம் 65–வது பிரிவின்படி மானியம் வழங்கி உதவி செய்யப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–55

அடுத்து, நிதிநிலைமை பொறுப்புடைமைச் சட்டத்தை இயற்றி அதில் குறிப்பிட்ட இலக்குகளை எய்தியுள்ள ஒருசில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. இந்நிலை, இந்நிதி நிலைமை சமன்பாட்டு நடவடிக்கைகளினால் ஏழையெளியோர் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதி செய்திருக்கிறார்கள். பொருளாதார வளர்ச்சிக்கும், பொது நிதியின் வளர்ச்சிக்கும், ஏற்றதொரு மத்திய தரக்கால நிதிநிலைச் சீரமைப்புத் திட்டமொன்று, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய



பார்வையில், மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருவதை அவை அறியும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதால், 2001 ஆம் ஆண்டு மே திங்களில் தமிழக நிதிநிலையில் காணப்பட்ட சீர்கேடு, இன்று வெற்றிகரமாகக் களைந்தெடுக்கப்பட்டு, இந்தியாவின் முதல் மாநிலம் என்னும் இலக்கினை நோக்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய செயல்பாட்டால், தமிழகம் பீடுநடை போட்டுச் செல்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2002–2007 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட பத்தாவது திட்ட காலத்திற்காக ரூபாய் 40 ஆயிரம் கோடி என்னும் அளவிற்கு, பெரும் வளர்ச்சித் திட்டத்தை, இத்தகைய நிதி நெருக்கடிகளைச் சமாளித்து, உயர்த்திக்காட்டி, 40 ஆயிரம் கோடி ரூபாய் என்ற ஒரு பெருந்திட்டத்தை, வளர்ச்சித் திட்டத்தை, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையாக அறிவித்த பெருமை, பொருளாதார நிபுணராகச் செயல்படும் புரட்சித் தலைவி அம்மா அவர்களையேச் சாரும் என்பதனைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டபோதிலும், 2002–2003 ஆம் ஆண்டிலிருந்து, ஒவ்வொரு ஆண்டிலும் திட்ட இலக்குகள் எய்தப்படுகின்றன. அதுமட்டுமல்ல, திட்ட இலக்குகள் மிஞ்சப்படுகின்றன. மற்ற மாநிலங்கள் அம்மாவைப் பாராட்டுகின்றன. ஏன், மைய அரசினுடைய பல துறைகள்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிதித் துறையை, நிதி நிலைமைகளைக் கையாளுகின்ற விதத்தைப் பாராட்டிப் புகழ்வதை நாடு இன்று பார்த்துக்கொண்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்ல, 2001–2002 ஆம் ஆண்டில் இருந்த 1,177.91 கோடி ரூபாய் என்னும் அளவில் இருந்த மூலதனச் செலவை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Revenue expenditure–ஐக் குறைக்க வேண்டும். மாறாக, Capital expenditure–ஐ அதிகப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் வளர்ச்சித் திட்டங்கள்தான் நீடித்த நலனை மக்களுக்கு, ஏழை மக்களுக்கு, சமுதாயத்திற்குத் தரும் என்ற நோக்கோடு, அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக 2001–லேயிருந்த 1,177.91 கோடி ரூபாய் மட்டுமே என்று இருந்த மூலதனச் செலவு, மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சியால், 4,791.6 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருப்பதை இன்று அனைவரும் பாராட்டுகிறார்கள். ஒட்டுமொத்தச் சமூகப் பாதுகாப்பு வளையத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டிற்கு 7,528 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள். இது சாதாரணச் சாதனை அல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பொன்மனச்

[திரு. சி. பொன்னையன்] [2005 செப்டம்பர் 29

செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் ஏழைகளின் நலனையே தன் இதயத்தில் தேக்கி வைத்து, ஆட்சி நடத்துகிற காரணத்தால், இது ஒரு பெரும் சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளியவர்களுக்கு அளிக்கும் மாபெரும் சமூகப் பாதுகாப்பு. எனவேதான், ஏழையெளியவர்களுக்கு சமூகப் பாதுகாப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காக, ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல, 7,528.09 கோடி ரூபாய் என்ற உச்ச நிலையை எட்டியிருக்கிறார். அம்மா தனது முயற்சியால் இதைச் சாதித்திருக்கிறார் என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, இந்தியாவிலேயே தமிழகம்தான் ஓர் அமைதிப் பூங்காவாக இன்று விளங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குச் சிந்தனையும், அணுகுமுறையும், காவல் துறையை அவர் நடத்துகின்ற அருமையான பாங்கும்தான் காரணம் என அகில இந்தியாவே இன்று பாராட்டிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான், காட்டுக் கொள்ளையன் வீரப்பனின் அத்தியாயத்திற்கு பொன்மனச் செல்வி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு முடிவு கட்டியது, உலக வரலாற்றிலே சிறப்பானதொரு பெயரைப் பெற்றிருக்கிறது. வெளிநாடுகளே இதைப் பாராட்டக்கூடிய ஒரு சாதனையை அம்மா செய்திருக்கிறார். காவல் துறைக்கு ஏன் அதிக நிதி, நிதி என்று அங்கலாய்க்கின்ற தி.மு.க.வினர் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் அங்கலாய்க்கிறீர்கள். காரணம், வீரப்பன் சாகாமல் இருந்திருந்தால், சன் டி.வி. மூலமோ அல்லது காட்டிலே உள்ள பொருள்கள் மூலமோ உங்களுக்கு ஆதாயம் கிட்டியிருக்கும். அவன் இல்லையே என்ற வேதனை உங்களுக்கு இருக்கிறது. ஆனால், அந்தக் கொடியவன் வீரப்பன் ஒழிக்கப்பட்டதை இந்தியா பாராட்டுகிறது. பிற நாடுகள் பாராட்டுகின்றன. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவல் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, நவீனப்படுத்தி, இந்தியாவிலேயே தலைசிறந்த காவல் துறை, புரட்சித் தலைவி அம்மாவினுடைய தலைமையில் இயங்குகிற காவல் துறை என்று ஈடேற்றிக் காட்டியதால் ஏற்பட்ட வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) இது அம்மாவின் வெற்றி. ஆனால், உங்களுக்கோ வயிற்றெரிச்சல். மற்றும், மாநிலக் காவல் துறையில் மகளிர் அதிரடிப்படை இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் பல மாநிலங்கள் பின்பற்றக்கூடிய அளவில், அதற்கு நிதியினை ஒதுக்கி, அதைச் சிறப்பு நிலைக்கு எடுத்துச் சென்ற பெருமை அம்மாவைச் சாரும். இரு மகளிர் அதிரடிப்படை அடங்கிய 1,078 மகளிர் காவலர்களைக் கொண்ட அனைத்து நிலை மகளிர்



2005 செப்டம்பர் 29] [திரு. சி. பொன்னையன்]

காவல் படை அமைத்து—இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, அதிக நிதியினை ஒதுக்கி, இந்த இரு மகளிர் அதிரடிப்படையை அமைத்தது தலைசிறந்த ஒன்று, முதன்மையான ஒன்று என்ற, நல்ல பெயரைத் தமிழகத்திற்கு வாங்கித் தந்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) 196 காவல் துறை உட்கோட்டங்கள் அனைத்திலும், ஒவ்வொரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தை உருவாக்கியுள்ள ஒரே மாநிலம், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான். ஏன் காவல் துறைக்கு நிதி அதிகம் என்று கேட்கின்ற தி.மு.க.காரர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எத்தகைய பெருமையை மக்கள் நலனுக்காக காவல் துறையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 11–00*

அதுமட்டுமல்ல. தமிழகத்தில் எந்த காலத்திலேயுமே, உலக வரலாற்றிலேயே, நமது பூமி வரலாற்றில் இல்லாத அளவிற்கு சுனாமி நம்மைத் தாக்கியது. மைய அரசோ உதவி தர தயக்கம் காட்டியது. காலத்தே உதவியினைத் தரவில்லை. போதிய உதவியையும் தரவில்லை. கவலைப்படவில்லை புரட்சித் தலைவி. மைய அரசோ கொடுக்க வேண்டிய நிதியினையும் தரவில்லை. எங்கள் சொந்த நிதியிலிருந்து அம்மாவின் முயற்சியால் சேகரிக்கப்பட்ட நிதியை வைத்து மக்களின் துயரத்தைப் போக்கும் வண்ணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிவாரணப் பணிகளை, போர்க்கால அடிப்படையில் வழி நடத்தி பல்வேறு நிவாரண உதவிகளை மைய நிதி உதவி முறைப்படி காலத்தே கிடைக்காத நிலையிலும், அந்தச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அகில இந்தியாவே, ஏன், பிற நாடுகளே, வெளிநாடுகளே, வெளிநாட்டுத் தலைவர்களே பாராட்டக்கூடிய அளவிற்கு சுனாமி நிவாரணப் பணிக்கு அதிகப்படியான நிதியினை ஒதுக்கி, அந்த மீனவர்கள், மற்றவர்களுடைய துயரைத் துடைத்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையேச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி )

அனைவருக்கும் கல்வித் திட்டம் அனைத்து மாநிலங்களிலும்தான் நடைமுறையில் இருக்கிறது. ஆனால், நல்லதொரு தலைமை அந்த மாநிலத்தை ஆண்டால்தான், அந்தத் திட்டம் வெற்றிபெறும். அதற்கு எடுத்துக்காட்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். முதலமைச்சர்களுக்கு எல்லாம் தலைசிறந்த முதலமைச்சராக புரட்சித் தலைவி விளங்குகிறார் என்பதற்கு ஒரே எடுத்துக்காட்டு,

[திரு. சி. பொன்னையன்] [2005 செப்டம்பர் 29

அனைவருக்கும் கல்வித் திட்டம் அனைத்து மாநிலங்களிலும் இருக்கிறது. ஆனாலும், தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவின் தலைமையிலுள்ள அரசுதான் இந்தியாவிலேயே இந்தத் திட்டத்தைப் பிற மாநிலங்கள் பின்பற்ற வேண்டிய அளவிற்கு, ஈடேற்றியிருக்கிறது என்று சொல்வது நான் அல்ல, மைய அரசினுடைய கல்வி அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களே சொல்லக்கூடிய அளவிற்குத் தரமான தலைமை அறிவுசால் தலைமை, நிர்வாகத்தைச் செம்மையாக நடத்தக்கூடிய தலைமை இருக்கின்ற காரணத்தினால் – மைய அரசின் திட்டம் அனைவருக்கும் கல்வித் திட்டம், காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களுக்குக் கிட்டாத பெருமை, பிற மாநிலங்களுக்குக் கிட்டாத பெருமை, அம்மாவின் நிர்வாகத் திறனுக்கு கிடைத்த சாட்சிதான், மைய கல்வி அமைச்சர் அர்ஜுன் சிங் பாராட்டு; அப்படிச் செய்கின்ற, செய்திருக்கின்ற ஆட்சி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி.

ஒன்றாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும், இந்தியாவே பாராட்டுகின்ற சாதனையாக நிதியினை ஒதுக்கி இலவசமாக அனைவருக்கும் புத்தகங்களை வழங்கக்கூடிய ஆணையிட்டு, மக்கள் வயிற்றிலேப் பாலை வார்த்து இருப்பதும், நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவும் ஓர் அகில இந்திய சாதனைத் திட்டம் ஆகும்.

அதைப்போலவே 11, 12 ஆம் வகுப்பிலேப் பயிலுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இலவச சைக்கிள் இல்லை. நிதியாதாரம் கொஞ்சம், கொஞ்சம் கிடைக்கின்ற போதெல்லாம், அந்த நிதியை ஏழைகளுக்கு எப்படிச் செலவு செய்வது என்று எண்ணுவதே 24 மணி நேர சிந்தனை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு. நிதியாதாரம் ஓரளவிற்கு வந்தவுடன் எண்ணினார். பட்டித்தொட்டி பிள்ளைகள் எல்லாம், பள்ளிகளுக்கு தொலைதூரம் செல்லுகின்ற பிள்ளைகள் எல்லாம், அவர்கள் படிப்புப் பாழாகிவிடக்கூடாது, அவர்களுக்கு உதவ வேண்டுமென்ற உன்னத இதயத் துடிப்போடு புரட்சித் தலைவி அறிவித்த திட்டமான இலவச சைக்கிள்கள் அனைத்துப் பிள்ளைகளுக்கும் 11, 12 ஆம் வகுப்பில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு என்று அறிவித்த திட்டத்தை அகில இந்தியா பாராட்டுகிறது. மைய அரசே பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு அதிகப்படியான நிதி ஆகுமே என்று



2005 செப்டம்பர் 29] [திரு. சி. பொன்னையன்]

கவலைப்படாமல், ஏழைகள் நலனே எனது நலன் என்று கருதுகின்ற தாய், நிதியொதுக்கம் அதிகம் என்று கவலைப்படாமல் இப்படிப்பட்ட சாதனையை செய்திருக்கின்ற அரசுதான் அம்மாவினுடைய அரசு.

அதைப்போலவே மழை நீர் சேகரிப்புத் திட்டம். இதைப்பற்றி அவையிலே பலமுறை சொல்லியிருக்கின்றோம். அம்மாவினுடைய மகத்தான அகில இந்திய சாதனைக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

சென்னைவாழ் மக்கள் எக்கேடு கெட்டால் என்ன, அவர்கள் எப்படித் தத்தளித்தால் என்ன, அவர்களுக்குத் தண்ணீர் கிட்டினால் என்ன, கிட்டாவிட்டால் என்ன, தன் குடும்பம் வளர வேண்டும் என்று வீராணம் திட்டத்தை அந்தக் காலத்தில் கொண்டுவந்த அரசுதான் திரு. கருணாநிதியினுடைய தி.மு.க. அரசு. நாடு அதை நன்கு அறியும். சத்தியநாராயணனுடைய தற்கொலைக்கும் அந்தத் திட்டமே காரணம் என்பதை கருணாநிதி அவர்களும் தெளிவாக அறிவார்கள். அவர் குடும்பத்தைப் பற்றி கவலைப்படுகிறார்; பேரப் பிள்ளைகளைப் பற்றி கவலைப்படுகிறார். ஆனால், தமிழகத்துத் தலைநகரான சென்னைவாழ் மக்களினுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி அன்று கவலைப்படாத காரணத்தினால், தோற்றுவிட்ட திட்டம், வீராணம் திட்டம். அந்தத் திட்டம் மீண்டும் வந்துவிட்டால் தனது தவறுகள் மக்கள் மத்தியில் தொடர்ந்து இருக்குமே என்ற அச்சம் காரணத்தினால் வீராணம் திட்டத்திற்கு எத்தனையோ முட்டுக்கட்டைகளைப் போட்டார்கள்; சவால்களை விட்டார்கள். எஸ்.ஆர்.பி. சவால் விட்டார். ஜி.கே. மணி அறைகூவல் விட்டார். ஆனாலும்கூட, எடுத்ததை முடிப்பேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சூளுரைத்து செயல்படக்கூடிய, திண்ணிய உள உரன் படைத்த, எதற்கும் அஞ்சா சிங்கமாக விளங்குகின்ற அறிவுசால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட திட்டம்தான் அந்தப் புதிய வீராணம் திட்டம்.

*முற்பகல் 11–05*

720 கோடி ரூபாய் செலவிலே, காலத்தே அந்தத் திட்டத்தை ஈடேற்றி, முடியாது என்ற திட்டத்தை முடித்து, சென்னைவாழ் மக்கள் வயிற்றிலே பாலை வார்க்கின்ற வகையிலே, அவர்களுக்குக் குடிநீர்த் திட்டத்தைத் தந்திருக்கின்றார். நிதியுதவியைத் தந்து, நிதியாதாரத்தைத் திரட்டி, சென்னைவாழ் மக்கள், தலைநகரத்து மக்கள் தவிக்கக் கூடாது என்பதற்காக நல்லாட்சி நடத்துகிற அரசு, அத்தகைய நிதி நிர்வாகத்தைக் கையாளுகிறவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயே, முதன்முறையாக, தொடர்ந்து சென்னைக்கு ஏற்படுகின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பது, தொலைநோக்குச் சிந்தனை. மைய அரசு உதவுகிறது, உதவுகிறது என்று சொன்னார்கள். உதவிவிட்டோம் என்றுகூடச் சொன்னார்கள். புளுகு மூட்டைகளைக் கட்டவிழ்த்துவிடுகிறார்கள். ஒதுக்கப்பட்ட பணமோ, ஆயிரம் கோடி ரூபாய். ஒதுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட பணம், ஆயிரம் கோடி ரூபாய்; ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட பணம் ஆயிரம் கோடி ரூபாய். அகில இந்தியாவிற்கே அந்தப் பணம் என்று சொன்னார்கள். தமிழகத்திற்கு சல்லிக் காசுகூடத் தரவில்லை. பிச்சை எடுப்பதா? அவர்களிடம் இதைத் தட்டிக் கேட்டாலும் கிடைப்பதாக இல்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சொந்த நிதியாதாரத்தை வைத்து, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, சென்னையிலே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று திட்டங்களைத் தீட்டினார். பிறகுதான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு நாளைக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைச் சுத்திகரிக்கும் இந்தத் திட்டத்தை, நடைபெறாது, நடைமுறைப்படுத்த முடியாது என்று சொன்னவர்கள் எல்லாம், வாயடைத்துப்போய் நிற்கின்ற அளவுக்கு, இந்தத் திட்டத்தின் சாதனையைத் தங்களுக்குச் சாதகமாகக் கொண்டு செல்லலாம் என்று கற்பனை கண்டவர்களுக்கெல்லாம் அவர்கள் எண்ணத்திலே மண்ணைப் போட்டு, இன்று தமிழகத்து மக்கள் மகிழக்கூடிய அளவுக்கு கடல் நீரைக் குடிநீராக்குகின்ற திட்டத்தைத் தமிழகத்திற்குத் தந்திருக்கின்ற தலைவி, இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக இதைத் தந்திருக்கின்ற தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போலத்தான், 'நமது கிராமம்' என்ற ஒரு திட்டத்திற்கு 200 கோடி ரூபாய்க்கு அம்மா அவர்கள் நிதியொதுக்கியிருக்கிறார்கள். சிக்கனப்படுத்தி, சேமித்த பணத்தைக் கொண்டு, கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்பது, அம்மாவினுடைய எண்ணம். 60, 70 சதவிகிதத்திற்கு மேல் வாழ்கிற மக்கள், கிராமத்து மக்கள், வறிய நிலையிலே இருக்கின்ற மக்கள், வாழ்க்கைத்தரத்திலே உயர வேண்டிய நிலையிலே இருக்கிற மக்கள், கிராமத்திலே இருக்கிற மக்களினுடைய, சாதாரண மக்களினுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்பதிலே, தலையாய அக்கறை கொண்டு,



கிராமப்புற மக்களின் பாதுகாவலராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலங்குகிற காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கியிருக்கிறார்.

பெண்கள் நலனே தன் நலன் என்று கருதுகின்ற தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஒரு வீட்டிலே ஒரு மகள், வீட்டிலே இருக்கிற பெண் — பெண்ணை நாம் பெண்ணாகக் கருத வேண்டும். அந்தப் பெண்ணைத் தாயாகக் கருத வேண்டும். அந்தப் பெண்ணைத் தெய்வமாகக் கருத வேண்டும். அந்தப் பெண்ணுக்கு முக்கியத்துவம் தரவேண்டும். அப்படி நடக்கின்றபோதுதான், அந்தக் குடும்பத்தில் சுபிட்சம் ஏற்படும். வீட்டிலே பெண்கள் மனத்திலே சந்தோஷம் இருந்தால், குடும்பத்திலே சந்தோஷம் ஏற்படும். அந்தக் குடும்பத்திலே சந்தோஷம் இருந்தால், நாட்டிலே மகிழ்வு மிளிரும் என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர், நமது புரட்சித் தலைவி அம்மா. அதைச் செயல்படுத்துகிற பல திட்டங்களில் ஒரு திட்டமாகத்தான் 294 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி, அகில இந்திய சாதனையாக, மகளிர் சுகாதார வளாகங்களை அமைத்து, அனைத்து இந்தியாவின் பாராட்டுதலையும் தற்போது பெற்றுக் கொண்டிருக்கிறவர்தான் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா.

திரையுலகம் மகிழ்ச்சிக் கடலில் இன்று மூழ்கியிருக்கிறது. காரணம், Video Piracy–இந்தத் திருட்டைத் தடுத்தது புரட்சித் தலைவியினுடைய சாதனை. எதிரிகளோ, பொறாமைத் தீயிலே மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரைக்கும், ஆலயங்களில், அன்னதானத் திட்டத்தின் மூலம், 1,87,76,118 ஏழை மக்கள் பலனைப் பெறக்கூடிய இந்தத் திட்டத்தை இன்று பல ஆலயங்களில் நடைமுறைப்படுத்தி வருகிறார். இந்தியாவிலே, எந்த மாநிலத்திலேயும் இப்படிப்பட்ட ஒரு புனிதத் திட்டம் இல்லை. புண்ணியத்தைத் தரும் திட்டம் என ஏழைகள் அம்மாவை நெஞ்சார வாழ்த்துகிற திட்டத்தை, இந்தியாவின் முன்னோடித் திட்டமாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வெளிநாட்டுக்காரர்கள் இந்தியாவிற்கு முதலீடு செய்ய வருகிறார்கள். சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார்கள். பிறகு, நமது

பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள் நேற்று கூறியதைப்போல, "எங்கே அம்மா ஆட்சி?" என்று தேடுகிறார்கள். தமிழகத்தை நோக்கி வருகிறார்கள். தமிழகம்தான் இந்தியாவின் அயல்நாட்டு முதலீட்டாளர்கள், முதலீடு செய்ய ஏற்ற 3 சிறந்த இடங்களில் ஒன்றாகத் தற்போது உருவாகியிருக்கிறது. Nokia, BMW போன்ற பெரும் பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் முதலீடு செய்ய, சென்னையைச் சிறந்த இடமாகத் தெரிவு செய்துள்ளன. Nokia நிறுவனம், 675 கோடி ரூபாய் முதலீட்டில் செல்லிடத் தொலைபேசி தயாரிக்கும் தொழிற்சாலையை, ஸ்ரீபெரும்புதூரில் அமைத்து வருகிறது. Saint Gobain நிறுவனம், சென்னை அருகில், அதன் உற்பத்தி அளவை, 800 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவுபடுத்தி வருகிறது. 1,400 கோடி ரூபாய் என்ற ஒட்டுமொத்த முதலீட்டையும் சேர்த்து, அந்த நிறுவனம் உலகில் வேறு எந்தப் பகுதியிலும் செய்திருக்கின்ற முதலீட்டைவிட, அதிகமான முதலீடு, தமிழகத்தில் செய்திருக்கிறது என்ற ஒரு சிறந்த சாதனையை எய்தியிருக்கிறது.

*முற்பகல் 11–10*

2004–ல் இப்படி இந்தியாவே அம்மாவைக் கண்டு வியக்கிறது, பாராட்டுகிறது. இப்படித் தொழில் முதலீட்டாளர்கள் எல்லாம் தமிழகத்தை நோக்கி ஓடி, ஓடி வருகிறார்கள். வேலைவாய்ப்பைப் பெருக்குகிறார்கள், தொழில் புரட்சியை உருவாக்குகிறார்கள். மாநில வருவாய் அதனால் வருகிறது. ஏன், மைய அரசுக்குக்கூட வருவாய் நிறைய கிட்டுகிறது. இந்தியாவிலுள்ள பிற மாநிலங்கள் பாராட்டுகின்றன. ஆனால், தமிழகத்தினுடைய சுயநலமிகளுக்கோ ஆற்றாமை, பொறாமை; அதில் மூழ்குகிறார்கள்; அந்த வேதனையில் அவர்கள் துடிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே முதன்முறையாக இன்னும் ஒரு உன்னதத் திட்டத்தை நிதியொதுக்கீடு செய்து, ஏழைகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தந்துகொண்டிருக்கின்ற தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்குச் சொந்தமாக நிலம் வாங்குவதற்கு தனி நபர் பயனீட்டாளர்கள் என்ற முறையிலே விவசாயிகளுக்கு, அவர்களுக்கு நிலத்தை ஒதுக்குவதற்காக, சொந்த அசையாச் சொத்தை அவர்களுக்குத் தருவதற்காக, பொருளாதாரப் பலனை அவர்கள் பெறுவதற்காக இந்தியாவிலேயே முதல் முறையாக நிதியினை ஒதுக்கி, அந்தத் திட்டத்தைத் தந்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும். தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிகரற்ற தலைவி என்று





சமுதாயத்தில் நலிந்த பிரிவு மக்களெல்லாம் அம்மாவை வாழ்த்தி மகிழக்கூடிய திட்டமாக இந்தத் திட்டத்தை இன்று அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

அதைப்போலவே, இளைஞர்களும், இளைய சமுதாய மாணவ, மாணவியர்களும் பாராட்டக்கூடிய அளவிற்கு உன்னதத் திட்டங்கள் பலவற்றை விளையாட்டுத் துறையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். விளையாட்டு வீரர்களுக்கு, வீராங்கனைகளுக்கு அம்மா தருகின்ற ஊக்கம், அவர்களுக்கு அம்மா தந்து கொண்டிருக்கிற கட்டமைப்பு வசதிகள், அவர்களுக்குள்ள கருவிகள் போன்றவை சாதாரணச் சலுகை அல்ல. எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்தச் சலுகைகளைத் தந்துகொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கண்டு எங்கள் ஒப்பற்ற தலைவி அம்மாதான் என்று மாணவ சமுதாயமும், இளைஞர் பட்டாளமும் எங்கள் அம்மாவைப் போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டிலே மைய அரசை–எஸ்.ஆர்.பி. சொன்னார். பலர் சொன்னார்கள். டெல்லியைப் பொறுத்தவரைக்கும் பெட்ரோல், டீசல் விலையை வெகுவாக உயர்த்திக்கொண்டே போகிறது. ஆதாயத்தின் அடிப்படையிலோ அல்லது என்ன காரணத்தாலோ உயர்த்திக்கொண்டு செல்கிறார்கள். ஏழைகளைப்பற்றி கவலையில்லை, பேருந்துகளில் செல்லுகின்ற ஏழைகளைப் பற்றியும் கவலை இல்லை, மற்ற வாகனங்களில் செல்லுகின்ற ஏழைகளைப் பற்றியும் கவலை இல்லை. டீசல், பெட்ரோல் விலையை மைய அரசு உயர்த்திக்கொண்டே போகிறது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அப்படிப்பட்ட டீசல் விலை உயர்வு இருந்தபோதிலும்கூட போக்குவரத்துக் கழகங்களுக்கு பாதிப்பு என்று வந்தாலும்கூட பரவாயில்லை, பேருந்துகளைப் பயன்படுத்துகின்றவர்கள் ஏழை எளிய மக்கள், பாமர பாட்டாளி மக்கள், அவர்களுக்கு எந்த ஒரு பணச் சுமையும் வந்துவிடக் கூடாது, எப்படிப்பட்ட நட்டம் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்டாலும் சரி, பேருந்துக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று இந்தியாவிலேயே ஓர் உன்னதமான முறையிலே இந்த நடைமுறையைக் கடைப்பிடித்து, இன்று 5 முறை டீசல் விலை உயர்ந்த போதிலும்கூட பொது மக்களைப் பாதுகாக்கும் வகையில் கட்டணத்தை உயர்த்தாமல், அம்மா அவர்கள் இருப்பதை நாடே பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் பாதுகாவலர் எங்கள் தங்கத் தாரகை

புரட்சித் தலைவி அம்மா என்று தமிழகம் புகழ்கின்றது. ஆனால், அரசியல் எதிரிகளினுடைய கூடாரத்திலோ அம்மாவினுடைய இப்படிப்பட்ட சாதனைகளால் அந்தக் கூடாரத்தின் அஸ்திவாரமே இன்று கலகலத்துப் போய் இருக்கிறது, நிலை தடுமாறுகிறது, அது இடிந்துவிடும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

கடந்த 4 ஆண்டுக் காலத்தில் 3 ஆண்டுகளில் வறட்சி நிலை நிலவியபோதும், எவ்வித மின் வெட்டுமின்றி, தமிழ்நாடு மின் வாரியம் பொதுமக்கள், தொழில் துறையினர், விவசாயிகள் பாராட்டக்கூடிய அளவிற்குத் தங்கு தடையற்ற மின்சாரம் அம்மாவின் ஆட்சியிலே – இது அம்மாவின் சாதனை என்று அகில இந்தியாவே பாராட்டக்கூடிய அளவிற்கு மின்சாரத் துறை அம்மாவினுடைய நேரடிப் பார்வையிலே – இன்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அகில இந்தியாவிற்கே இது ஒரு மாபெரும் சாதனை என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஏற்கெனவே அம்மா அவர்கள் அறிவித்துவிட்டார்கள். அதை நான் சொல்ல வேண்டியதில்லை. விவசாயிகளுக்குக் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் விலை கொடுப்போம் என்று சொன்னார்கள். ஏமாற்றினார்கள். வாக்குறுதியைத் தந்துவிட்டு, காற்றில் பறக்கவிட்டு மக்களை ஏமாற்றுவது, மக்கள் வயிற்றில் அடிப்பது கடந்த காலத்தில் தமிழகத்தை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக கருணாநிதி அவர்களின் கை வந்த கலை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண் பெருமக்களின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், கரும்பு விவசாயிகளுக்குக் கரும்பின் விலையை டன் ஒன்றுக்கு ரூ. 1,014/– என்றும், சராசரி சர்க்கரைக் கட்டுமானமாகிய 9 சதவிகிதத்தை விஞ்சும் ஒவ்வொரு 0.1 சதவிகிதத்திற்கும் ரூ. 8.80 என்றும் ஊக்கத் தொகை அறிவித்து, இன்று விவசாயிகள் வயிற்றிலே பாலை வார்த்திருக்கிறார்கள். தமிழகத்தின் அனைத்துப் பிரிவு விவசாயிகளும் அம்மா வாழ்க, அம்மா வாழ்க என்று ஆங்காங்கே அவர்கள் வாழ்த்துக் கூட்டங்களைப் போட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வயிற்றெரிச்சலில் ஏதேதோ புளுகு மூட்டைகளை முரசொலியிலே கருணாநிதி அவிழ்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால், விவசாயிகளோ அம்மாவை தெய்வம் என வாழ்த்துகிறார்கள்.



முற்பகல் 11–15

இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய அளவிற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி அவர்கள் வாழ்க்கையிலே, ஏழையெளியவர்களுடைய வாழ்க்கையிலே ஏகப்பட்ட நலனை உருவாக்கித் தருகிறார் அம்மா. ஆனால் ஏழைகள் நன்றாக இருந்தால், அம்மாவிற்கு அல்லவா செல்வாக்கு என்று அந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வளர்வதைக்கூட கண்டு ஆற்றாமல், பொறாமையிலே வெந்து சாகின்றார்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக தி.மு.க. தலைவர் என்பதனை அவைக்கு நான் கூற விரும்புகிறேன்.

I.T. Department, எல்லோருக்கும் தெரியும். I.T. Department தன்னால்தான் முன்னுக்கு வந்தது என்று கருணாநிதிக்கு, he is having always an ego. Ego with substance may be alright, but Karunanidhi's ego is totally without substance. இதை மக்கள் அறிவார்கள். சிறந்த அறிவாளி என்று அவரை எல்லோரும் பாராட்ட வேண்டும். அவரே தன்னைப் பற்றிதான் புகழ்ந்துகொள்வார். சாதனையாளர் என்று எல்லோரும் பாராட்ட வேண்டும். சாதனையைச் செய்யாமலேயே 'செய்தேன், செய்தேன் என்று தொலைக்காட்சி இருக்கிற காரணத்தால் விளம்பரத்தைச் செய்து, தவறான விளம்பரத்தைச் செய்து தனக்குத் தானே விளம்பரத்தை, பெருமையைத் தேடிக்கொள்வதில் கருணாநிதிக்கு நிகர் கருணாநிதிதான். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு தங்கு தடையற்ற—uninterrupted power supply, தங்கு தடையற்ற மின்சாரத்தைத் தமிழகத்திற்குத் தந்த காரணத்தால், அடிப்படை வசதிகளை அளவுகடந்த முதலீட்டிலே அளப்பரிய முறையிலே உருவாக்கித் தந்த காரணத்தால், உலக நாடுகளிலுள்ள அந்த Electronics and Communication, Computer line–ல் இருக்கின்றவர்கள் எல்லாம் அம்மாவினுடைய அரசை நாடி வருகிறார்கள். அப்படி வந்து பல தொழில்களைத் தொடங்குகிறார்கள். அதன் விளைவாக இன்று 10,000 கோடி ரூபாய் அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதி செய்யக்கூடிய சாதனையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எட்டி இருப்பதற்குக் காரணம், தனிப்பட்ட முறையிலே I.T.—Information Department–ஐப் பொறுத்தவரைக்கும் அம்மா அவர்களுடைய நேரடிப் பார்வையிலே, அவர்கள் கண்காணித்து வருகிற காரணத்தால், அதற்குப் போதிய நிதியை ஒதுக்கி, அந்தத் துறை வளர்வதற்கு அம்மா

அவர்கள் அச்சாணியாக செயல்படுகிற காரணத்தால், இப்படிப்பட்ட சாதனையை அம்மாவினுடைய ஆட்சி ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கும்மிடிப்பூண்டியிலும், காஞ்சிபுரத்திலும், தமிழக மக்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தங்களது தலைவி, நாட்டினுடைய தலைவி என்பதனை நிரூபித்துக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே ஒரு மக்கள் கூட்டணியை உருவாக்கினார்கள். தங்கத் தாரகை அம்மாவிற்கு தரணி போற்ற மணிமகுடம் தந்து காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி மக்கள் மகிழ்ந்தார்கள். வரும் 2006 தேர்தலிலும் 234 தொகுதிகளும் அம்மாவின் அசைக்க முடியாத கோட்டைகள் என்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) காஞ்சிபுரமும், கும்மிடிப்பூண்டியும் அந்த மக்கள் கூட்டணி மூலம் அச்சாரம் வகுத்தது. தமிழக மக்கள் அதை உணர்ந்து தற்போது மகிழ்கின்றார்கள். எங்களுக்கு, அம்மாவின் மக்கள் கூட்டணிக்குக் கிடைத்த மகத்தான வெற்றிக் கனி இது. ஆனால், காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி வெற்றிக் கனி தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும், தி.மு.க. கூட்டணியைப் பொறுத்தவரைக்கும், தி.மு.க.வை, தி.மு.க. தலைவர் கருணாநிதியினுடைய குடும்பத்தை மட்டுமே வளர்க்கின்ற அந்த ஏழு கட்சிக் கூட்டணிக்கும் சாவு மணி எனக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோ. இரவிராஜ்.

திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை. திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

திரு. ஆ ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை. திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

முற்பகல் *11–20*

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை. திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. சோ. இராசேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை. திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. துரை கி. சரவணன், இருக்கையில் இல்லை. திரு. துரை கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 29

திரு. ஜெக வீரபாண்டியன், இருக்கையில் இல்லை. திரு. ஜெக வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி டி. யசோதா, இருக்கையில் இல்லை. திருமதி டி. யசோதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜெ. அன்பழகன், இருக்கையில் இல்லை. திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.ஏ.எம். உசேன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்ஏஎம். உசேன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"2005–2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23–9–2005 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2005–2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் முழுமையாக வழங்கப்பெறுகின்றன.



2005 செப்டம்பர் 29]

**நிறைவேற்றப்பெற்ற 2005–2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்**

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை. | துறை. | வருவாய். | மூலதனம். | கடன். |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 5,00 | .. | .. |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 1,22,28 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 2,20,23 | .. | .. |
| 4 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 24,22,24 | .. | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 6,31,03 | .. | .. |
| 6 | கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு | 1,36,07 | 16,00,00 | .. |
| 7 | கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் | 97,08 | 1,00,00 | .. |
| 8 | கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–பால்வளம் | 12,00,34 | .. | .. |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 58,35,27 | .. | .. |
| 10 | வணிக வரித் துறை–வணிக வரிகள் | 50,01 | .. | .. |
| 11 | வணிக வரித் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 50,00 | .. | .. |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 361,53,20 | 2,53,88 | 3,46,70 |
| 13 | எரிசக்தித் துறை | 1 | .. | .. |

| கோரிக்கை. | துறை. | வருவாய். | மூலதனம். | கடன். |
|---|---|---|---|---|
| 14 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 1,04,63 | 7,20,00 | ... |
| 15 | நிதித் துறை | 25,00 | ... | ... |
| 16 | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் | 35,27,84 | 8,00,00 | 36,87,04 |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 38,13,71 | 1,04,00 | ... |
| 19 | உயர் கல்வித் துறை | 22,29,49 | ... | ... |
| 20 | நெடுஞ்சாலைகள் துறை | 79,45 | 5,00,07 | ... |
| 21 | உள் துறை—காவல் | 38 | 10,00,00 | ... |
| 22 | உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 23,69,02 | ... | ... |
| 23 | உள் துறை—சிறைச்சாலைகள் | 1 | 9,98,26 | ... |
| 24 | உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் | 12,90,00 | ... | ... |
| 25 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 17,07,86 | 5,00,00 | ... |
| 26 | தொழில் துறை | 37,00 | ... | 75,27,00 |
| 27 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் | 5,00 | ... | ... |
| 30 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 1 | ... | ... |
| 31 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 91,70 | 30,88 | ... |
| 32 | சட்டத் துறை | 1,10,00 | ... | ... |
| 33 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 78,32,01 | 9,00,00 | 117,75,00 |



| கோரிக்கை. | துறை. | வருவாய். | மூலதனம். | கடன். |
|---|---|---|---|---|
| 35 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 250,09,36 | 63,00 | ... |
| 37 | பொதுத் துறை | 9,72,07 | ... | ... |
| 38 | பொதுப் பணித் துறை | 3,64,16 | 33,33,00 | ... |
| 39 | வருவாய்த் துறை | 80,47,22 | ... | ... |
| 40 | ஊரக வளர்ச்சித் துறை | 76,87,98 | 188,00,03 | ... |
| 41 | பள்ளிக் கல்வித் துறை | 33,08,69 | ... | ... |
| 42 | சிறு தொழில்கள் துறை | 28,72,80 | ... | 1,72,61 |
| 43 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 80,82,18 | ... | ... |
| 44 | தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு | 72,00 | ... | ... |
| 46 | போக்குவரத்துத் துறை | 108,00,00 | 10,00,00 | ... |
| 47 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1,00,00 | ... | ... |
| | பெரு மொத்தம் | 1,374,62,33 | 307,03,12 | 235,08,35 |

## 3. அறிவிப்பு

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

[2005 செப்டம்பர் 29

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர். அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அரசினர் தீர்மானம்

### விதிகள் 30, 130, 132-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



2005 செப்டம்பர் 29]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2005) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2005), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 29

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2005 செப்டம்பர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2005).

திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் 11-7-2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2005) நிராகரிக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"11-7-2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு [illegible] மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் [illegible] அமைச்சர்.

185284

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. இச்சட்டமுன்வடிவின்மீது பேச விரும்புவோர் மிகச் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத் திருத்தத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், நாம் இயற்றுகின்ற சட்டங்களெல்லாம், இயற்றப்பட்ட பிறகு, அதன் அறிவிக்கை வெளியிட்ட பிறகு, அவை செயல்பாட்டுக்கு வரவேண்டும். ஆனால், இந்த மாமன்றம் இயற்றுகின்ற சட்டங்கள், எல்லா உறுப்பினர்களும் இங்கே பெரும்பான்மையான வாக்குகளை அளித்த பிறகு, அவை சட்டமாக்கப்பட்ட பிறகு, notification கொடுத்த பிறகும்கூட, சில சட்டங்கள் செயல்பாட்டிற்கு வராமல் இருப்பது என்பது இந்த அவையையே மதிக்காமல், அவமதிப்பதற்கு இணையான ஒரு செயல் என்று நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உதாரணத்திற்கு இந்த அவையிலேயே சென்னைப் பல்கலைக்கழகம் பற்றி வந்த ஒரு சட்டம் இயற்றப்பட்டு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இந்தச் சட்டத்தில் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** உதாரணத்தைத்தான் நான் சொல்கின்றேன். நான் உள்ளேயே போகவில்லை.

@23-9-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்பிட்ட சட்டத்தில் பேசுங்கள். அதிலே பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் அமருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** 1979–லே வருவாய்த் துறையின் மூலமாக இயற்றப்பட்டிருக்கின்ற ஒரு சட்டம், அதாவது தொழில் துறைக்காக, அல்லது யாராவது நிலத்தை ஒரு கம்பெனி கேட்டு, அவர்களுக்கு அது assignment கொடுக்கப்பட்டிருக்குமேயானால், அந்த நிலத்தை அவர்கள் விற்பனை செய்ய வேண்டுமென்று சொன்னால், அரசிடமிருந்து ஒரு prior permission முன்னனுமதி பெற்று அவர்கள் விற்கலாம் என்று ஒரு சட்டம் ஏற்கெனவே இயற்றப்பட்டிருக்கின்றது. 1979–லே இயற்றப்பட்டிருக்கின்ற சட்டத்தில் என்ன என்று சொன்னால், ஒவ்வொரு முறையும், அங்கே கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் அல்லது ஒரு கம்பெனியை நடத்திக் கொண்டிருக்கின்றவர்கள், அரசை அணுகி மனுவைக் கொடுத்து, பிறகு முன்னனுமதி பெற்று, அவர்கள் assignment பெற்ற நிலத்தை விற்கலாம் என்று வருகின்றபோது, நிறைய காலதாமதம் ஆகின்றது என்ற காரணத்தால், 1979–லே ஒரு சட்டம் இயற்றப்பட்டு அந்த முன்னனுமதி கொடுக்கக்கூடிய அந்த ஒரு செயலை – அரசு என்பது பொதுவாக அரசுச் செயலாளரைக் குறிக்கும். ஆனால், அரசுச் செயலாளரிடம் அந்த ஃபைல் வந்து, போக வெகு காலம் எடுத்துக்கொள்கின்ற காரணத்தால், ஆங்காங்கே இருக்கக்கூடிய தாசில்தார், R.D.O.–வே அரசு என்று கருதப்படும். அதாவது முன்னனுமதி கொடுக்கக்கூடிய அந்தப் பணியை அப்படியே அவர்களுக்கு ஒப்பளி செய்யப்பட்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதற்காக ஓர் அரசாணைகூட G.O. Ms. No.2485, dated 9–11–1979–ல் பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இதுபோன்ற ஆணைகள் இன்று வருவாய்த் துறையின் மூலமாக செயல்படுத்தப்படுகின்றனவா என்று சொன்னால் அவை செயல்படுத்தப்படுவதே இல்லை. ஆகவே இதுபோன்ற..

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்மால் நிறைவேற்றப்படவிருக்கின்ற சட்டம், தொழிலியல் நோக்கங்களுக்காக, அரசு தன் கைவசம் வைத்திருக்கின்ற சில அதிகாரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்குகின்ற சட்டமாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் வேறு பாதையில் சென்று, வேறு சட்டத்தைப் பற்றி இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, நான் இந்தச் சட்டத்தில் சொல்வதே, தொழிலியல் சம்பந்தமாக ஏற்கெனவே assign செய்யப்பட்ட நிலத்தை அந்தக் கம்பெனியோ அல்லது தனி நபரோ விற்க வேண்டுமென்று சொன்னால், prior permission Government–இடம் வாங்கி விற்க வேண்டுமென்பதைத் தளர்த்தி அரசு என்பதற்கான அந்த அதிகாரத்தை R.D.O., தாசில்தாரிடம் கொடுக்கப்பட்டிருக்கின்ற சட்டம் *1979*–ல் இயற்றப்பட்டு, ஒரு G.O.–வும் வழங்கப்பட்ட பிறகும்கூட, அதுவே செயல்பாட்டுக்கு வரவில்லை. இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நீங்கள் கொடுக்கின்ற சட்டம்..

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இங்கே எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்ற சட்டம்–தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தை, நில எடுப்பு, கையகப்படுத்துவதற்கான சட்டத்தை நாம் இங்கே எடுத்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலத்தைத் திரும்ப அந்தத் தொழிற்சாலையினுடைய உரிமையாளருக்கே கொடுப்பதைப் பற்றி இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாத உரை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் இதை எதிர்க்கிறீர்களா, வரவேற்கிறீர்களா? இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறீர்களா, வரவேற்கிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வரவேற்கின்றேன் என்று சொல்லிவிட்டு, அதற்கான கருத்தைச் சொல்ல வருகின்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குக்கூட நீங்கள் அனுமதி கொடுக்கவில்லையென்று சொன்னால் நிச்சயமாக, எதற்காக நீங்கள் மறுக்கின்றீர்கள், எங்களுக்குப் பேசுவதற்கு உரிமை இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்பிட்ட சட்டமுன்வடிவின்மீது நீங்கள் பேசுங்கள். வானத்திற்குக் கீழே இருக்கின்ற எல்லாவற்றையும் பேசுவதற்கு அனுமதி கிடையாது. குறிப்பிட்ட சட்டமுன்வடிவின்மீது பேசுவதற்கு உங்களிடம் விவரம் இருந்தால் பேசுங்கள். இல்லாவிட்டால் அனுமதி இல்லை. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லுங்கள்.



*முற்பகல் 11–30*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Point of Order. பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமுன்வடிவை ஆதரிக்கிறேன் அல்லது எதிர்க்கிறேன் என்று மட்டும் சொல்லிவிட்டு உட்காருவதாக இருந்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சட்டமுன்வடிவைப் பற்றியே பேசவில்லை அவர். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றியே அவர் பேசவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி பேசச் சொல்லுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறேன் நான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆனால், எதிர்க்கிறீர்களா ஆதரிக்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லுங்கள் என்று சொன்னால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுசம்பந்தமான விளக்கத்தைச் சொல்கிறார்கள். சொன்னவுடனே, இதை நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லிவிட்டு வேறு சட்டமுன்வடிவுகளைப்பற்றிப் பேசுகிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இந்தச் சட்டமுன்வடிவைப்பற்றிப் பேசச் சொல்லுங்கள். அதில் நான் தவறு சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள். இந்தச் சட்டமுன்வடிவைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சித் தலைவருக்கு நீங்கள் அதிகாரத்தை – பொதுவாக செயலாளருக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை ஆட்சித் தலைவருக்கு நீங்கள் கொடுத்துவிடுகிறபோது, உண்மையிலேயே அந்த அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்துகிற ஒரு சூழ்நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், ஒரு முறை இந்த நிலத்தை இப்படி கையகப்படுத்துவதற்கான அதிகாரத்தைக் கொடுக்கிறோம்

[திரு. சி. ஞானசேகரன்] [2005 செப்டம்பர் 29

என்று நாம் சட்டத்தை இயற்றிவிட்ட பிறகுகூட, அங்கிருக்கக்கூடிய ஆட்சித் தலைவர்கள் நமக்கு ஏன் வம்பு என்று அதுபோன்ற ஃபைல்களை அவர்கள் மீண்டும் C.L.A.–க்கு அனுப்புவார்கள். அங்கு இருக்கிற அந்த Land Administration Commissioner என்ன செய்வார், உடனடியாக அதை Secretary–க்கு அனுப்புவார். Secretary அதை மீண்டும் மந்திரிக்கு அனுப்புவார். இப்படியே இந்த ஃபைல் ஆண்டுக் கணக்கிலே சுற்றுகிற அந்த நிலையை நீங்கள் மாற்றியமைப்பதற்கு, நாம் இயற்றுகின்ற இந்தச் சட்டம், உண்மையிலேயே மதிப்பளித்து அதற்கு உடனடியாக செயலாக்கம் பெறுவதற்கான ஆலோசனைகளை நாம் வழங்கிக்கொண்டிருக்கிறபோது – வருவாய்த் துறையிலே இப்படி நடக்கிறது என்பதற்காகத்தான் நான் உதாரணமாகச் சொன்னேன். ஏற்கெனவே நாம் இயற்றிய சட்டங்களை – நீங்கள் அதிகாரத்தைக் கொடுக்கிறீர்கள் – இதில்கூட நீங்கள் முதலில் என்ன பண்ணுகிறீர்கள்?

பிரிவு 4(1) Land Acquisition–க்கு இருக்கிற அதிகாரத்தை எல்லாம் கொடுத்துவிட்டு, ஆனால், அதைத் திரும்பப் பெறுகிற பிரிவு 3(1) என்று இருக்கக்கூடிய Land Acquisition Act–ல் இருக்கிற power–ஐ மீண்டும் நீங்களே அதை வைத்துக்கொள்கிறேன் என்கிறீர்கள். ஏன் கலெக்டரை – உங்களுடைய அதிகார வரம்பிற்குள்ளே செயல்படுகிற அந்த ஆட்சித் தலைவரை நாம் முழுமையாக நம்ப வேண்டும். பொதுவாக கையகப்படுத்துவதற்காக மட்டுமே அதிகாரத்தை வழங்குகிற நீங்கள், அது கையகப்படுத்த உகந்ததா, உகந்தது இல்லையா என்று முடிவு செய்தபிறகு, அதைத் திரும்பப் பெற வேண்டும் என்று சொன்னால், அந்த 3(1) என்று இருக்கக்கூடிய அந்த Section–படி அரசுச் செயலாளரே அந்த அதிகாரத்தை, அரசே அதை வைத்துக்கொள்வது என்பது பொருத்தமற்ற ஒன்று. ஆகவே, நீங்கள் அதை வேண்டாம் என்று சொன்னாலும்கூட, அதைக் கைவிட வேண்டும் என்று சொல்கிற அதிகாரத்தைக்கூட மாவட்ட ஆட்சித் தலைவருக்கே நீங்கள் முழுமையாக அந்த அதிகாரத்தைக் கொடுப்பீர்கள் என்று சொன்னால்தான் இந்தச் சட்டம் உண்மையிலேயே ஓர் உயிரோட்டமுள்ள சட்டமாக இருக்கும். நீங்கள் ஒன்றை மட்டும் அவருக்குக் கொடுத்து, அதாவது எடுப்பதை மட்டும் நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள், அதாவது அதை கைவிடலாமா, வேண்டாமா என்பதற்கு உங்களிடம் அதிகாரம் இல்லை, மீண்டும் அரசுக்குத்தான் வரவேண்டும் என்று சொன்னால், அதற்கப்புறம் இது இரண்டும்கெட்டான் நிலை. ஒரு முறை நீங்கள் அவரை ஒரு விஷயத்திற்கு நம்புகிறீர்கள் என்று சொன்னால், முழுமையாக அதே ஆட்சித் தலைவரை நம்பி நீங்கள் எல்லா அதிகாரத்தையும் அவரிடமே



2005 செப்டம்பர் 29] [திரு. சி. ஞானசேகரன்]

ஒப்படைப்பீர்கள் என்று சொன்னால், இந்த red–tapism–க்கு வழி இருக்காது. பொதுவாக வருவாய்த் துறை என்பது — வருவாய்த் துறையிலே நிறைய நுணுக்கங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதற்குப் பதில் ஏதும் சொல்ல வேண்டுமென்றால் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் – நிலத்தைக் கையகப்படுத்துகின்ற முதல் நடவடிக்கையாக பொது அறிவிப்பு வழங்குகின்ற அதிகாரத்தை நாம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்குகிறோம். அதற்குப் பின்னால் நிலத்தைக் கையகப்படுத்துகின்ற அதிகாரம் அரசிடமே இருக்கின்றது. நிலத்தை திரும்பப் பெறுவதற்குண்டான அதிகாரத்தையும் அரசே தன் வசம் வைத்துக்கொள்கிறது. நிலத்தின் சொந்தக்காரர் அந்தப் பிரச்சினையில் அந்த நிலத்தின் மீது பல்வேறு பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றபோது, திரும்பவும் அந்த நிலத்தை எடுக்கின்றபோது பல்வேறு பிரச்சினைகள் அங்கு உருவாகும் என்ற நிலையினை அரசு உணர்கின்றபோது அதைத் திரும்பப் பெறுகின்ற அதிகாரத்தைத்தான் அரசு தன் கைவசம் வைத்திருக்கிறது. நிலத்தின்மீது அதன் உரிமையாளரோ, அதற்குச் சொந்தம் கொண்டாடுபவரோ, ஏதேனும் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்ற நேரத்தில், திரும்பவும் அந்த நிலத்தைக் கைவிடுவதற்கு உண்டான அதிகாரம் அரசிடம் இருந்தால்தான் அது ஒரு நல்ல நடவடிக்கையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11–7–2005 அன்று (குறுக்கீடு) போதும், போதும். "11-7-2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்கிற திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 29

முற்பகல் 11–35

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் "2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2005 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2005).

திரு. வி.கே. லட்சுமணன் மற்றும் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் ஆகியோரில் ஒருவர் 4–8–2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2005) நிராகரிக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள். திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"4-8-2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது"*

*என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.*

**திரு. எச்.எம். ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. வி.கே. லட்சுமணன் அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. இச்சட்டமுன்வடிவின்மீது பேச விரும்புவோர் மிகச் சுருக்கமாகப் பேச வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். திரு. வி.கே. லட்சுமணன்.*

**திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்படாத காரணத்தினால் அந்தச் சங்கங்கள் நலிவுற்று இருப்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். தனி அலுவலர்களுடைய திறமைக் குறைவினாலே பல நல்ல சங்கங்கள் பல பெரிய தலைவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் இன்றைக்கு மிக மோசமான நிலைமைக்கு போய்க்கொண்டிருப்பதை நாள்தோறும் நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இதற்குக் காரணம் என்ன சொல்லப்படுகிறது என்று சொன்னால், போலி வாக்காளர்களை நீக்குவதற்காக வேண்டி உயர் நீதிமன்றம் சென்றிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. நான் இங்கே*

---

@ 23-9-2005 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்பெற்றுள்ளது.





*சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், ஒன்று பஞ்சாயத்திற்கு இருப்பதைப் போல இந்தக் கூட்டுறவு இயக்கத்திற்கும் ஓர் ஆணையம் நிறுவப்பட்டு அந்த ஆணையத்தின் மூலமாக இது செயல்படும் என்று சொன்னால், ஒருவேளை இந்தப் போலி வாக்காளர்களைத் தடுக்க முடியும். இல்லை என்று சொன்னால் எல்லோரும் கருதுவது போல ஒரு நபர் 10 ஆண்டு காலத்திற்கு அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக இருந்து அந்தச் சங்கத்தை முறையாகப் பயன்படுத்தி இருந்தால் அந்த நபரைச் சரியான நபராக ஏற்றுக்கொள்வதாக நாம் ஏற்பாடு செய்வோம் என்று சொன்னால், ஏற்பாடு செய்து இந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவோம் என்று சொன்னால், உண்மையாகவே நல்ல கூட்டுறவாளர்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நாம் கருதலாம், இப்படி நீண்ட காலமாக தேர்தல் நடத்தாத காரணத்தினாலே NABARD–விருந்தும், N.C.D.C.–யிலிருந்தும் நமக்குக் கிடைக்க வேண்டிய பல சலுகைகள் கிடைக்காமல் போய்விட்டன என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.*

*இன்றைக்கு இந்தக் கூட்டுறவுச் சங்க தனி அலுவலர்களுடைய காலத்தை நீட்டிப்பதற்காகச் சொல்லப்படுகின்ற காரணம் நிர்வாகம் மற்றும் பிற காரணங்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அது என்ன காரணம் என்று இங்கே தெளிவாகச் சொல்லப்படவில்லை. எப்படி இருந்தாலும் இது போலி வாக்காளர்கள் பிரச்சினை என்று நான் கருதுகிறேன். எனவே, இதற்கு விரைவாக ஒரு தீர்வு காணவில்லை என்று சொன்னால், நீண்டகாலமாகக் கட்டிக் காக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டிலே அழிந்து போக வாய்ப்பு இருக்கின்றது. எனவே, நம்முடைய வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டு, 10 ஆண்டு காலத்திற்கு உறுப்பினர்களாக இருந்தவர்களை சரியான உறுப்பினர்களாக ஏற்றுக் கொண்டு, தேர்தலை நடத்த வேண்டும். போலி வாக்காளர்களை நீக்குவதற்கு நீதிமன்றத்தைக்காட்டிலும் பேரவைக்கு அதிகாரம் இருக்கின்றது. ஆகையினாலே, போலி வாக்காளர்களை எளிதாக நீக்கிவிடமுடியும். எனவே, அதை அரசு செய்ய முன்வருவதுதான் சரியான முறையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எ.வ. வேலு.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனி அலுவலர்கள் நீட்டிப்பு என்பதை இரத்து செய்ய வேண்டும் என்று நான் கூட்டுறவு மற்றும் உணவுத் துறை அமைச்சர்*

அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். காரணம், தொடர்ந்து இன்றைக்கு கிட்டத்தட்ட 4,497 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருந்தாலும்கூட அவற்றில் வாழ்வு திறனற்ற வங்கிகளாக 1,225 இன்றைய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன.

*முற்பகல் 11–40*

இன்னும் சொல்லப்போனால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயிகள் பெரும்பாலும் பயன்படுத்துகின்ற அந்தச் சங்கங்களில், 300 சங்கங்கள் இன்றைக்கு மூடுகின்ற நிலை கிராமப் பகுதிகளிலே உருவாகியிருக்கிறது. அதற்குக் காரணம் 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற அந்தத் தத்துவத்தை இன்றைக்கு இந்த அரசு முன்நிறுத்தாத காரணத்தினால், அதன்மீது நம்பிக்கை இல்லாத காரணத்தினால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களை எல்லாம் மூடுகின்ற நிலை உருவாகியிருக்கின்றது. காரணம், அதை நடத்துகின்ற தனி அதிகாரிகள் அந்தப் பகுதியைச் சேராத காரணத்தினால், ஒரு கூட்டுறவுச் சங்க தேர்தல் நடக்கின்றது என்று சொன்னால், அதனுடைய இயக்குநர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் அல்லது தலைவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் பயன்படுகின்ற வகையில் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை மேலாண்மையாக இருந்து நடத்துவார்கள். ஆனால், இங்கே கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளை தனி அதிகாரிகளாக நியமிப்பதன் காரணத்தினால், அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் நேரடியாக எந்த நன்மையும், கடனையும் பெறுவதில்லை. எனவே, அந்த வகையில் இந்தக் கூட்டுறவுத் தத்துவத்திற்கே ஒரு முரண்பாடான ஆட்சி இன்றைக்கு நடைபெறுகிறது.

அதோடுமட்டுமல்ல, தொடர்ந்து இருக்கிற ஆட்சியிலே நான்கரை ஆண்டுகாலம் பார்க்கிறோம். முதன்முதலாக இங்கே 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் தேதி இதே மாமன்றத்திலே கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு தனபால் அவர்கள் இங்கே சொன்னார்கள். 'ஜனநாயக வாதிகள், உண்மையான கூட்டுறவாளர்கள் எல்லாம் இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே வந்து, கூட்டுறவுத் துறையினை நடத்த வேண்டும் என்பதற்காக விரைவாக பணிகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. இந்தத் தேர்தலை விரைவாக நடத்தி முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். நான் விரைவிலே இந்தத் தேர்தலை நடத்துகிறேன்' என்று இங்கே மாண்புமிகு நம்முடைய தனபால்





அவர்கள் குறிப்பிட்டார்கள். அவரே 2002 மே மாதம் 8 ஆம் தேதி மீண்டும் கூட்டுறவுத் துறை அமைச்சராக அவர் இருந்தபோது, இதே மன்றத்திலே சொன்னார்கள், 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இதிலே தேர்தல் நடத்துவது என்பது சீக்கிரம் நடத்திவிட முடியாது. மூன்று கட்டங்களாக நடத்த வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், மாவட்ட அளவிலே, மாநில அளவிலே இப்படி மூன்று கட்டமாக நடத்த வேண்டும். எனவே, நாட்கள் போதாது. நான்கரை மாத காலம் ஆகும். கிட்டத்தட்ட ஆறு மாதம் எடுத்துக்கொள்கிறேன், தேர்தலை முடித்து விடுகிறேன்' என்று இதே மாமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு தனபால் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்.

அதோடுமட்டுமல்ல, அதற்குப் பின்னால், 2003 ஆம் ஆண்டு இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர், முன்னாள் அமைச்சராக இருந்த நம்முடைய ப. மோகன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 'இந்தப் பணிகளை துரிதப்படுத்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு விரைவாக தேர்தல் நடத்துவதற்கு முன் முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறது; உடனே தேர்தலை நடத்திவிடுகிறோம்' என்று 2003-லே ப. மோகன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை? ஒரு வார காலத்திற்கு முன்னால்—இங்கே சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே—இருபத்தைந்தாயிரத்திற்கு மேற்பட்ட கூட்டுறவாளர்கள் ஓர் ஆண்டுகாலமாக பசியும், பட்டினியுமாக எங்கள் குடும்பங்கள் இருக்கின்றன என்று இங்கே மாபெரும் ஒரு பேரணி நடத்திக் காட்டினார்கள். அது அனைத்து பத்திரிகைகளிலும் வந்தது. (மணியடிக்கப்பெற்றது) இங்கு இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் படித்திருப்பீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, தனி அலுவலர்கள் நியமனம் தொடர்பான சட்டமுன்வடிவு. கூட்டுறவுத் தேர்தல் தனி அலுவலர். மற்றப் பிரச்சினைகளுக்கு உள்ளே போகாதீர்கள். இதைப் பேசி முடிக்கிறதாக இருந்தால் முடியுங்கள். இல்லாவிட்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பதில் சொல்ல அழைக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் இங்கே கூட்டுறவுத் துறை புதிய சட்டம் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள். வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. அரசு (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், (குறுக்கீடுகள்) அவர் சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லி விட்டார்.

**திரு. தி. வேல் முருகன்:** பதவி ஏற்ற உடனேயே 2001 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் (குறுக்கீடு) கூட்டுறவுச் சங்கத் தேர்தல் செப்டம்பர் மாதத்திற்குள் நடத்தப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. (குறுக்கீடு) அரசின் அந்த உறுதிமொழி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேல் முருகன் பேசுங்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) வேல் முருகன் நீங்கள் பேசி முடித்துவிட்டால் அமைச்சரைக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) வேல் முருகன் பேசி முடியுங்கள்.

*முற்பகல் 11–45*

**திரு. தி. வேல் முருகன்:** அரசின் அந்த உறுதிமொழியை நான்கரை ஆண்டு காலம், ஆகியும் தமிழக அரசு இதுவரையில் கண்டுகொள்ளாமல் இருப்பது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தச் சட்டமன்றத்தில்...(குறுக்கீடு) ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கின்ற அந்த செப்டம்பர் மாதத்திற்குள் இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருப்பதை இதுவரையிலும் இந்த அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனை அளிக்கிறது. கூட்டுறவே நாட்டுயர்வு என்ற அந்த சித்தாந்தம் இன்றைக்கு அடிபட்டுப் போய், இன்றைக்கு தனி அலுவலர்கள் எல்லாம் குட்டி ராஜாக்களாக செயல்படுகிறார்கள் என்று ஏற்கெனவே ஒரு விவாதம் இதே சட்டமன்றத்திலே எழுந்திருக்கிறது. ஆனால், நம்முடைய அரசாங்கம், இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொல்லலாம். நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்குகளையெல்லாம் முடிவுக்குக்



கொண்டுவருவதற்கு இந்த அரசாங்கம் எடுத்த முயற்சி இந்தத் தனி அலுவலர் நீட்டிப்புச் சட்டத்தின் மூலமாக தொடர்ந்து இந்தக் கொள்கையை குழி தோண்டி புதைக்கின்ற இந்த அவலத்தை இங்கு சுட்டிக்காட்டுகின்ற வகையில்தான் சமீபத்தில் பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டுறவுச் சங்கத்தினுடைய அந்தக் கருத்தரங்கத்திலே பாரதப் பிரதமர் அவர்கள் அருமையான ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, கூட்டுறவுதான் மக்களை வாழ வைக்கும், கூட்டுறவின் நோக்கத்தினை முழுமையாக அடைந்திட சிறப்பாகப் பணியாற்ற வேண்டும். சில மாநிலங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலையே நடத்தாமல் கூட்டுறவுத் தத்துவத்தையே சிதைத்துக்கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய கூற்று என்னைப் பொறுத்த அளவில் தமிழகத்தை மனதிலே வைத்து கூறியதாகக்கூட எடுத்துக்கொள்ளலாம். ஆக, பாரதப் பிரதமர் அவர்களே (குறுக்கீடுகள்) பாரதப் பிரதமர் அவர்களே வருத்தப்பட்டு தன்னுடைய ஆதங்கத்தைச் சொல்லுகின்ற ஓர் அவல நிலைக்கு தமிழகத்தினுடைய கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தப்படாமல் தொடர்ந்து நான்கரை ஆண்டுகாலமாக நீட்டிப்பது என்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் எதிர்க்கிறோம்.

அதோடுமட்டுமல்ல, ஏற்கெனவே பாழ்பட்டிருக்கும் சங்க நிதி நிர்வாகம், நிதி மேலும் மோசமடைவதற்கு வாய்ப்பிருக்கிறது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி இன்றைக்கு கூட்டுறவில் நடந்த ஊழலை புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்களோ, அதேபோல் நாளை மலர இருக்கின்ற ஆட்சியிலும் தனி அலுவலருடைய ஊழலைப் புத்தகமாக வெளியிட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வி.கே. லட்சுமணன் அவர்களுடைய கேள்விக்கான பதிலை (குறுக்கீடு) 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் தேதி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள், அமைச்சர் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் தேதி உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது

மாண்புமிகு உறுப்பினர் வேலூர் திரு. ஞானசேகரன் அவர்கள் இந்த அவையிலே பேசிய பேச்சை பக்கம் 190-லிருந்து நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். "நான்கூட இதே மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது எங்களுடைய கற்பகம் சூப்பர் மார்க்கெட்டினுடைய தலைவர் 12 கோடி ரூபாய் கொள்ளையடித்திருக்கிறார் என்று இந்த அவையிலே பேசி அவரை மட்டும் பதவியிலிருந்து எடுத்துவிட்டார்கள். அந்த ஆட்சியிலே எடுத்துவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நகரச் செயலாளர் பதவியிலிருந்தும் எடுத்துவிட்டார்கள். ஆனால், இன்றுவரையிலும் சரி, அவரை, அவர்களுடைய ஆட்களை arrest செய்யவில்லை. நீங்கள் மாறி வந்திருக்கின்றீர்கள், நீங்களாவது இதுவரைக்கும் அவரை arrest செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்கள் என்று பார்த்தால் அதுவுமில்லை. இப்படியே நீங்கள் வைத்திருந்தீர்கள் என்று சொன்னால் அதற்குத் தேர்தல் நடத்தி என்ன பிரயோஜனம்?" ஞானசேகரன் அவர்கள் பேசியது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இதே அவையிலே இதே மானியக் கோரிக்கையிலே அதே நாளிலே பேசிய குறிப்பு. "இல்லை, சொல்கிறேன் சில guidelines, அதாவது இந்த அளவிற்கு அதைச் சரி செய்ய வேண்டுமென்று, அது போன்றவற்றை சரி செய்யாமல் தேர்தல் நடத்தினால் சரியாக வராது. இப்போது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்வதற்காக நான் சொல்லவில்லை. அவர் வந்து (குறுக்கீடு) இல்லை, இல்லை அவர் பேசட்டும். அவர் பேசியதை சட்டமன்ற நடவடிக்கைகளிலிருந்து படிக்கிறீர்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. முதலமைச்சர் குறிப்பிட்டது, (குறுக்கீடு) நான் என்ன என்று சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நானேதான் சொன்னேன். முதலமைச்சர் சொல்வதற்கு முன்னால் நானேதான் சொன்னேன். சென்னைப் பல்கலைக்கழகம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று ஆற்காடு வீராசாமி அவர்கள் அந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளிலே உள்ளதை, நடைபெற்ற விவாதத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். Madras University என்பதை சென்னைப் பல்கலைக்கழகம் என்றுதான் நாம் அழைக்கிறோம். சட்டமன்ற நடவடிக்கைகளிலே அப்படி ஏறியிருக்கலாம். அதை இதற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்கிற கருத்தைத்தான் சொன்னார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு ஜி.கே. மணி அவர்கள் பேசிய பேச்சு. 2001 செப்டம்பர் மாதம் 13 ஆம் தேதி, 203 ஆம் பக்கம். "அதற்கு உதாரணத்தினைச் சொல்கிறேன். கடந்த நிர்வாகக் குழுவிலே இருந்த தலைவர்கள் பணி நியமனம் செய்தார்கள். அந்தப் பணி நியமனம் செய்துவிட்டு, நிரந்தரம் என்று சொல்லி, இன்னும் அவர்கள் சம்பளத்திலே arrears என்று சொல்லி, ஒவ்வொரு பணியாளரிடமும் ரூ.50,000, ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் என்று பெற்று, 10,000, 15,000 ரூபாய் பணியாளர்களுக்குக் கொடுத்துவிட்டு, மீதித் தொகையை எல்லாம் தலைவர்கள் எடுத்துக்கொண்டார்கள். இது வரலாறு, உண்மை." இதை பேசியவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தத் தேர்தலை நடத்துவதற்குரிய சூழ்நிலை எப்போது என்பது பற்றிய அந்த விளக்கம் சொன்னால் போதும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், பேசிய பேச்சுக்கான விளக்கமாக இதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர் கே.சி. கருணாகரன் அவர்கள் பேசிய பேச்சினுடைய குறிப்பை மட்டும் படிக்க என்னை அனுமதிக்க ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்). இல்லை இது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். ஒரு சட்டமுன்வடிவு (குறுக்கீடுகள்) ஒரு சட்டமுன்வடிவு (குறுக்கீடுகள்) குறிப்பிட்ட சட்டமுன்வடிவின்போது (குறுக்கீடு) உட்காருங்கள். துரைமுருகன், உட்காருங்கள். குறிப்பிட்ட

சட்டமுன்வடிவின்மீது நடைபெறக்கூடிய விவாதம். மாண்புமிகு உறுப்பினர்கள், தனி அலுவலர்களுடைய பதவி நியமனத்தை நீட்டிக்கக் கூடாது, தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். தேர்தல் விரைவிலே நடத்தப்பட முடியாது இருக்கிற சூழ்நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினால் போதும். மற்ற விவாதங்களைப் பின்னாலே வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் வேலு அவர்கள் பேசும்போது, சில தவறான குற்றச்சாட்டுகளை இங்கே பதிவு செய்ததன் காரணமாகத்தான், நான் அதைக் குறிப்பிட விரும்பினேன். தேர்தல் நடத்த முடியாததற்கான காரணத்தை, கடந்த 2 நாட்களுக்கு முன்பு இந்த மாமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது குறித்து பல்வேறு வழக்குகள் உயர்நீதிமன்றத்தினுடைய Larger Bench-னுடைய விசாரணையில் இருக்கின்ற காரணத்தினால், தற்போது தேர்தல் நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேலும் இப்போது தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதாகக் குறிப்பிடப்படக்கூடிய இந்த 16 சங்கங்களுக்கும், கடந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த, 1996–2001 கால கட்டத்திலும், அதற்குமுன் 1989–1991 கால கட்டத்திலும்— ஆகிய இரண்டு கால கட்டங்களிலும், தேர்தல் நடத்தப்படவே இல்லை. இன்றைக்கு இந்தச் சட்டம் தாக்கல் செய்யப்படுகிற இந்த 16 சங்கங்களுக்கும், தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் தேர்தல் நடத்தப்படவில்லை என்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அளித்த விளக்கத்தை நான் இங்கே கூறி, உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி விரைவில் தேர்தல் நடத்துவதற்கான முடிவுகள், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறி மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 4–8–2005 ஆம் நாளன்று ... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** அதாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு ஞானசேகரன் சொன்னதை, ஒரு குற்றச்சாட்டாகப் பேசினதைச் சொன்னார். ஆனால், ஞானசேகரன் பேசியவுடன் அவர் திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியிலும் தவறு செய்தவர்கள் இருப்பார்கள் என்று சொல்லி, அன்றைக்கே





கலைஞர் அவர்கள், ஞானசேகரன் பேசிய நபர் மீது நடவடிக்கை எடுத்தது என் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாக் கட்சியும் தப்பு பண்ணும். நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "4–8–2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்கிற திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். தீர்மானம் தோல்வியுற்றது.

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 29

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2005 செப்டம்பர் 29]

## (ஈ) தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2005), மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், என்ன?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் குறித்த சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. அதேநேரத்தில் பொருளாதார ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும் நம்முடைய தமிழகம் வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு இதுபோன்ற சட்டங்கள் மிக மிக அவசியம் என்பதை காங்கிரஸ் கட்சி உணர்கிறது. ஆனால், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவது எல்லாம், இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னால் எத்தனை பொருளாதார மண்டலங்கள் தமிழகத்திலே உருவாகியிருக்கின்றன? அப்படி உருவாக்கப்பட்டிருக்கிற மண்டலங்கள் எவை எவை செயல்பாட்டுக்கு வந்திருக்கின்றன? குறிப்பாக, ஏற்றுமதி போன்ற பணிகளை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்த பிறகு நீங்கள் எந்த அளவுக்கு ஏற்றுமதியை தமிழகத்தில் அதிகரித்திருக்கிறீர்கள் என்கிற குறிப்புகளையும், அதேபோல கட்டமைப்பு வசதிகள் எத்தனை கோடியிலே ஆங்காங்கே, எந்த இடத்தில், என்னென்ன கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு செய்து தந்திருக்கிறது என்பதைப் பற்றியும்

@ 23-9-2005 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. சி. ஞானசேகரன்] [2005 செப்டம்பர் 29

இந்த அவைக்கு விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய பகுதியான நாங்குநேரியிலே இதுபோன்ற ஒரு பொருளாதார மண்டலம் உருவாக்கப்பட வேண்டுமென்கிற மக்களுடைய கருத்திற்கேற்ப அங்கே பொருளாதார மண்டலம் உருவாக்கப்பட்டிருந்தாலும்கூட, இன்னும் அங்கே அந்த மண்டலம் செயல்பாட்டுக்கு வராத ஒரு சூழல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு அதற்கு முன்னுரிமை அளித்து, தென் மாவட்டங்களில் மிக முக்கியமாக விளங்கிக்கொண்டிருக்கிற அந்த நாங்குநேரி பகுதியிலே நீங்கள் இந்தப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கி ஏற்றுமதியைப் பெருக்குவதானாலும் சரி அல்லது நீங்கள் இதுபோன்ற தொழிற்சாலைகள் அதிக அளவிலே வருவதற்கு—பொதுவாக மென்பொருள் போன்று, இப்போது இருக்கக்கூடிய சூழலுக்கு ஏற்றாற்போல, ஆண்டுக்கு 80 ஆயிரம் பொறியாளர்களை தமிழகம் பொறியியல் கல்லூரிகளிலிருந்து உருவாக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், அந்த 80 ஆயிரம் பொறியாளர்களுக்கும் நாம் வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று சொன்னால், இதுபோன்ற பொருளாதார மண்டலங்கள்தான் அவர்களுக்கு அந்த வாய்ப்பைத் தர முடியும். ஏனென்று சொன்னால், அரசே எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியாது. தனியாராவது இப்படிப்பட்ட பொருளாதார மண்டலங்களை உருவாக்குகிற காரணத்தாலே, அந்த இடத்திலே படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பொறியாளர்களுக்கு அதிக அளவிலே வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்படும். நாம் இதுபோன்ற சட்டங்களை இயற்றுகிற இந்தப் பணியோடு இப்படியே இருந்துவிடாமல் இந்தச் சட்டத்திற்கு நாம் உயிரோட்டம் கொடுத்து நாங்குநேரி போன்ற பகுதிகளிலே, இதை உடனடியாக செயல்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை. இன்னும் ஒன்றைக் கேட்டுவிடுகிறேன். எங்களுடைய வேலூர் மாவட்டத்தில், பொதுவாக படித்த இளைஞர்களுக்கு எந்தவிதமான அரசு தொழிற்சாலைகள் இல்லாவிட்டாலும்கூட பரவாயில்லை. இப்படிப்பட்ட பொருளாதார மண்டலத்தை நீங்கள் ஏதாவது உருவாக்கினீர்கள் என்று சொன்னால், ஏழை எளியவர்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிற, படித்து இருக்கிற இளைஞர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். சென்னையிலே நிறைய உருவாக்கிவிட்டோம் நாம்; நிறைய தொழிற்சாலைகள் வந்துவிட்டன. எல்லாமே சென்னையிலே குவிந்துவிட்டன என்று சொன்னால், பிறகு traffic jam தான் ஆகிக்கொண்டிருக்கிறது; அதேபோல pollution அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால், இங்கிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய எங்களுடைய வேலூர் பகுதியிலே ஒரு பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, படித்த இளைஞர்களுக்கு நீங்கள் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும், இதில் சொல்லப்பட்டிருக்கின்ற அத்தனை வரி விலக்குகளையும் நீங்கள் உடனடியாக அமலுக்குக் கொண்டுவந்து, தொழிற்சாலைகளைப் பெருக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



2005 செப்டம்பர் 29] [திரு. சி. ஞானசேகரன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் MEPZ–Madras Export Processing Zone தாம்பரத்திலும். Mahindra Industrial Park மறைமலை நகரிலும், இப்போது NOKIA ஸ்ரீபெரும்புதூரிலும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்கெனவே கொடுக்கப்பட்டு செயல்முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எண்ணூரிலும், நாங்குநேரியிலும் in principal approval கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்குநேரியைப் பொறுத்தமட்டிலும் அது கடந்த கால ஆட்சியில் போடப்பட்ட ஒப்பந்தம் என்று எக்காரணம் கொண்டும் ஒதுக்கப்படவில்லை. தொடர்ந்து அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போது infrastructure facilities அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 1,534 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அங்கே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் ஒன்றை எழுதி, கன்னியாகுமரியிலிருந்து பாளையங்கோட்டைக்கும், பாளையங்கோட்டையிலிருந்து தூத்துக்குடிக்கும் 4 வழி புறவழிச்சாலையை ஏற்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[திரு. நயினார் நாகேந்திரன்] [2005 செப்டம்பர் 29

நண்பகல் 12–00

இப்போது தாமிரபரணி ஆற்றிலிருந்து 677 இலட்சம் LPD தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இத்தனை வசதிகளும் நாங்குநேரியைப் பொறுத்தமட்டிலும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும்கூட அந்த ATMAC நிறுவனத்தினர், தொழில் முனைவோர்கள் ஒப்பந்தம் போடப்பட்ட இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக தங்களுடைய நிதி முடிவுகளை எட்ட வேண்டும். Financial closure என்று சொல்லப்படுகின்ற நிதி முடிவுகளை அவர்கள் எட்டியிருந்தால், நிச்சயமாக அவர்களுக்கு அந்த அனைத்து வசதிகளும் — இதற்கு முன்னாலேயே தொடங்கப்பட்டிருக்கும் என்றாலும்கூட, தொடர்ந்து அதற்கான வாய்ப்புகள் இப்பொழுது அவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எந்த நேரத்திலும் அவர்கள் அந்தத் தொழில் தொடங்குவதற்கும், படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கும் முயற்சிகள் நாங்குநேரியைப் பொறுத்தமட்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்து கொண்டிருக்கின்றன என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெரும்பாலும், தொழில் முனைவோர்கள், வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் எல்லோரும் Madras-ஐயே சுற்றிச் சுற்றி வருகிறார்கள்; இங்கே Port இருக்கிறது, Airport இருக்கிறது. ஆகவே, இதையே சுற்றி அவர்கள் அந்த I.T.-ஐயைப் பொறுத்தமட்டிலும் தொழில் முனைவோர்கள் இங்கேதான் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே சொன்னதைப்போல, வேலூரிலும் இன்னும் பிற இடங்களிலும் இதற்கான பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கு, படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு தமிழக அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



2005 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 32 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 32 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 29

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

## (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2005), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

## (ஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2005), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

---

@ 23-9-2005 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்பெற்றுள்ளது.



2005 செப்டம்பர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இரண்டு சட்டமுன்வடிவுகளையும் ஒருங்கே சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். இந்தச் சட்டமுன்வடிவுகளின்மீது பேச விரும்புவோர் மிகவும் சுருக்கமாகப் பேச வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். யாராவது பேசுகிறீர்களா?*

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமுன்வடிவில், இந்தச் சட்டமுன்வடிவிற்கான நோக்கக் காரண விளக்க உரை புரிந்துகொள்ளும் வகையில் தரப்படவில்லை. மேலும், சட்டமுன்வடிவில் கூறப்பட்டுள்ள HDPE / PP, LDPE பற்றிய பொருள்கள் எதற்காகப் பயன்படுகின்றன என்ற விவரங்களும் கூறப்படவில்லை. ஏற்கெனவே உள்ள பட்டியலில் சில பொருட்களைச் சேர்ப்பதால் இந்தப் பொருட்கள் வரி விதிப்பிற்கு உள்ளாகின்றனவா அல்லது வரி விலக்குப் பெறுகின்றனவா என்ற விவரங்களும் தரப்படவில்லை.*

*மேலும், உரம் மற்றும் சிமெண்ட் முதலிய பொருட்களை packing செய்யும் பிளாஸ்டிக் பைகள் தயாரிக்கும் பிளாஸ்டிக் துணிகள் மற்றும் அதன் பைகள் தயாரிக்கும்போது ஏற்படும் துண்டுத் துணிகள், கழிவுகள், waste ஆகியவை இதுநாள்வரை வரி விதிக்கப்படாமல் உள்ளன. அதற்குப் பதிலாக விற்பனை வரி விதிக்கின்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டத்தினால் அரசுக்கு சுமாராக ஆண்டுக்கு என்ன வருவாய் வரவுள்ளது என்ற விவரமும் இந்தப் பொருட்கள் இதுநாள்வரை எந்த வரி விதிப்பில் இருந்தன? தற்போது இந்தச் சட்டத் திருத்தம் செய்வதால் என்ன வரி மாற்றம் ஏற்படப் போகிறது என்ற விவரங்களும் இந்தச் சட்டத் திருத்தத்தில் இல்லை. இந்த விவரங்கள் இல்லாமல் இந்தச் சட்டமுன்வடிவு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்படுவதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் "2005 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*பிற்பகல் 12–05*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் "2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 29

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் இரண்டாம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2005).

திரு. வி.கே. லட்சுமணன் மற்றும் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் ஆகியோரில் ஒருவர் "11–7–2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்னும் தீர்மானத்தை முன்மொழிவார். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.



2005 செப்டம்பர் 29]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"11–7–2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

## (ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சட்டமுன்வடிவு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2005), மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 23-9-2005 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளது.

## (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2005).*

*திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள், "2-9-2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்னும் தீர்மானத்தை முன்மொழிவார். திரு. வி.கே. லட்சுமணன்.*

**திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2-9-2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது"*

*என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வழிமொழிவதற்கு ஆள் இல்லையா?*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

*@ 23-9-2005 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளது.*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. வி.கே. லட்சுமணன், திரு. எஸ்.ஆர்.பி. ஆகியோரின் தீர்மானங்களும், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. இம்மூன்று சட்டமுன்வடிவுகளையும் ஒருங்கே சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். இந்தச் சட்டமுன்வடிவுகள்மீது பேச விரும்புபவர்கள் மிகச் சுருக்கமாகப் பேச வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன? திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் என்ன இது தனிப்பட்ட அதிகாரிகளுடைய பெயரைக் குறிப்பிட்டு, (குறுக்கீடு) ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார். (குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தவறாகச் சொல்கிறீர்களோ, பாராட்டிச் சொல்கிறீர்களோ, அது அல்ல பிரச்சினை. (குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...*

**மாண்புமிகு பேரவைத் தலைவ்ர்:** *தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது முழுமையாக. (குறுக்கீடு) தனிப்பட்ட அதிகாரிகளைப் பற்றி அப்படிக் குறிப்பிட்டு - அவர்களுடைய பதவிக் காலம், அப்போது முடிகிறது, இப்போது முடிகிறது என்றெல்லாம் பேசுவது முறையல்ல. இந்தச் சட்டமுன்வடிவின்மீது உங்களுடைய கருத்து என்னவோ அதைச் சொல்லுங்கள். இப்படி அதிகாரிகளுடைய பெயரைக் குறிப்பிட்டு தாங்கள் சொன்ன கருத்துகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தாங்கள் குறிப்பிட்டுச் சொன்ன - அந்த அதிகாரிகளைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னது, அவர் பிறந்த தேதி என்றெல்லாம் சொன்னது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

முழுமையாக நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இந்தச் சட்டமுன்வடிவின் மீது உங்களுடைய கருத்து என்னவோ அதை மட்டும்தான் தாங்கள் சொல்லலாம். அதுதான் முறை. தாங்கள் மூத்த உறுப்பினர், எங்களுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய உறுப்பினர். (குறுக்கீடு) தாங்களே இப்படிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) தாங்கள் இப்படிப் பேசியது முறையற்றது. தாங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் மறுபடி பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எதுங்க அவைக் குறிப்பிலிருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவரைக்கும் நீங்கள் பேசியது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. தனிப்பட்ட அதிகாரிகளுடைய பெயரைக் குறிப்பிட்டு நீங்கள் சொன்னது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மொத்தமாக நீக்குகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மொத்தமாக ஆமாம். (குறுக்கீடு) நீங்கள் இதுவரை பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இப்போது சட்டமுன்வடிவின்மேல் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இந்தச் சட்டமுன்வடிவின்மேல் நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சட்டமுன்வடிவின் மீதுதான் பேசினேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அதிகாரியினுடைய பெயரைச் சொல்லக் கூடாது என்று சொல்கிறீர்கள். சபாநாயகர் சொல்கிறீர்கள். Right, OK.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பெயரைக் குறிப்பிட்டுப் பேசுவதைத்தான் சொல்கிறேன் நான்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் இப்போது என்ன சொல்கிறீர்கள் என்றால் அவர் பேசியது முழுவதையும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முழுவதையும், அதிலிருந்துதான் ஆரம்பித்தார் அவர். அவர் பேசியதை நீங்கள் கவனிக்கவில்லை திரு. துரைமுருகன். (குறுக்கீடு) நீங்கள் வேறு ஏதோ சிந்தனையில் இருந்தீர்கள். கவனிக்கவில்லை. அவர் பேசியது அனைத்துமே அந்த குறிப்பிட்ட அதிகாரியினுடைய பெயரைக் குறிப்பிட்டு, அவர் பிறந்த தேதி, அவர் பதவிக் காலம் முடிவடைவது, அதைத்தான் பேசிக்கொண்டிருந்தார். (குறுக்கீடு) ஆகவே, நீங்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதி முழுவதுமே நீக்கப்படுகிறது.



**திரு. துரைமுருகன்:** அந்தப் பதவி Constitutional Body, இது High Court Judge-க்கு equivalent ஆனது. அப்படித்தான் அவர் சொன்னார். அதை வந்து வேறு ஒன்று சொல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் எப்படிச் சொல்ல வேண்டுமென்றால், நீங்கள் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. ** இதை எப்படி மாற்றிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிக் கைகொடுங்கள், அப்படிச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே பேசியது தமிழக தேர்தல் ஆணையராக நியமிக்கப்படுபவர் அரசுத் துறைச் செயலாளராக நியமிக்கப்படுவதற்குரிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ** என்று திரு. துரைமுருகன் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. எஸ்.ஆர்.பி. பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தேர்தல் ஆணையராக நியமிக்கப்படுபவர்கள் அரசுத் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைத்தான் சொல்கிறேன். நீங்கள் தேர்தல் ஆணையரைப் பற்றி இதெல்லாம் பேச வேண்டிய அவசியமே கிடையாது. (குறுக்கீடு) சட்டமுன்வடிவு இது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் அதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவு இது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சட்டமுன்வடிவில்தான் நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே சொல்லுங்கள் நீங்கள். சட்டமுன்வடிவில் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 செப்டம்பர் 29

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதுதான் குறிப்பிட்ட அதிகாரியைக் குறிப்பிட்டு அவருடைய பதவி காலம் எப்போது முடிகிறது . . .

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதிகாரியைப் பற்றி நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதைத்தான் சொல்கிறீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது பொதுவானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவிற்கு இது எந்தவகையிலும் சம்பந்தமில்லை. (குறுக்கீடு) சம்பந்தம் இல்லாத இந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இந்தக் குறிப்பிட்ட சட்டமுன்வடிவின்மீது உங்களுடைய கருத்தைப் பதிவுசெய்ய விரும்பினால் நீங்கள் பதிவு செய்யுங்கள். மற்றவை அவைக் குறிப்பிலே ஏறாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சட்டமுன்வடிவு பற்றித்தான் பேசுகிறேன். ஓர் அதிகாரி எவ்வளவு வருடமாக, அதாவது ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பெயரைக் குறிப்பிட வேண்டாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பெயரைக் குறிப்பிடவில்லை. பெயரையே நான் குறிப்பிடவில்லை. தேர்தல் ஆணையராக நியமிக்கப்படுபவர் – பொதுவாகச் சொல்கிறேன் – அரசுத் துறைச் செயலாளராக...

பிற்பகல் 12–15

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரி பெயரல்ல. தேர்தல் அதிகாரியாக ஓர் ஆளை நியமிக்கலாம். அவரை நியமித்ததற்குப் பிறகு 2 வருடங்கள் முடிந்தது என்றால், இன்னும் ஒரு...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2005 செப்டம்பர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், எஸ்.ஆர்.பி. பேசியதற்கு நீங்கள் பொழிப்புரை சொல்ல வேண்டாம். (குறுக்கீடு) அவரே தெளிவாகத்தான் சொல்கிறார்.

**திரு. துரைமுருகன்:** உங்களுக்கு இரண்டும் புரியாமல் பேசுகிறீர்கள். அதனால்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்வது, தேர்தல் ஆணையராக நியமிக்கப்படுபவர், அரசுத் துறைச் செயலாளராக நியமிக்கப்படுவதற்குரிய தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். (குறுக்கீடு) அதேபோன்று ஓர் உயர் நீதிமன்ற நீதிபதி பதவிக்கு நிகரான பதவி என்பதால் ஓய்வுபெறும் வயது அவருக்கு இருப்பதைப்போன்றே அமைந்திருக்க வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் 62 வயது நிறைவடைந்த பிறகு உயர் நீதிமன்ற நீதிபதியாக இருக்க முடியாது. அதேபோன்று மத்திய அரசு பதவி நீட்டிப்பு வழங்கினாலொழிய அரசுத் துறைச் செயலாளராகவும் இருக்க முடியாது. இவையெல்லாம் பொதுவான நிலைமை. எந்த ஒரு தனி மனிதரையும் கருத்தில்கொண்டு, அவருக்கு உதவுகிற வகையில், ஒரு சட்டத்தினை இயற்ற முடியாது. மாறாக, பொது நோக்குடையதாகவே சட்டம் அமைய வேண்டும். இவையெல்லாம் நான் பொதுவாகச் சொல்கிறேன்.

மத்திய தேர்தல் கமிஷன் (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். மத்திய தேர்தல் கமிஷன், உயர் நீதிமன்ற நீதிபதிகள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள், மத்திய, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள், அரசமைப்புச் சட்ட வழிப்பட்ட பொறுப்புகள், அதேபோன்ற பதவிதான் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் பதவியும். உயர் நீதிமன்ற நீதிபதி பதவியின் நிலைக்குச் சமமானதாகக் கருதப்பட வேண்டிய பதவி என்றும் கூறப்படுகிறது. இந்தப் பதவியைப் பொறுத்தவரை, உயர் நீதிமன்ற நீதிபதி பதவிக்குரிய பணிப் பாதுகாப்பும் இருக்கிறது. அதேபோன்று அரசின் ஒரு துறைச் செயலாளராக இருப்பதற்குரிய தகுதி படைத்தவர்தான் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அதை வேண்டுமென்றால் விட்டுவிடுகிறேன். நீங்கள் சொன்னதால் விட்டுவிடுகிறேன். (குறுக்கீடு) வேண்டாம்.

அனுபவம் வாய்ந்த அதிகாரி, உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடிக்கிற வரைக்கும் பதவியில் நீட்டிக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. 1996 தேர்தலை நடத்தி முடித்த திறமையான – அது வேண்டாம்; உள்ளாட்சித் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்பது அறிவிக்கப்படவில்லை. ஆனால், அடுத்த புதிய உள்ளாட்சித் தேர்தல் நடக்கும்போது, இந்த மன்றத்தின் ஆயுட்காலம் முடிந்துவிடும். எனவே, ஆட்சிப் பொறுப்பில் தாங்கள் இல்லாவிட்டாலும் தங்களுக்கு விருப்பமானவரை வைத்தே உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும். (குறுக்கீடுகள்) அதைப் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) அதைப் பார்த்துக்கொள்ளலாம். அதற்காகவே ஓர் அற்புதமான கொள்கை முடிவெடுத்திருக்கிறது. ஆனால், இந்தச் சட்டம் சட்டவியலின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கே முரணானதாக அமைந்திருக்கிறது. எந்த ஒரு தனி நபரின் நலனுக்காகவும் சட்டத்தை இயற்ற முடியாது. மாறாக, அது ஒரு பொது நோக்கம் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும். அரசு மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையாக இருந்தாலும் பொது நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும். சட்டமன்றத்தில் எழுப்பப்படும் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பொது நோக்கு கொண்டதாகவும், பொது நன்மைக்கானதாகவும் இருக்க வேண்டுமென்று விதிமுறைகளே வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆணையராக வருபவருக்கு அரசுச் செயலாளர் தகுதி இருக்க வேண்டுமென்று சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதன்படி 60 வயது நிறைவடைந்தவர் எவரும் செயலாளராக இருக்க முடியாது. ஒருவேளை பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டால், அந்தக் காலம் வரை அவர் பதவியில் நீடிக்கலாம். ஆனால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு பதவி நீட்டிப்பு வழங்குகிற அதிகாரம் மத்திய அரசிடம்தான் இருக்கிறது. மாநில அரசுகள் அந்த அதிகாரத்தை தங்கள் கையில் எடுத்துக்கொள்ளும் வகையில், எத்தகையச் சட்டத்தையும் கொண்டு வர முடியாது. எனவே, தன்னால் ஓர் உத்தரவுமூலம் பதவி நீட்டிப்பு வழங்க முடியாத ஒன்றை சட்டம் இயற்றுவதன்மூலம் மாநில அரசு செய்ய முடியாது. ஆனால், ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ அங்கீகாரம் அளிப்பதற்கும் அரசமைப்புச் சட்டத்தில் இடமில்லை. ஓய்வு பெற்ற ஒருவருக்கு, பதவி நீட்டிப்பு செய்ய, சட்டம் இயற்றுவதற்குப் பதிலாக பதவி உயர்வை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தகுதியும் திறமையும் படைத்தவர்களுக்கு அந்த வாய்ப்பினை வழங்குவதுதான் சட்டப்படி சரியாக இருக்க முடியும்.

சட்டமன்றச் செயலாளராக இருந்து, ஓய்வு பெற்றுச் சென்றுவிட்ட ஒருவரை, திரும்பவும் அழைத்து வந்து, அவரை முதன்மைச்



செயலாளர் என்ற பொறுப்பில், ஒப்பந்த அடிப்படையில் இந்த அரசு நியமனம் செய்தது. ஏற்கெனவே பணியில் இருக்கும் செயலாளரை செயலற்றவராக மாற்றும் வகையில் அவருக்கும் மேலே உயரமான இடத்தில் அவர் அமர்த்தப்பட்டார். ஆனால், தேர்தல் கமிஷன் அதை அங்கீகரிக்கவில்லை. தேர்தல் கமிஷன் Rajya Sabha – மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தலை செயலாளர்தான் நடத்த வேண்டுமென்று சொல்லிவிட்டது. அதேபோல ஜனாதிபதி தேர்தலுக்கும் அவர்தான் தேர்தல் அதிகாரியாக இருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டது. எனவே, அவர் போய்விட்டார். அதை விட்டுவிடலாம். வேண்டாம்.

அதேபோல், சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு தகுதி படைத்த ஒரே மனிதர் இவர்தான் என்றும், இவரை விட்டால் வேறு எவராலும் வீரப்பனைப் பிடிக்க முடியாது என்றும் ஓர் அற்புதமான காரணத்தினைக் கூறி, காவல் துறை இயக்குநர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுவிட்ட ஒருவருக்கு மிக உயர்ந்த பொறுப்பு வழங்கப்பட்டது. ஆனால், அவரால் பிடிக்க முடியவில்லை. அவரைவிட இளையவராக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இந்த உதாரணங்கள் எல்லாம் இங்கே வேண்டாம். இருக்கிற உதாரணங்களை எல்லாம் தேடிப்பிடிக்க வேண்டாம். இந்தச் சட்டமுன்வடிவின் மேலே உங்களுடைய கருத்தை மட்டும் சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** சட்டமுன்வடிவின் மீதுதான் கருத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே உங்களுடைய கருத்து என்ன என்பதை மட்டும் சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** அதேபோன்றுதான் குறிப்பிட்ட ஒருவரை பதவியில் நீட்டிக்கச் செய்ய வேண்டும் என்கிற தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே ஏற்க முடியாத காரணத்தைக் காட்டி, இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. நீதி விசாரணை கமிஷன்களுக்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளை நியமித்தால் அவர்களுடைய அறிக்கை ஒரு சார்பானதாகவும், அரசின் நிலையை ஒட்டியதாகவுமே இருக்க முடியும் என்கிற பொதுவான கருத்து இருக்கிறது. அதனால் நீதிபதிகளையே அத்தகைய பதவிகளுக்கு நியமிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் இருந்து வருகிறது. அந்தமாதிரி திரும்பத் திரும்ப நியமிப்பது சரியல்ல. இந்நிலையில்

சுதந்திரமாகவும், நேர்மையாகவும், நியாயமாகவும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது அடிப்படையான நெறிமுறையாக அமைந்திருக்க வேண்டும். நேர்மையற்ற முறையில் நியமிக்கப்படும் ஒருவர் தேர்தலை நேர்மையாக நடத்துவார் என்று எதிர்பார்க்க முடியாது. மத்தியிலே Supreme Court இருக்கிறது. Supreme Court–னுடைய Judge–க்கு 65–தான் வயது. அதேபோல இங்கேயிருக்கிற High Court Judge–க்கு 62–தான் வயது. அங்கே Union Public Service Commission இருக்கிறது. அங்கே 65 வயது, இங்கேயிருக்கிற வயது குறைவு.

*பிற்பகல் 12–20*

அதேபோல வேறு எந்தப் பதவியாக இருந்தாலும் அங்கேயிருக்கிற Central Election Commission–ஐப் பொறுத்தவரையில் 6 ஆண்டு காலம்தான் இருக்க முடியும். 65 வயது வரைதான் இருக்க முடியும். இங்கே இருக்கிற Election Commission 2 ஆண்டுக்குதான் நியமிக்கப்படலாம். மேலும் 2 பதவி நீட்டிப்புக் கொடுத்தாலும்கூட 6 ஆண்டு காலம், 62 வயது எட்டுவதற்கு முன்பு அந்த 6 ஆண்டு காலம் முடிந்து அவர் பதவி விலக வேண்டும். அத்தனையையும் மீறி இப்போது தனிப்பட்ட விருப்பு அடிப்படையிலும், நேர்மையற்ற வகைகளிலும் குறிப்பிட்ட ஒருவரை நியமிப்பதற்காகவும் கொண்டுவரப்படும் இந்தச் சட்டம் எல்லா நெறிமுறைகளுக்கும் எதிரானதாக அமைந்திருக்கிறது. எனவே, இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அவசரச் சட்டம் எந்த வகையிலும் எதற்கும் உட்பட்ட சட்டமாக எனக்குத் தெரியவில்லை. எனவே, இந்த அவசரச் சட்டத்தை முழுமையாக நிராகரிக்க வேண்டும். எவ்வளவு வேண்டுமானாலும் திறமையான அதிகாரிகள் நமக்குக் கிடைப்பார்கள். ஏனென்றால் தமிழகத்தில் வெற்றிடம் சீன்று இருக்க வாய்ப்பே கிடையாது. திறமையானவர்கள் தமிழகத்திலே நிறைய இருக்கிறார்கள். There is no dearth of hands என்று கிடையவே கிடையாது. அதனால் நீங்கள் கண்டிப்பாக இந்த அவசரச் சட்டத்தை, இந்தப் பேரவை நிராகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய முதல் நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கடுமையான எங்கள் எதிர்ப்பை தெரிவித்துக்கொள்கிறோம். ஓர் அவசரச் சட்டம் என்பது எதற்காக



ஓர் அரசால் கொண்டு வரப்பட வேண்டும் என்பது குறித்துப் பார்க்கின்றபொழுது அவசரத்திற்கான ஓர் அவசியம் தேவைப்படுகிறது. அவசியம் இல்லாமல் ஓர் அவசரச் சட்டம் என்பது இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே, அந்த அவசியம் என்ன என்பதும் இந்த ஓர் அவசரச் சட்டம் வரவில்லையென்றால் மிகப் பெரிய நிகழ்வு நடந்துவிடும் அல்லது மிகப்பெரிய சோதனைகள் ஏதேனும் வந்துவிடும் ஆகவே, அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்கின்ற அடிப்படையிலே கொண்டுவரப்படுகின்றன அவசரச் சட்டங்கள். அவசியம் என்பது இதிலே என்ன என்று நான் எண்ணிப்பார்க்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதற்கான நோக்கங்களை எண்ணிப் படிக்கின்றபொழுது, அந்த நோக்கத்திலே குறிப்பிடுகிறார்கள். என்ன குறிப்பிடுகிறார்கள் என்றால், தேர்தல் ஆணையரினுடைய பதவி—குறிப்பாக ஒன்றை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்—Tamil Nadu State Election Commissioner Conditions of Service Rules 1994, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் பணி நிபந்தனைகள் விதிகள் 1994–ல் 11–வது விதி, அவர்களுடைய status, அந்தஸ்து மாநில தேர்தல் ஆணையரின் பணி நிபந்தனைகள் மற்றும் பிற வகை சலுகைகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் பணி நிபந்தனைகள் சட்டம் 1954 மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் பயணப்படிகள் விதிகள் 1956–ல் சொல்லப்பட்டதுபோல் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு அனுமதிக்கப்பட்டது போலவே இருத்தல் வேண்டும். ஆக, தேர்தல் ஆணையர் உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளுக்குரிய status அந்தஸ்து பெற்றவராக இருக்கிறார் என்கிற நிலையில், இந்த கால வரம்பு நீக்கப்படுதல், வயதிற்கும் அல்லது அவருடைய தொடர் பணிக்கும் எந்தவிதமான காலமும் வரையறை இல்லாமல் இருக்க வேண்டும் என்கின்ற நிலை இந்தச் சட்டத்தின் மூலமாகக் கொண்டுவரப்படுவதற்கான அவசியம் என்ன என்பதும், அடுத்ததாக இவர்கள் குறிப்பிடுவது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வழக்கமான தேர்தல்கள் நடைபெறுகின்றன, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் 2 ஆண்டுகளுக்கு மறு நியமனம் கொண்ட அடுத்தடுத்து 2 ஆண்டு கால அளவிற்குள்ளான வழக்கமான தேர்தலை நடத்துவதற்கு வாய்ப்பு ஒன்றைப் பெறாமல் போகலாம். எனவே, மேற்சொன்ன ஊராட்சிக்கு குறைந்தது ஒருமுறையாவது சாதாரண தேர்தலை நடத்துவதற்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் தனது அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்த வேண்டுமாய்—நான் கேட்டுக்கொள்கிறேன். அனுபவத்தையும் அறிவையும் பயன்படுத்தல் என்றால் ஒருவர் தேர்தல் ஆணையராக நியமிக்கப்படுகின்றபொழுது

யாரும் அறிவற்றவராக அல்லது அனுபவமற்றவராக இருப்பவரை நியமிக்கப்போவதில்லை; ஒருவர், இந்தத் தொடர் பணியிலே இருக்கிற காரணத்தால்தான் அந்த அறிவும் அனுபவமும் வருகிறதென்றால் ஒவ்வொரு பணியையும் ஏற்கின்ற அரசு ஊழியர்களையோ அல்லது அரசு நிலையில் இருப்பவர்களையோ அவர்களின் அனுபவத்தைப் பற்றிக் கேட்பதற்கு இது என்ன தனியார் கம்பெனியின் சட்டமா? நீ எத்தனை ஆண்டு experience? உனக்கு எத்தனை ஆண்டு காலம் பணி அனுபவம் இருக்கிறது என்று கேட்பதற்கு? தனியார் துறைக்கான நிலைகள் இதிலே இருப்பதற்கான அவசியமில்லை; இது அரசு. ஆக அரசின் நிலையிலே ஆணையர் என்ற மிக உயர்ந்த ஒரு பொறுப்பிற்கு அறிவும், அனுபவமும் இருக்கின்ற ஒருவர் நியமிக்கப்படுகிறார். அப்படி நியமிக்கப்பட்டு செயல்படுகிறார். ஒன்றை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். எந்த அரசாக இருந்தாலும் சரி, அரசமைப்புச் சட்டத்தின்படியும் சரி, நீண்டகாலம் ஒருவர் அந்தப் பொறுப்பிலே இருப்பாரேயானால், விருப்பு, வெறுப்பு அங்கு தோன்றுகிற நிலை வரும். ஆகவேதான், ஆணையர் போன்ற பொறுப்புகளுக்கு இதற்கு முன்பாக இருக்கின்ற சூழ்நிலைகள், இதற்கு முன்பாக இருந்த விதிமுறைகளுக்கு அதுதான் காரணம். ஆக, விருப்பு, வெறுப்பு ஏற்படுகின்ற நிலை நீண்ட காலம் பணியிலே இருப்பதால் வரும் என்கிற காரணத்தால், இந்த ஆணையர் பதவிக்கு உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு இருப்பதைப் போல வயது வரம்பு, அதைப் போல பதவி காலத்திற்கான வரம்பு ஆகியவை இதற்கு முன்பாக இருந்துகொண்டிருக்கின்றன.

*பிற்பகல் 12–25*

தேர்தலிலே வழக்கமான தேர்தல் என்று சொல்கிறார்கள். வழக்கம் இல்லாத தேர்தலாக வருவது இடைத் தேர்தல்கள். உள்ளாட்சி மன்றங்களுக்கு இடைத் தேர்தல்கள் வந்துகொண்டிருக்கின்றன, நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதிலே வழக்கமான தேர்தலை நடத்துவதற்கு என்கின்றபோது வழக்கம் இல்லாத தேர்தலை நடத்துவதற்கு இல்லை என்று ஆகிவிடாது. ஆகவே, தேர்தல்களை நடத்துவதற்கு என்கின்ற காரணங்களினால் இப்படிப்பட்ட கேள்விகள் இதிலே வருகிற காரணத்தால்தான் இதிலே ஐயம் ஏற்படுகிறது. வேறு ஒன்றும் அல்ல. இந்தச் சூழ்நிலைகளில் ஆணையர்கள் பொறுப்பிற்கு வருகின்றவர்கள், ஆணையர்கள் என்பவர்கள் எதற்காக நியமிக்கப்படுகிறார்கள் என்பதற்கான நிலை நமக்குத் தெரியும். ஆகவே, இடைத் தேர்தல்களை நடத்தி, கார்ப்பொரேஷன் போன்றவற்றிற்கு





இடைத் தேர்தல்களை நடத்திய அனுபவம் வாய்ந்தவர் என்கின்ற காரணத்தால் இது தனிப்பட்ட நபருக்கு நீட்டித்துத் தருகின்ற சூழ்நிலையை இப்போது கொண்டுவருகிறீர்களோ என்கிற ஐயம் எதிர்க் கட்சிகளுக்கு ஏற்படுகிறது. ஆகவேதான், இப்படிப்பட்ட சட்டங்கள் சரியானது அல்ல, முறையானது அல்ல, நிறைவேற்றுவதற்கு ஏற்புடையது அல்ல என்கிற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது. பழனி மலை நிலையாக இருக்கலாம், தேர்தல் ஆணையர் பதவி நிலையாக இருக்கக்கூடாது என்று எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மதுரை மாவட்டத்தில் உள்ள பாப்பாப்பட்டி, நாட்டார்மங்கலம், விருதுநகர் மாவட்டத்திலுள்ள கொட்டக்காச்சியேந்தல் சிற்றூராட்சிகள் மற்றும் கீரிப்பட்டி போன்ற இடங்களில், இப்படி நீண்டகாலமாக 6 மாதத்திற்கு ஓர் இடைத் தேர்தல் நடைபெறுவதற்கு சட்டம் கொண்டு வந்தாலும், அந்தத் தேர்தல் நடைபெறாமல் இருப்பதால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத காரணத்தால் அந்தக் கிராமத்தினுடைய அடிப்படை வசதிகளான குடிதண்ணீர், சாலைகள், விளக்கு வசதிகள் இவை இல்லாமல் அந்தக் கிராமங்கள் இப்போது பாதிக்கப்பட்டு நீண்டகாலமாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த ஆட்சியிலே அந்தத் தேர்தலை நடத்துவது ஒரு கேள்விக்குறியாகவேதான் இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, தொடர்ந்து தனி அதிகாரிகளுடைய பதவியினை நீட்டித்துக்கொண்டிருப்பது அந்தத் தேர்தல் நடக்காதோ என்ற அச்ச நிலையைத்தான் உருவாக்குகிறது. ஆகவே, அந்தத் தேர்தலை அவசியம் நடத்தி, மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தக் கிராமப்புற மக்களுக்கான பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்லி, இந்தச் சட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

[2005 செப்டம்பர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் கடுமையாக எதிர்க்கிறேன். உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலை நடத்தி முடிக்கும் பொறுப்பு தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் பொறுப்பாகும். தமிழ்நாடு தேர்தல் ஆணையம் ஒரு தன்னாட்சி அமைப்பு. மாநில தேர்தல் ஆணையம் இந்த அமைப்பின் ஓர் அங்கம். ஆணையாளர் ஒருவரின் அனுபவம், அறிவு ஆகியவற்றை மட்டுமே வைத்து சிறப்பாக தேர்தலை நடத்தி முடித்துவிட முடியாது. அதற்குக் கூட்டு முயற்சி மிக அவசியம். ஆனாலும், ஓர் ஆணையாளர் தொடர்ந்து 6 ஆண்டுகாலம் பதவியில் இருக்கலாம் என்று இந்தச் சட்டம் சொல்கிறது. இதற்கு முன்னால் இருந்த சட்டம் 62 வயது வரை, அந்த ஆணையாளருக்கு வயது 62 வரை, அவர் அந்தப் பதவியிலே இருக்கலாம் என்று மிகத் தெளிவாகச் சொல்கிறது. அப்படி இருக்கும்போது அந்த ஆணையாளரால் எப்படியாவது ஒரு தேர்தல், 5 ஆண்டு காலத்திற்கு ஒரு முறை வரக்கூடிய தேர்தலை நடத்தி முடிக்க முடியும்.

திரு. புகழேந்தி அவர்கள் சொன்னது போல, இடைத் தேர்தல் வந்தால் பலர் நடத்தி முடிக்க முடியும். ஆனாலும், அப்படி இவ்வளவு தெளிவாக இருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் என்ன உள்நோக்கம் வைத்திருக்கிறது என்பது எங்களைப் போன்ற கட்சிக்காரர்களுக்குத் தெரியவில்லை. பதவியில் இருக்கும் ஆணையாளரின் பதவிக் காலம் வரை தொடரும் என்ற அந்த அதிகாரம் அரசின்வசம் இருக்கிறது. பதவியிலே இருக்கக்கூடிய அந்த ஆணையாளருக்குப் பதவியைத் தொடர்ந்து கொடுக்கலாம் என்று அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்தால், அந்தச் சட்டம்— எங்களுடைய கிராமத்திலே சொல்வார்கள், ஓடாத சண்டிக் குதிரைக்கு முன்னால் புல்லுக் கட்டைக் கட்டிவிடுவார்கள். புல்லுக் கட்டைப் பார்த்துக்கொண்டே அது ஓடும். அதுபோல, அரசாங்கத்திற்கு ஒத்துவராத அதிகாரி, அவருக்கு பதவி நீட்டிப்பு என்று ஒரு சட்டத்தைக் கையில் வைத்திருக்கும்போது, அரசாங்கம் எண்ணக்கூடிய செயலைச் செய்யக்கூடிய ஒரு மோசமான நிலைக்கு இந்தச் சட்டம் இருக்கிறது என்பதனை நான் கடுமையாக இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2005 செப்டம்பர் 29] [திரு. ஐ. கணேசன்]

பிற்பகல் 12–30

அதேபோல, இந்தியாவினுடைய நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தலை நடத்தும் ஆணையாளருக்கே வயது 65–தான் சபாநாயகர் அவர்களே. இந்தியாவினுடைய நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தலை நடத்தக்கூடிய ஒரு ஆணையாளருக்கே வயது வரம்பு 65 என்று நிர்ணயிக்கப்பட்ட இந்த நாட்டிலே, ஒரு மாநிலத்தினுடைய தேர்தலை நடத்துவதற்கு வயது வரம்பு தேவையில்லையா? என்ன சட்டம்? உள்ளாட்சி, பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவதற்கு வயது வரம்பே தேவையில்லை என்று ஒரு புதுமையான, ஒருவிதமான, ஓர் அதிர்வு தரக்கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதால் மிகவும், மிகவும் அதிர்ச்சி அடைவது மட்டுமல்ல; ஜனநாயகத்தையே குழி தோண்டிப் புதைக்கக்கூடிய ஒரு செயல் என்பதனை நான் மிகத் தெளிவாக இந்த அவையிலே, நான் என்னுடைய கருத்தாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டம் ஜனநாயகத் தேர்தல் முறைக்கு சமாதி கட்டுவது மட்டுமல்ல; அது மீண்டும் எழுந்திருக்கமுடியாத அளவிற்கு, ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்கக்கூடிய கடுமையான சட்டம் என்று சொல்லி, எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

***திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவு 17–ன்மீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு முன்பாக, அரசுக்கு என்னுடைய கிராமத்திலே நடந்த ஒரு நிகழ்வு குறித்து நன்றி சொல்லித் தொடர்வது நல்லது என்று நான் கருதுகின்றேன். என்னுடைய கிராமம் பினாயூர் கிராமம். காஞ்சிபுரம் மாவட்டத்திலே பாலாற்றங்கரையின் தென்கரையிலே, செங்கையிலேயிருந்து 16 கி.மீ. தூரத்திலே இருக்கின்றது. ஒரு வாரத்திற்கு முன்பாக மணல் திருடுபவர்கள் என்னுடைய கிராமத்திற்கு மிகப் பெரிய இயந்திரங்களைக் கொண்டுவந்து, அங்கு மணல் எடுக்க முற்பட்டார்கள். நேற்றுகூட அதைப்பற்றி இங்கே அவையிலே பேசினார்கள். கிராம அதிகாரியை அணுகிக் கேட்டேன், அவர்களுக்கு எந்தவொரு அனுமதியும் இல்லை என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சியாளரை அணுகினேன், யாருக்கும் அனுமதியில்லை என்று சொன்னார்கள். மற்றும் தேவையானவர்களை எல்லாம் கேட்டுப் பார்த்தேன். அப்படியென்றால் அங்கே மணல் எடுக்க வந்தவர்கள் ஒரு திருட்டுக் கும்பலாகத்தான் இருக்க வேண்டும் என்றேன். ஒருசில பெரியவர்களின் பெயர்களை அங்கே மணல் எடுக்க வந்தவர்கள் பயன்படுத்தினார்கள்.

நான் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை அணுகி, என்னுடைய கிராமத்திலே நடக்கவிருந்த அந்த நிகழ்வினைச் சொன்னேன். அங்கே மணல் எடுத்தால், பாலும் தேனும் ஓடுகின்ற ஒரு நல்ல வளமான கிராமமாக இருக்கின்ற அந்தப் பினாயூர் கிராமம் பாலைவனமாக மாறிவிடும்; அதைத் தடுக்க வேண்டுமென்றேன். அங்கேயிருந்த பஞ்சாயத்துத் தலைவர் தவிர மற்ற அனைத்து உறுப்பினர்களும்கூட இராஜினாமா செய்து விட்டார்கள். ஊர் மக்கள் அனைவரும் எதிர்த்து நின்றார்கள். இந்த நிலைமையை விளக்கினேன். மதிப்பிற்குரிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அதிலே தலையிட்டு, இது நடக்காது, நான் நிறுத்துவேன் என்று சொன்னது மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) உடனிருந்த தன்னுடைய உதவியாளரிடம் உடனடியாக அப்படி ஏதாவது அங்கு நடந்தால் நிறுத்துங்கள். அந்தப் பகுதியிலே மணல் எடுக்கக் கூடாது என்று ஆணையிட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியினை மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை, பொதுப் பணித் துறை அமைச்சருக்கும், இந்த அரசுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே இந்தச் சட்டமுன்வடிவு 17-ன்மீது ஒருசில கருத்துகளை எடுத்துவைப்பது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவிலே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள், வழக்கமான தேர்தலை நடத்துவதற்கு இயலவில்லை என்று. ஏன் தேர்தலை நடத்தமுடியவில்லை என்ற காரணத்தை இங்கே குறிப்பிடவில்லை. அந்தக் காரணம் மறைக்கப்படுகின்றதா அல்லது மறுக்கப்படுகின்றதா என்று எனக்கு இங்கே தெரியவில்லை. இந்தத் தேர்தலிலே அங்கே யாரும் நிற்க முடியவில்லை, தப்பித் தவறி இந்தத் தேர்தலிலே நின்றாலும், அவர்கள் நிலைக்க முடியவில்லை. இத்தகையதோர் அவலமான நிலை. அங்கே ஜனநாயகம் படுகொலை செய்யப்படுகின்றது என்றால், அதற்கு மாற்றுக் கருத்து இருக்கவே முடியாது. இந்தச் சபையிலே இருக்கின்ற அனைவரும் அதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

*பிற்பகல் 12-35*

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தீவிரவாதம் நிறைந்த காஷ்மீரிலே நாம் தேர்தலை நடத்துகின்றோம். அதுமட்டுமல்ல, இனக்கலவரம் வெடித்து தலைவிரித்தாடிய அந்த குஜராத்





மாநிலத்திலே நாம் தேர்தலை நடத்தினோம். நேற்று முன்தினம்— நான் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக, ஆந்திர மாநிலப் பொறுப்பிலே இருக்கின்றேன். இரண்டு நாட்களுக்கு முன்பாக நக்சலிசம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்ற ஆந்திர மாநிலத்திலே ஓர் அசம்பாவித நிகழ்வுகூட நடக்காமல் மாபெரும் தேர்தலை நாம் நடத்திக் காட்டியிருக்கின்றோம். அப்படி பாதிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் தேர்தல் நடந்துகொண்டிருக்கிற இந்த நேரத்திலே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி நாட்டார்மங்கலம் போன்ற இடங்களிலே தேர்தல் நடக்காததனுடைய காரணம் என்ன? ** ஏன் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? எங்கோ காட்டிலே, மூலையிலே இருக்கின்ற ஒருவன், ஆயிரம், இரண்டாயிரம் காவலாளர்களைக் கொண்டு கண்டுபிடிக்கப்படுகிறான்; சுட்டுக்கூட கொல்லப்படுகின்றான். ஆனால், ** இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்கின்றது. எந்த ஒரு நடவடிக்கையும், சரியான நடவடிக்கையும் எடுக்காத ஓர் அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) மன்னிக்க வேண்டும், (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு பேசுங்கள். நான் பேசி முடித்துவிடுகிறேன், உட்காருங்கள். தலைவர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடட்டும், முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. கு. ஜெயக்குமார்:** நான் பேசி முடித்துவிடுகிறேன். அமைச்சர் அல்ல அவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் சொல்லி முடித்துவிடுங்கள், அவ்வளவுதான். இந்தச் சட்டத்தை எதிர்க்கிறீர்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** அதுமட்டுமல்ல, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிகழ்வினைச் சொல்கின்றேன். இதே அரசு, இதே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு முன்பு ஆட்சியில் இருந்தபோது, இங்கே உள்ளாட்சித் தேர்தல் நடத்துவது சற்று தாமதப்படுத்தப்பட்டது; 1995-96-ல் என்று நினைக்கின்றேன். அந்த நேரத்திலே, மத்தியிலே ஆட்சியிலேயிருந்த எங்களுடைய கட்சியின் பிரதமராக இருந்த திரு. நரசிம்மராவ் அவர்கள் சொன்னார்கள்...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், குறிப்பிட்ட அந்த ஊராட்சிகளுக்கு.. (குறுக்கீடு)

**திரு. கு. ஜெயக்குமார்:** உள்ளாட்சித் தேர்தல்கள் தமிழகத்தில் நடத்தப்படவில்லையென்றால் பணம் கொடுக்க முடியாது என்றார்கள். ஏன் தமிழக அரசு அந்தக் கிராமங்களுக்கு மின்சாரத்தை நிறுத்தவில்லை? ஏன் தண்ணீர் வசதியை நிறுத்தவில்லை? ஏன் சாலைகள் போடுவதை நிறுத்தவில்லை? ஏன் அந்தக் கிராமங்கள் புறக்கணிக்கப்படவில்லை? அங்கே ஒரு பஞ்சாயத்துத் தலைவர் இருந்தால்தான், இந்த வசதிகள் செய்து தரப்படும் என்று ஏன் இந்த அரசு சொல்லவில்லை என்ற கேள்வியைக் கேட்டு, ஆயிரம் திட்டங்களை நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஒரு சாதாரண பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த முடியாத நீங்கள் திட்டங்களை எப்படிச் செயல்படுத்தப் போகின்றீர்கள் என்று கேட்டு அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுகின்றபோது, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. லா. சந்தானம்:** அது நிச்சயமாக அவைக்குறிப்பிலே இருக்கக் கூடாது. அதற்கு நான் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, அது.. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) திரு. கு. ஜெயக்குமார் (குறுக்கீடு) திரு. கு. ஜெயக்குமார், அவ்வளவு ஆவேசப்பட்டுப் பேசாதீர்கள். (குறுக்கீடு) ஆவேசப்பட்டுப் பேசாதீர்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அந்தக் குறிப்பிட்ட ஊராட்சிக்கு (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. கு. ஜெயக்குமார், உட்காருங்கள். குறிப்பிட்ட ஊராட்சிகளிலே தேர்தலை நடத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அவர்களே ஏற்பாடு செய்து, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே அதிலே தலையிட்டு எல்லாம் செய்தார்கள். புதிய பிரச்சினைகளை இப்படிக் கிளப்பக் கூடாது. தாங்கள் குறிப்பிட்டது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார், தாங்கள் குறிப்பிட்டது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. வேல் முருகன், (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் ஓர் உண்மைக்குப் புறம்பான செய்தியை இங்கு.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சத்தம் போட்டுப் பேசுவதனால் அது உண்மையாகிவிடும் என்ற நோக்கத்தோடு இங்கு செய்திகளை, நிகழ்வுகளை திரித்துக் கூறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகின்றேன். ஒவ்வொரு முறையும் உள்ளாட்சி மன்றத்தினுடைய இடைத் தேர்தல்கள் நடைபெறுகின்றபோது, பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் என்ற நான்கு ஊராட்சி மன்றங்களிலும் தேர்தல் நடைபெறும் என்று முறைப்படியான அறிவிப்பு வெளியிடப்படுகிறது. முறைப்படியாகத் தேர்தல் நடைபெறுவதற்குண்டான ஆயத்தப் பணிகள் நடைபெறுகின்றன. யார், யாரெல்லாம் போட்டியிடுகின்றார்களோ, அவர்களிடமிருந்து வேட்பு மனுக்கள் வாங்கப்படுகின்றன, பரிசீலிக்கப்படுகின்றன. தேர்தல் நடத்துவதற்குண்டான அனைத்து ஆயத்தப் பணிகளையும் அரசு முறைப்படி செய்து கொண்டுதான் இருக்கின்றது. 2, 3 முறை அது தள்ளிவைக்கப்படுகின்ற அல்லது அங்கு தேர்தல் புறக்கணிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றபோது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னையும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் நேரடியாக அந்தக் கிராமங்களுக்குச் சென்று நிலைமைகளை அந்த மக்களிடம் விளக்கிக்கூறி, தேர்தல் நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ள எங்களுக்கு ஆணையிட்டார்கள். அந்த அடிப்படையில் நானும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் அந்த நான்கு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 செப்டம்பர் 29

கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று அந்த மக்களையெல்லாம், அனைத்துத் தரப்பு மக்களையும் அழைத்துப் பேசி தேர்தல் நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று சொன்னோம். அவர்களும் மிகுந்த ஒத்துழைப்புத் தருவோம் என்று உறுதியளித்திருந்தார்கள். ஆனால், யாரும் முன்வரவில்லை. அதுதான் அங்கு இருக்கின்ற உண்மை. அரசு இதை ஒரு பொருட்டாக வைத்துக்கொண்டு அந்தக் கிராமத்திற்கு குடிநீர்ப் பிரச்சினையோ அல்லது வசதிகள் ஏற்படுத்துவதைத் தடை செய்யவோ முடியாது. அதை எந்த அரசும் செய்ய சட்டத்தில் இடமில்லை. தேர்தல் நடக்காது, நடக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற ஒரே காரணத்திற்காக அரசில் இருக்கின்றவர்கள் அந்தக் கிராமத்திற்கு வழங்கப்படுகின்ற வளர்ச்சித் திட்டங்களையோ, வழங்கப்படுகின்ற குடிநீரையோ வழங்க மறுப்பதற்கு எந்தச் சட்டத்திலும் இடமில்லை.

*பிற்பகல் 12–40*

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் ஒரு பதற்றமான சூழ்நிலையை உருவாக்குகின்ற நோக்கத்தோடு பேசிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் இம்மாதிரியான பிரச்சினைகளில் தலையிட்டுப் பேசுகின்றபோது ஒரு பதற்றத்தை உருவாக்குகின்ற நோக்கத்தோடு, அங்கே சகோதரராக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களைப் பிரித்தாளுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்ற நோக்கத்தோடு எந்த நேரத்திலும் எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் பேசுதல் கூடாது என்பதனை நான் இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக அரசு எடுக்கின்ற அத்துணை முயற்சிகளையும் எடுத்துக்கொண்டுதான் இருக்கின்றது என்பதனையும் நான் இங்கு தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம். (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார் உங்கள் பேச்சு முடிந்துவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்த அளவிலே, ஒரு நல்ல விளக்கத்தை நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். இந்த தனி அதிகாரியினுடைய பதவிக் காலம் நீடிப்பு என்பது இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில்



2005 செப்டம்பர் 29] [திரு. லா. சந்தானம்]

மட்டும் நடைபெறவில்லை. இந்த ஒதுக்கீடு என்பது 1996–லே ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கீடு. 1996–லிருந்து இந்த நிலைதான் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், நாங்கள் எல்லாம் ஒரு குழுவாகச் சென்று பார்க்கின்றபோது அந்த ஒதுக்கீடுகள், முறையாக ஜனத்தொகை அடிப்படையிலே ஒதுக்கப்படவில்லை.

கொட்டக்காச்சியேந்தல் என்கின்ற ஓர் ஊராட்சிக்கு 1,100 வாக்காளர்கள் இருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் வெறும் 13 பேர்கள்தான். 13 பேர்களே உள்ள ஓர் ஊராட்சியிலே, அதிலே 5 பேர்கள் ஆண்கள், மற்றவர்கள் பெண்கள். அந்த 5 பேர்களில் 3 பேர்கள் 60 வயதுக்கு மேல் ஆனவர்கள். இப்படிப்பட்ட ஓர் ஊராட்சியை ஒதுக்கி இருந்தால், அங்கு எப்படி தேர்தல் நடத்த முடியும்? அங்கு யாருமே முன்வரவில்லை என்கின்ற நிலையை நேரிலே பார்க்க முடிந்தது. நமது சகோதரர் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் அங்கு இருந்தார்கள். அதுபோல இந்த ஊர்களுக்குச் செல்லுகின்றபோது எல்லா ஊர்களிலும் தேர்தல் நடத்தப்பட்டது. அதுதான் உண்மை. 1996–லிருந்து 2001 வரை எந்தத் தேர்தலும் நடத்தப்படவில்லை. அங்கு யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால், அதற்குப் பின்னால் கடந்த மூன்று முறை தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்துத் தலைவர் வந்து இருக்கிறார். வந்தவர் தனக்கு பதவி வேண்டாம் என்று இராஜினாமா செய்துவிட்டுச் சென்று இருக்கிறார். அரசு செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாகத்தான் செய்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே யாரும் முன்னுக்கு வரவில்லை என்று சொன்னால் அதற்கு யார் என்ன செய்ய முடியும்?

இந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள்கூட, தங்களுடைய அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களை நிறுத்தி வெற்றிபெற வைத்து, அங்கு ஊராட்சித் தலைவராக நிலைக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறிவிட்டு அது ** என்று கூறுவது முறையற்ற செயல். அதுவும் இப்படி பொறுப்பற்று, இந்த மன்றத்திலே அந்த உணர்வுகளைத் தூண்டுகின்ற அளவுக்குப் பேசுவது தப்பு.

அதுவும் பொறுப்புள்ள மன்றத்தில் – பேசுவது என்பது ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினருக்குப் பொருத்தமாக இருக்க முடியாது. அங்கு இருக்கின்ற அத்தனை பேரும்...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

186284
சென்னை-600 008
D V24,31 P05 P05.8612

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. சந்தானம் அவர்கள், அவர் குறிப்பிட்டது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. அவர் குறிப்பிட்ட அந்தச் சில வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன.

**திரு. லா. சந்தானம்:** இல்லை. நான் ஒன்றும் சொல்லவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. லா. சந்தானம்:** சாதிய உணர்வுகள் அங்கு இருக்கிறது என்பது தவறு என்றுதான் நான் சொல்கிறேன். அதைப் பொறுத்த அளவிலே, இதுவரைக்கும் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில், 1996–லிருந்து 2001 வரை எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. இந்தமாதிரி சட்டமன்றத்தில் ஒரு கேள்விகூட எழுப்பப்படவில்லை. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான், கண்டிப்பாக எல்லா ஊராட்சிகளிலும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்கிற எண்ணத்தோடு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சருடன், நானும்கூட அந்தக் கிராமத்திற்கு நேரடியாகச் சென்று, அவர்களிடம் பேசி, முறையாக நீங்கள் தேர்தலில் நிற்க வேண்டுமென்று சொன்னவுடனே, கண்டிப்பாக நிற்கிறோம்; ஆனால், எங்களால் செயல்பட முடியவில்லை, வயதாகிவிட்டது என்ற நிலைமையை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும், தேர்தல் நடத்த வேண்டும், தேர்தலில் நிற்க வேண்டும் என்று சொன்னதன் விளைவாக, அங்கே தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். வெற்றியும் பெற்றார். வாக்குகளெல்லாம் முறையாக, அங்கிருக்கிறவர்கள் முத்திரையிட்டார்கள். அங்கேயும் போட்டி வந்தது. அங்கே இருவர் நின்றார்கள். ஒருவருக்கு அதிகப்படியான வாக்குகள் கிடைக்கப்பெற்றன. ஒருவருக்குக் குறைவான வாக்குகள் அங்கே கிடைத்தன. அதிக வாக்குகள் பெற்றவர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார். அறிவிக்கப்பட்டவுடன் செயல்படுகிறபோதுதான், அவர் தன்னால் செயல்பட முடியவில்லை என்று இராஜினாமா செய்கிறார். ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியில்,



நேர்மையான முறையில் தேர்தல் நடத்தப்பட்டது என்பதுதான் உண்மை என்பதை இங்கே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், பேசி முடித்துவிட்டீர்களா?

**திரு. லா. சந்தானம்:** அதோடுகூட, இந்தத் தேர்தல் ஆணையர் வயது வரம்பு நீட்டிக்கப்படுகிறது என்றுதான் சட்டத் திருத்தம் வந்திருக்கிறதே தவிர, அதிலே ஏதோ ஓர் உள்நோக்கத்தோடு, ஒரு தனிப்பட்ட நபருக்காக என்ற வார்த்தை இல்லை. அவர்களுடைய பெயர்களும் குறிப்பிடப்படவில்லை. ஆகையினாலே, அந்தச் சட்டத் திருத்தம் என்பது, அரசு அதை விரும்புகிறது. வயது வரம்பை நீட்டிக்கிறது என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை என்பதையும் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் போன்ற சிற்றூராட்சிகளின் தேர்தல்களை நடத்திய ஆணையரின் பதவிக் காலத்தை நீட்டிப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சி எதிர்க்கிறது. ஜனநாயக நாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி, தாழ்த்தப்பட்டவர்களுக்கான ரிசர்வ் தொகுதியாகவும், மாற்று சமுதாயத்தினர் வாழ்கின்ற பகுதி பொதுத் தொகுதியாகவும், நடைமுறையில் இருந்து வருகின்ற ஓர் இயல்பு, தமிழகத்தில் அப்படி இருந்து வருகிறபோது, இந்த நான்கு சிற்றூராட்சிகளில் மட்டும் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட சகோதரர்கள், அங்கு பஞ்சாயத்துத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பணியை ஆற்றுவதற்கு முன்பாக, அந்தத் தேர்தல் அதிகாரியால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான வெற்றிச் சான்றிதழைக் கையில்பெற்ற மறு நிமிடமே, அடுத்ததாக தன்னுடைய இராஜினாமாவைக் கொடுக்கின்ற ஓர் அவலம் இருக்கின்றது. என்னைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் அவர்கள்கூட, கடந்த சில நாட்களுக்கு முன்பாக, மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்கிற வகையிலே சில அறிவிப்புகளை வெளியிட்டார்கள். தமிழக அரசும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் நிச்சயமாக நினைத்தால், இந்த கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் போன்ற பகுதிகளிலே முறையாகத் தேர்தலை நடத்தி, அந்தப் பஞ்சாயத்துக்களுடைய தலைவர்கள், தொடர்ந்து

[திரு. தி. வேல் முருகன்] [2005 செப்டம்பர் 29

பஞ்சாயத்துத் தலைவர்களாக அங்கு பணியாற்றுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். அப்புறம் பேசுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** ஆக, நம்முடைய அரசு எல்லா நிலைகளிலும் நாங்கள் புரட்சி செய்கிறோம் என்று சொல்கின்றபோது, ஓடாத தேர்களை ஓட்டுகிறோம் என்று சொல்கின்ற தமிழக அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், அந்தத் தேர்தலை நடத்த முயற்சி எடுத்தார்கள். தேர்தல் நடத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பதவியில் தொடர்ந்து இருக்க நீங்கள் முயற்சி செய்யுங்களேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, போதும். சொல்லிவிட்டீர்கள், போதும்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களின் பதவியை நீட்டித்தது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் எஸ்.ஆர்.பி., புகழேந்தி மற்றும் கணேசன் ஆகியோர் இங்கே பேசுகின்றபோது, உள்நோக்கத்தோடு நீட்டிப்பதாகக் கூறுகிறார்கள். அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். நடந்துமுடிந்த கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தலிலே, அங்கே தேர்தல் ஆணையராக இருந்தவர் யார்? எந்தவித உள்நோக்கமும் இல்லாமல் ஒரு தேர்தல் ஆணையருடைய பதவியை நீட்டித்துத் தருகின்றபொழுது, அதை உள்நோக்கம் என்று தவறான முறையிலே இங்கே குறிப்பிடுகின்றார்கள். அங்கே தேர்தல் ஆணையாளர்களாக நியமித்தபோது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் இடைத் தேர்தலிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு



2005 செப்டம்பர் 29] [திரு. கே.பி. அன்பழகன்]

வெற்றி தந்ததைப் போல, வருகின்ற எந்த பொதுத் தேர்தலாக இருந்தாலும்சரி, எந்த உள்ளாட்சி அமைப்பு தேர்தலாக இருந்தாலும்சரி, தமிழகத்திலே இருக்கின்ற மக்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் வெற்றியைத் தருகின்றார்கள் என்பதை அவர்கள் நினைத்துக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இங்கே, ...

பிற்பகல் 12–50

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். அவர் ஆட்சேபகரமாக ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** அவர்கள் கூறியதுபோல, நம்முடைய தமிழகத்தில் மட்டும் ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்துவிடட்டும் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** இங்கே தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையாளர் அவர்களுடைய பதவி நீட்டிப்பு செய்யப்படவில்லை. உதாரணத்திற்கு இங்கே, நான் சில மாநிலங்களைக் குறிப்பிட கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** நான் சில மாநிலங்களைக் குறிப்பிட கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்துவிடட்டும். கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** அஸ்ஸாம், திரிபுரா, கோவா, தமிழ்நாடு தவிர, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். அவர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன்.

[2005 செப்டம்பர் 29

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மற்ற மாநிலங்களில் தேர்தல் ஆணையாளர்களுக்கான.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்துவிடட்டும். அவர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மற்ற மாநிலங்களில் தேர்தல் ஆணையர்களின் வயது உச்ச வரம்பு 65 என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** ஒரேயொரு சின்ன..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் yield ஆகவேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) அவர் yield ஆகவில்லையே? அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) சரி, அவர் yield ஆகவேண்டுமல்லவா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மேலும், இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர் பதவிக் காலம் 5 ஆண்டு எனவும், மற்றும் வயது உச்ச வரம்பு 65 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்) முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர், முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில், மாநிலத் தேர்தல் ஆணையர்களுக்கு, உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்குச் சமமான அந்தஸ்தும், சம்பளமும் மற்றும் பதவிக் காலம் 5 ஆண்டுகள், வயது வரம்பு 65 என இருந்தால், சரியாக இருக்கும் என்று ஆலோசனை வழங்கியுள்ளார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) பேசி முடித்துவிடட்டும் அவர். (குறுக்கீடுகள்) முடித்துவிடட்டும். அவர் yield ஆகவேண்டும் அல்லவா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** இது மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதன் காரணமாகத்தான், இன்று நீட்டிக்கின்றார்கள். அதுபோல, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) முடித்தவுடன் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** அதுபோல, ஆந்திரப் பிரதேசத்திலே, 6 ஆண்டுகளுக்கு, 66 வயது வரை; அதேபோல சட்டீஸ்கரிலே 6 ஆண்டுகளுக்கு 66 வயது வரை இருக்கலாம்.



2005 செப்டம்பர் 29] [திரு. கே.பி. அன்பழகன்]

சிக்கிமிலே 5 ஆண்டுகள், 67 வயது வரை இருக்கலாம். பாண்டிச்சேரியிலே 3 ஆண்டுகள், 68 வயது வரை இருக்கலாம்; அதேபோல மகாராஷ்டிராவிலே 65 வயது வரை இருக்கலாம். ஒரிசாவிலே 65 வயது, பஞ்சாப்பிலே 65 வயது, இராஜஸ்தானிலே 65, அருணாசலப் பிரதேசத்திலே 65, குஜராத்திலே 65, அரியானாவிலே 65, கேரளாவிலே 65, உத்தரப் பிரதேசத்திலே 65, உத்தராஞ்சலிலே 65, வெஸ்ட் பெங்காலிலே 65, இப்படி மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, இந்த வயது வரம்பை அவர்கள் 66, 65 வயது வரை வைத்திருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** Point of Order.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:-** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி., அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்). அவர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) ஏன் அவசரப்படுகிறீர்கள்? அவர் பேசி முடித்துவிடட்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் சிற்றூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்கள் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வழக்கமாக நடைபெறுகின்றன. இவற்றிற்காக, தேர்தல் ஆணையர் அவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டித்துத் தருவதில், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய மாநிலத்திலே 62 வயது வரம்பினைத் தளர்த்தி, இன்று நீட்டித்துக் கொடுப்பதில் தவறில்லை. ஆகவே, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி அதையும் சொல்லி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசானது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்தார். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமான விளக்கத்தைத் தந்துவிட்டார்.

இருப்பினும் என்னுடைய பங்கிற்காக, எந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். 1996–லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பிலேயிருக்கின்ற நேரத்திலே, உள்ளாட்சித் தேர்தல் நடத்துகின்றபோது ஒருவர்கூட மனு தாக்கல் செய்வதற்கு முன்வரவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆடசிப் பொறுப்பேற்ற பிறகு, அவர் மக்களிடையே விழிப்புணர்ச்சி எல்லாம் ஏற்படுத்தி இங்கே மூன்று அமைச்சர்களையும், துணை சபாநாயகர் அவர்களையும், நான்கு பேர்களையும் அனுப்பி இரண்டு நாட்கள் தங்கி அந்த மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் மனு தாக்கல் செய்து, தேர்தலை சந்திக்கின்ற வகையிலே, அங்கே செய்தார்.

காஷ்மீர், குஜராத் என்று சொன்னார். அங்கே மனுக்கள் தாக்கல் செய்வதற்கு அங்கேயிருக்கின்றவர்கள் முன்வருகிறார்கள். அங்கே பாதுகாப்பு கொடுத்து தேர்தல் நடத்தப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் அப்படியில்லையென்று சொன்னார். இங்கே, 12,618 கிராம ஊராட்சிகளை எடுத்துக்கொண்டோம் என்றால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்கள் உள்ளாட்சி அமைப்புகளிலே வார்டு உறுப்பினர்களாக, ஆதிதிராவிட பெண்கள் 6,610 பேர். ஆதிதிராவிடர் பொது 13,091 பேர். ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆதிதிராவிட பெண்கள் 1,104 பேர். ஆதிதிராவிடர்கள் பொது 1,855 பேர். அதேபோல ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஆதிதிராவிட பெண்கள் 536 பேர். ஆதிதிராவிடர்கள் பொது 833 பேர். அதேபோல ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஆதிதிராவிட பெண்கள் 31, ஆதிதிராவிடர்கள் பொது 45, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆதிதிராவிடர் பெண்கள் 54, ஆதிதிராவிடர்கள் பொது 85. மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் ஆதிதிராவிடர் பெண்கள் 3, ஆதிதிராவிடர்கள் பொது 4, இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் தேர்தல் நடத்தி, நல்ல முறையிலே செயல்படுகின்ற வகையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், இந்த 4 பஞ்சாயத்துகளுக்கு மட்டும் தேர்தல் நடத்தக்கூடாது என்ற எண்ணம் கிடையாது. (மேசையைத் தட்டும ஒலி) அந்த மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, அங்கே தேர்தலைச் சந்திக்கின்ற வகையிலே, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, அங்கே மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் மூலமாக எல்லா வகைகளிலும்





நடவடிக்கை எடுத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான், ஒவ்வொரு இடைத் தேர்தலும் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–55*

அந்த ஐந்தாண்டுக் காலத்திலே, ஒரேயொரு இடைத் தேர்தலிலேகூட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே யாரும் ஒரு மனுகூட தாக்கல் செய்யவில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிக்கு வந்த பிறகுதான், அந்த மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, அங்கே செயல்படுத்துகின்ற வகையிலே, செயல்படுத்தியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் சொன்னதைப்போல, அங்கே இருக்கிறவர்கள் மனு தாக்கல் செய்வதற்கு முன்வரவில்லை என்றால், அதற்கு யார் என்ன செய்ய முடியும்? மற்ற பாதுகாப்புகள், அவர்களுக்கு ஏதேனும் பாதுகாப்புகள் கொடுக்கப்படாமல் இருந்துவிட்டதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி அவர்கள் வருவதற்கு வாய்ப்பு இல்லையென்றால், அந்தப் பகுதியிலே சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதியெல்லாம் தடை செய்ய வேண்டுமென்று சொன்னார். அப்படிச் செய்வதற்கு இயலாது. அங்கே இருக்கின்ற மக்களைப் பாதுகாக்கின்ற அரசு, அப்படிச் செய்யவும் முடியாது. ஆகவே, தனி அலுவலர்களை நியமனம் செய்து, அந்தப் பகுதிக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் அரசினுடைய கடமை. அதைத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் செய்துகொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு விவாதத்திற்கு வந்த நேரத்தில், இது யாருக்கும் தனிப்பட்டவர்களுக்காக அல்ல; பொதுவான ஒரு சட்டம் என்ற முறையில் ஒரு சட்டம்; யாருக்கும் உள்நோக்கம் கிடையாது; யாரோ ஒரு தனி அதிகாரிக்கு என்று கிடையாது; பதவி நீட்டிப்பு கிடையாது என்று தாங்களும் சொன்னீர்கள்; மற்றவர்களும் சொன்னார்கள். ஆனால், இந்தத் துறை மாண்புமிகு அமைச்சர், இதிலே நாங்கள் அந்த அதிகாரிக்குப் பதவி நீட்டிப்புக் கொடுப்பதிலே என்ன தவறு என்று கேட்டு, ஆக யாருக்கு என்பதை வெளிப்படுத்தினார். எனவே பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது. அமைச்சருக்கு நன்றி.

[2005 செப்டம்பர் 29

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரிக்குப் பதவி நீட்டிப்பு என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற மாநிலங்களையெல்லாம் அவர் உதாரணத்திற்குச் சொன்னார்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** 62 வயது நிறைந்தவர்களுக்கு, வயது வரம்பைத் தளர்த்துவதிலும், பதவி நீட்டிப்புத் தருவதிலும் தவறில்லை என்றுதான் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுச் சொன்னேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அதைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** அதற்கும் நன்றி. அமைச்சருக்கு நன்றி. அதாவது, அந்த அதிகாரிக்குப் பதவி நீட்டிப்புத் தரமாட்டோம் என்று சொன்னார், சட்டமன்றத்தில். அதற்கும் நன்றி. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயது வரம்பைத் தளர்த்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். வயது வரம்பே கிடையாது. 70 வயதானால்கூட அதிலே இருக்கலாம். இந்தியாவிலே, எங்கேயாவது அப்படி இருக்கிறதா? ஒன்று. இரண்டாவது...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே வேண்டாம். அவர் சொல்லிவிட்டார்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, முன்பு... (குறுக்கீடு)

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** ஒரேயொரு விஷயம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள், உட்காருங்கள்.

### (ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "11-7-2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு



2005 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

அவசரச் சட்டம் எண் 2/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்கின்ற திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வ்ாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின், "2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு



(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 செப்டம்பர் 29

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-00

## (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "2-9-2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்கிற திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின், "2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை



2005 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு எண் 18/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தச் சட்டமாக இருந்தாலும், சட்டமன்றத்தின் ஒப்புதல் இருந்தால்தான் அது சட்டமாக வரமுடியும். சட்டமன்றம் அமர்வில் இல்லாதபோது ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் அது காலாவதியாகிவிடும். அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 213–ல் இது விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. என்ன இது? என்ன Point of Order இது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)





**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. அதைத்தான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம், நன்றி.

*பின்னர், பேரவை பிற்பகல் 1–02 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*33. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–அலுவல் ஒழுங்கு முறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/CBR/1/2 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

34. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–மாநில ஆலோசனைக் குழு ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/SACR/2/2 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

35. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–கலந்தாய் உரைஞர்களின் நியமன ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/ACR/3/2 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/Regulations/F&F/4/2 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்கு முறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/CGR & EO/6/1 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

38. 2003–2004 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



39. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (வருவாய் வரவினங்கள்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

40. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (சிவில்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

41. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (வணிகம்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

42. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்மீதான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

43. தமிழ்நாடு அரசின் 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

44. தமிழ்நாடு அரசின் 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதி நிலைக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

36. 1997 முதல் 2001 வரை கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் செய்த சில ஊழல்கள், முறைகேடுகள் மற்றும் சீர்கேடுகள் குறித்த அறிக்கை. (தமிழ்)

xxxx

186284
600 009